குடும்பத்துடன் களிக்க...

# கல்கி

KALKI
10.7.2005 ரூ.6.00
96 பக்கங்கள்




## இசை ஞானியின் தவ வேள்வி!



## “அசராமல் தண்ணியடிக்கலாம்!”

– அதிர்ச்சி பில்ஸ்!

# வியக்கவைக்கும் ரிசப்ஷன் சில்க்

உங்களைப் போலவே உங்கள் ரிசப்ஷன் புடவையும் விசேஷமானதாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டாமா? ஆரெம்கேவி வழங்கும் அபூர்வமான ரிசப்ஷன் புடவைகளை அணிந்து உங்கள் அழகை பேரழகாய் காட்டுங்கள்.



அரிய கைவினைத் திறன் வேலைப்பாடுகள் கொண்ட கிரேப், ஜார்ஜெட், ஷிஃபான், நெட் ஆகியவற்றில் வியக்க வைக்கும் ரிசப்ஷன் பட்டுகள்.

RmKV
முகூர்த்தப் பட்டுகள்

இன்றைய மணமகளுக்கு

பனகல் பார்க், சென்னை Ph 044 - 281 44445 | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி Ph 0462 - 2333105 | www.rmkv.com

Mudra South: RmKV: 7317: 06



• விழா மேடையில்...

# இசைஞானியின் தவ வேள்வி!

திருவாசகம்! எப்பொழுது வெளிவரும் எப்பொழுது வெளிவரும் என்று இசைப் பிரியர்கள் கையைப் பிசைந்துகொண்டு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இளையராஜாவின் திருவாசகம், இதோ வெளிவந்து விட்டது! தமிழிசைக்கும் மேற்கத்திய இசைக்கும் இடையே இனிதே டும் டும் டும் நிகழ்த்தி விட்டு, அமைதியாக நிற்கிறார் இளையராஜா.

ஆனால் அமைதியைக் கிழித்துக் கொண்டு கிட்டத்தட்ட ஊர்த் திருவிழாவைப் போல அமர்க்களமாக மியூசிக் அகாடெமியில் சென்ற வாரம் திருவாசகம் சிடி வெளியீட்டு விழா நடைபெற்றது. பாவம் போலீஸார்! 'எங்க தலைவரை ஒரு தரம் பார்த்துட்டுப் போயிடறேன் ப்ளீஸ்' என்று கும்பல் கும்பலாக வெள்ளம் போல படையெடுக்கும் ரசிகர்களை, என்ன செய்வதென்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

இளையராஜா, வை.கோ, ரஜினி, கமல், பாரதிராஜா, பாலமுரளிகிருஷ்ணா, பீட்டர் அல்போன்ஸ் என்று ஒவ்வொரு ரசிகருக்கும் ஒவ்வொரு மானசிகத் தலைவர். ஆனால் அழைப்பிதழ் கொண்டு வந்தவர்களுக்குக் கூட அரங்கத்தில் நிற்க இட








மில்லை. அரங்கத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்த இரண்டு ராட்சசத் திரைகளை ஒரு காலில் நின்றபடி பார்ப்பதற்குக்கூட இடமில்லை. பாய்ந்து வரும் ரசிக வெள்ளத்தை மியூசிக் அகாடெமி எனும் சிறிய அமிர்தாஞ்சன் பாட்டிலுக்குள் அடைத்து வைத்து மூடி வைப்பது, உண்மையிலேயே பெரிய சவாலாகத்தான் அமைந்து போனது. சாலை ஓரங்களில்கூட கும்பல் கும்பலாக கூட்டம் தேங்கியிருந்தது.

திருவாசகத்திலிருந்து சில துளிகள் அரங்கத்தில் ஒலிபரப்பட்டபொழுது எழுந்து நின்று ஆர்ப்பரித்தது கூட்டம். "இசை வரலாற்றில் திருவாசகம் ஒரு சாதனை'' என்று அதிசயித்தார் அமைச்சர் ஜெயபால் ரெட்டி. ''இளையராஜாவின் திருவாசகம், மொழி, சாதி, இனம் போன்ற வரையறைகளைத் தாண்டி அனைவரையும் ஈர்க்கும் அற்புத இசைப் படைப்பு' என்றார் என். ராம். ''மிகுந்த சிரமப்பட்டு இந்தச் சாதனையை இவர் நிகழ்த்தியிருக்கிறார். ஆட்காட்டி விரலால் மௌஸைத் தட்டி இணையதளத்திலிருந்து இந்த இசையை இறக்குமதி செய்யாதீர்கள்'' என்ற நியாயமான கோரிக்கையையும் அவர் முன் வைத்தார்.

''சின்ன வயசிலியேயே ஏதாவதொரு கம்பியைக் கட்டி வைச்சுட்டு டொய்ங் டொய்ங்னு பாடிக்கிட்டிருப்பான். இப்ப பாருங்க! வெள்ளைக்காரங்களையே வச்சி சிம்பொனி பண்ணியிருக்கான் இந்த கறுப்பன்'' என்று சொல்லிச் சிரித்தார் பாரதிராஜா.

''ஒருவேளை என்னை மேடைக்கு கூப்பிடலேன்னா, வாசல் ஓரத்துல இருந்தாவது இந்த நிகழ்ச்சியைக் கட்டாயம் பார்த்திருப்பேன்'' என்றார் கமல். இப்படி ஒவ்வொருவராக புகழ் மழையில் நனைக்க, நொடிக்கொரு தரம் கண் கலங்கினார் இளையராஜா.

அட ரஜினியா இவர்? கிட்டத்தட்ட குட்டி கிருபானந்தவாரியாராகவே மாறிப் போயிருந்தார் அவர். ''திருவாசகத்தைப் பத்தி யோசிச்சேன். திருவாசகம்ன்றது என்ன? கடவுள்ளைப் புகழ்ந்து பாடின பாடல்கள். நம்மளை யாராவது புகழ்ந்தாலே நமக்கு பயமாயிருக்கும். இதுல கடவுளைப் புகழ்ந்தா அவருக்கு எப்படி இருக்கும்? இந்தப் புகழ்ச்சியை விரும்பறவர் உண்மையான கடவுள்தானா? யோசிச்சுப் பார்த்தா ஒரு உண்மை தெரிஞ்சது. குழந்தைங்க இருக்காங்க. அவங்களை நாம அலங்கரிச்சு விடறோம். எதுக்காக? குழந்தைங்க சந்தோஷப்படறதுக்கா? இல்லையே! நமக்கு தானே சந்தோஷம்? அதேமாதிரிதான் கடவுளைப் பத்தி பாடறதும், மாணிக்க

வாசகர் போன்ற அற்புத மகான்கள் கடவுளை அடையறதுக்காகப் பாடலை, கடவுளை அடைஞ்சதுக்கு அப்புறம்தான் பாடினாங்க" என்றார். அவ்வளவுதான்! ஒரே விசில் மழை! அரங்கத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த திரையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர் ரசிகர்கள்.

ஒரு சுவையான தகவலைப் பகிர்ந்து கொண்டார் ரஜினி. 'ரஜினி அங்கிளைப் பார்க்க வேண்டும்' என்று அமெரிக்காவில் வசிக்கும் ஒரு சிறுவன் அடம் பிடித்ததானாம். ரஜினியும் 'சரி வா' என்று கடிதம் எழுதிப் போட, மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் பெற்றோர்களை அழைத்துக் கொண்டு ரஜினியின் வீட்டுக்கு அவன் வந்திருக்கிறான். ரஜினி அவனோடும் அவன் பெற்றோருடனும் நீண்ட நேரம் பேசினாராம். கடைசியில் அந்தச் சிறுவன், 'எல்லாம் சரி, ரஜினி அங்கிள் எங்கே?' என்று கேட்டிருக்கிறான். "ஐய்யய்யோ நான்தான்ப்பா ரஜினி'' என்றாராம் ரஜினி. ஒருமுறை அவர் 'தோற்றத்தை' ஏற இறங்க பார்த்த பொடியன், "நோ, நோ நீங்க ரஜினி இல்லை, நீங்க ரஜினியோட டாடி. என்னை ஏமாத்தறீங்க" என்றானாம். "சரி சாயந்திரம் வா" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டு, அவசர அவசரமாக மேக்-அப் மேனை வரவழைத்து மீண்டும் ரஜினியாக மாறினாராம் 'ரஜினியின் டாடி!'

பலத்த கைத்தட்டலை பெற்றுச் சென்றார் வை.கோ. "நான் இளையராஜாவோட விசிறி'' என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார் அவர். பீதோவன், மொசாரர்ட், பைபின், பைஸான்டியம், பாரதிதாசன், சிம்பொனி, தமிழிசை, பண்டைய தமிழர்கள் உபயோகித்த யாழ் வகைகள், இசைக் கருவிகள் என்று இசை வரலாற்றின் எந்த முக்கியச் சுவடையும் வை.கோ விட்டு வைக்கவில்லை. எல்லாத் தகவல்களும் அவர் சுண்டுவிரல் நுனியில் படுத்துக்கிடந்தன போலும். கிட்டத்தட்ட ஒரு இசைப் பேராசிரியர் வகுப்பெடுத்தது போல் அமைந்தது அவர் பேச்சு. வை.கோ பேசி முடிக்கும் வரையில் ரஜினியும், இளையராஜாவும் கைத்தட்டுவதை நிறுத்தவேயில்லை.

"காற்றின் அலைகள் நீடித்திருக்கும் வரை திருவாசகம் நிலைத்திருக்கும்'' என்றார் வை.கோ. 'அது உண்மைதான்' என்று ஆமோதித்தன, காற்றில் மிதந்து கொண்டிருந்த சிம்பொனி அலைகள்.

**- மருதன்**

அட்டைப்படம், படங்கள்: **யோகா**


**கல்கி**

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
அச்சிட்டு வெளியிடுபவர் :
**கி. ராஜேந்திரன்**

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
**சீதா ரவி**

ஆசிரியர் குழு :
**அனுராதா சேகர்**
**ஆர்.சி. ஜெயந்தன்**

வடிவமைப்பு :
**எஸ். ஸ்டீஃபன்**
**பி.ஆர். ராஜன்**

தொலைபேசி :
**22251522, 22250623, 22251324**

தொலைநகல் :
**044 - 22251021**

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
**ஒரு வருடம் : ரூ.330/-**
**ஆறு மாதம் : ரூ.165/-**
வெளிநாடு (விமானத்தபால்) :
**ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்**
**இலங்கை : ரூ.2000/-**

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

**ஒவ்வொரு நிறமும் உங்கள் மேன்மைக்கு**

# அன்று அம்மா!



| அம்மா! (சூடு படும்முன்) | அம்மம்மா! (சூடுபட்டபின்) |
|---|---|
| அஞ்சாயிரம் ரூபாய்க்கு மேல மாச சம்பளம் இருந்தா இனிமே கௌரவ ரேஷன்! இதுதான் என்னோட புது ஃபேஷன்! | ஏழை பாழைங்க கஷ்டப்படக் கூடாதுங்கற காஷன் தோணினதுனால, வேஷத்தைக் கலைச்சுட்டேன். இனிமே நோ கௌரவ ரேஷன்! |
| முந்தைய ஆட்சி கொண்டு வந்த திட்டங்கள் டோட்டல் வேஸ்ட்டு. உழவர் சந்தை, அண்ணா மறுமலர்ச்சி திட்டம் எல்லாத்துக்கும் உடு ஜூட்டு! | எல்லாத் திட்டத்தையும் அ.இ.மு.க. பேக்கேஜ்ல போட்டு, தரப்போறேன் ஸ்வீட்டு. அள்ளிக்கோங்க முந்திக்கிட்டு! |
| கஜானா காலி. பஸ், பால், மின்சார ரேட்டை ஏத்து. தாங்கினாத்தான் மக்கள் சமர்த்து! | ரொம்பிடுச்சு கஜானா. பெட்ரோல் விலை உயர்ந்தாலும் பஸ் டிக்கெட்டை ஏத்த மாட்டேன் நிஜமா. இலவச மின்சாரத்தைப் பிடிங்க விவசாயிங்களே அம்சமா! |
| இந்துக்களை யாரும் மதம் மாற்றக் கூடாது. மீறினா வச்சுடுவேன் உள்ள. | யப்பா கண்ணுங்களா! நீங்க யாரு வேணா, என்ன மதத்தை வேணா பின்பற்றுங்க, தொங்குங்க. வோட்டை மட்டும் பார்த்துப் போடுங்க சாமீ! |

| | |
|---|---|
| முந்தைய ஆட்சியே வேணா ம்னு நினைச்சுட்டாங்க மக்கள். நீங்க மட்டும் எதுக்கு? கிளம்புங்க சாலைப் பணியாளர்களே! | எதிர்க்கட்சிக்காரங்கள இருக்கச் சொல்லுங்க சைலண்டா! அம்மாவுக்கு மாறுங்க ஒபீடியண்டா! |
| ஆடு, கோழி அறுக்காதே! சட்டம் உன்னை வறுத்துடும்! | அரிவாளை தீட்டிக்கோ... ஆடு, கோழிய வெட்டிக்கோ! |
| வேலை நிறுத்தம் வேண்டாம். எஸ்மா, டெஸ்மா பாயும்! | எஸ்மா, டெஸ்மா, புஸ்மா! |
| கன்னா பின்னான்னு எழுதினா போடுவேன் கேஸு! என்னை எதிர்க்கறவன் தூசு! | நோ கேஸு... எல்லாம் ஃப்ப்ளூக! மீடியா எனக்கு ஃப்ரெண்ட்ஸ்! |
| மாணவர்களா... நியூசென்ஸ்! போட்டுத் தாக்கு. அடக்கு! | கண்ணுங்களா... புடிங்க புடிங்க.. பஸ் பாஸ் ஃப்ரீ, சைக்கிள் ஃப்ரீ, புக்ஸ் ஃப்ரீ, எஜுகேஷன் ஃப்ரீ, யூனிஃபார்ம் ஃப்ரீ, எண்ட்ரன்ஸ் எக்ஸாம்லருந்தும் நீங்க ஃப்ரீயோ ஃப்ரீ! |

- ப்ரியன்



எல்லாக்கட்சி ஆபீசுங் களையுந்தான் தனித்தனியா ரவுண்டு அடிச்சாச்சே... இந்த வாரம் எல்லா ஆபீசையும் மொத்தமா சேர்த்து ஒரே ரவுண்டா அடிக்கலாம்னு ஐடியா பண்ணி, சாப்பாட்டு மூட்டையோட கிளம்பிட் டோம். சட்டுன்னு மேட்டர் தேறணும்னா, அதுக்கு ஒரே வழி சத்தியமூர்த்தி பவனுக் குப் போறதுதானே... சரின்னு அங்க போனா, கூட்டம் ஜெகஜ்ஜோதியா இருந்துச்சு. என்னா விஷயம்னா, அவங்க தலிவரு ஆபீசுக்கு வர்றாராம். நாம போன அன்னிக்கு டாக் ஆஃப் தி பவன் என்ன தெரியுமா...? அன்னிக்குக் கூடறதா இருந்த

• சேதுராமன்



• தனுஷ்கோடி ஆதித்தன்





# எரியும் நெருப்புல எண்ணெய ஊத்துறாங்க!

புதிய கமிட்டி உறுப்பினர்கள் கூட் டம் கேன்சல் ஆனதும், தனுஷ் கோடி ஆதித்தன் அம்மா நடத்துன விழாவுல கலந்துகிட்டதும்தான்.

இது பத்தி பேசிக்கிட்டு இருந்த கதர்காரரு சொல்றாரு, "இந்த மணி சங்கரு அய்யரை நாகப்பட்டினத் துல வச்சி துரத்தித் துரத்தி அடிச் சிது இந்த அம்மா. அதுக்கப்புறமும் இந்தாளு போயிருக்காருன்னா, ரொம்ப தெனாவட்டான ஆளு தாம்பா அவரு" என்று சொல்லி முடிக்க, "ஆமாமா! அந்தம்மாகிட்ட போயி கூழைக்கும்பிடு போட்டுட்டு, பம்மிப் பம்மி பேசுனதுக்கு அவரு போகாமலே இருந் திருந்தா நல்லாயிருந்திருக்கும். எனக்கென் னவோ இது எரியற நெருப்புல எண்ணைய ஊத்துன மாதிரிதான் இருக்கு!" என்று சலித் துப் பேசியபடி மற்றொரு கதர்ச் சட்டை நகர, நாமும் புறப்பட்டு தி.நகர் வண்டில ஏறி, பாண்டி பஜார்ல வந்து இறங்கினோம்.

கட்சியோட மாநிலத் தலைவரே கட்சி ஆபீசுக்குள்ள இருந்தாலும்கூட, மருந்துக்குக் கூட தொண்டர்கள் இல்லாம, காத்து வாங்குற ஒரு இடம் இருக்குதுன்னா, அது அநேகமா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஆபீசு தான். மெதுவா யார்கிட்டயாவது பேச்சுக் கொடுக்கலாம்னு உள்ள போனா, ரெண்டு மூணு பேரு மட்டும் சேர் போட்டு உட்கார்ந் திருந்தாங்க. அவங்களும் நம்மளை என் னவோ வேத்து கிரகத்து ஆசாமியைப் பாக் குற மாதிரி லுக் விட, இதெல்லாம் சரிப் படாதுன்னு வெளில வந்தா, ரெண்டு தோழர்கள் பேசிக்கிட்டே கட்சி ஆபீசுக் குள்ள வந்தாங்க. அப்படியே அங்க இருந்த திண்ணையில உட்கார்ந்து அவங்க பேசி னதை கவனிச்சோம்.

"ஏம்பா... டெல்லியில இனிமே கூட்டணி யோட ஒருங்கிணைப்புக் கூட்டத்துல கலந்துக்க மாட்டோம்னு நம்ம ஆளுங்க சொல்லிட்டாங்களே. அதனால இனிமே நாம மாசாமாசம் அறிவாலயம் போயி மீட்டிங் போட அவசியமில்லைதானே?" என்று ஒரு தோழர் அப்பாவியாகக் கேட்க,




படம் : ராஜன்

• காத்து வாங்கும் கட்சி ஆபீசு...



"க்கும்... அதை வச்சுக்கிட்டு அறிவாலயம் பக்கம் நாம போகாம இருந்தோம்னா, இங்க நம்ம டங்குவாரு அறுந்துப்புடும். சரி... சரி... எது பேசுறதா இருந்தாலும் உள்ள போயி பேசுவோம். எதுக்கு சிக்கல்ல மாட்டிகிட்டு" என்று அந்த அப்பாவித் தோழரை உள்ளே அழைத்துச் சென்றார், அந்த உஷார் தோழர். சரின்னு வண்டி ஏறி பசைல் பார்க் வந்து, அங்க வச்சி சோத்து மூட்டைய ஓபன் பண்ணி ரவுண்டு கட்டிட்டு, ஒரு குட்டித் தூக்கம் போட்டுட்டு, கிளம்பினா, வர்ற வழில நம்ம டமில் சேஃப்டி இயக்கத்துல இன்னொரு வைத்தியரு இருப்பாரே, அதாங்க டாக்டர் சேதுராமன், அவரோட கட்சி ஆபீசு தென்பட்டுச்சு. வந்ததுதான் வந்தோம். ஒரு எட்டு உள்ள போயிட்டு வரலாம்னு போனோம். சமீபத்துல இந்த வைத்தியரை கலைஞரு ஜாடைமாடையா திட்டியிருந்தாருல்ல? என்ன விஷயம் தெரியுமா? ஒரு நிருபர்கிட்ட இந்த வைத்தியரு, "வயசால மூத்தவரும், கேஸால மூத்தவரும் தமிழ்நாட்டை விட்டுப் போனபிறகுதான் எல்லாருக்கும் விடிவு காலம்"னு சொல்லிப் புட்டாராம். இது கலைஞரு காதுக்குப் போயிதான் டோஸ் விட்டுருக்காருன்னு அந்தக் கட்சி ஆபீசுல இருந்த ஒரு மஞ்ச சட்டைக்காரரு சொல்லிட்டு, "ஆமா... நீங்க மதுரைப் பக்கம் தானே...?" என்று நம்மிடம் கேட்க, நாமும், "ஹி... ஹி..." என்று வழிந்து சமாளித்தபடி கிளம்பினோம்.

**போ**யி ரொம்ப நாளாச்சே... லாயிட்ஸ் ரோட்டு பக்கம் தலைகாட்டிட்டு வரலாம்னு தோண, அடுத்த பத்தே நிமிஷத்துல நாம அ.தி.மு.க. ஆபீஸில் ஆஜர். ரத்தங்கள் ரொம்பவே குஷி மூடில் இருந்தார்கள். நாமும் குஷியாக இருப்பதுபோல முகத்தை மாற்றிக் கொண்டு, காதைத் தீட்டியபடி அங்கும் இங்கும் வலம் வந்தோம். கடைசியில் தான் குஷிக்கு காரணம் புரிந்தது. அதாவது அம்மா தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்துல கலந்துக்க டெல்லிக்குப் போனப்போ, இவங்ககிட்ட மத்த மாநில முதலமைச்சருங்க தானாவே வலிய வந்து பேசினது, ஷீலா தீட்சித் உள்ளிட்ட சில காங்கிரஸ் முதல்வர்கள்கிட்ட அம்மா உட்கார்ந்துகிட்டே கை குலுக்கினது பத்தி ரொம்பவே புல்லரிச்சுப் போயிருக்காங்க ரத்தங்கள். "இதெல்லாத்தையும் நாங்க கண் குளிரப் பார்க்க வச்ச அம்மா டீ.வி. (!)க்குத் தான் நன்றி சொல்லணும்" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார் அந்த அ.தி.மு.க. அனுதாபி. ஒரு வேளை இவர் அமைச்சர் பாண்டுரங்கன் ஊர்க்காரரோ! இருந்தாலும் இருக்கும்.

- ஒற்றன்

அதிர்ச்சி ரிப்போர்ட்

# அன்புமணி கவனிக்க...



ஆபாசமான அருவருப்பான எத்தனையோ விளம்பரங்களைப் பார்த்துப் பார்த்து மரத்தே போய்விட்டோம்தான். ஆனாலும் அந்த விளம்பரம் தடாலடியாக அதிர வைத்தது.

"சாயங்காலமானா, ஜாலியா தண்ணியடிச்சு வாழ்க்கையை அனுபவிக்கறீங்க. மறுநாள் ஏற்படுற, ஹேங் ஓவரால் எதுக்கு கஷ்டப்படணும்?

இதோ எங்க



* அன்புமணி

ப்ராடக்டைப் பயன்படுத்துங்க. தண்ணி அடிக்கிற அரை மணி நேரத்துக்கு முன்பு எங்கள் கேப்ஸ்யூலை எடுத்துக்கிட்டா போதும். அவ்வளவு தான். 'ஹேங்க் ஓவர்' பிரச்னையே இருக்காது. தலைவலி, தலைபாரம் வராது. அதேசமயம் கல்லீரலையும் பாதுகாக்கும். இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட இம்மருந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இதன் பலன்கள் நிரூபணமாகியுள்ளது."

'சுமான் என்ஜாய். நன்றாகக் குடியுங்கள்' என்கிற ரீதியில் இதுபோன்றொரு விளம்பரம் தற்பொழுது பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகிறது.

இன்றையத் தேதியில் குடிப்பழக்கத்தினால் இளைஞர் சமுதாயமே சீரழிந்து வருவதாக, சமூக அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் கவலையில் ஆழ்ந்து இதற்கு எதிராகப் போராடி வரும் இக்கால கட்டத்தில் "இது மூலிகைகளாலான மருந்து, நீ எவ்வளவு வேண்டுமானாலும் குடி. உன் பக்க விளைவுகளுக்குப் பக்கபலமாக என் மருந்து செயல்படும்" என்று வார்த்தைகளாலேயே போதையேற்றுவது அபாயகரமான அநியாயமில்லையா?

இதில் அதிர்ச்சியை ஏற்படுத்தும் விஷயம், இம்மருந்தை அறிமுகப்படுத்தியிருப்பது எழுபது ஆண்டுகளாக இந்திய மருத்துவத் துறையில் சேவை ஆற்றி வரும் உயரமான மலையின் பெயரைக் கொண்ட நிறுவனம் என்பதுதான்.

பேரும் புகழும் பெற்ற அந்நிறுவனம் இது போன்றொரு கண்டுபிடிப்பை நாட்டுக்கு அர்ப்பணிக்க (?) வேண்டிய அவசியம் என்ன வந்தது?

"எங்களிடம் வந்து, 'கல்லீரலில் ஏற்படும் நோய்களை அபாரமாகத் தீர்க்கிறீர்கள். அதேபோல, குடிப்பதனால் உண்டாகும் 'ஹேங்க் ஓவர்' எனப்படும் தலைவலி, தலைசுற்றல், வாந்தி... போன்ற உபாதைகளிலிருந்து விடுபடவும் ஏதாவது வழி செய்யுங்களேன்' என்று ஏராளமான குடிமகன்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாடு நலன் பெற, நாட்டு மக்கள் இன்புற, இதற்கென ஏழு வருடங்கள் ஆராய்ச்சி







# அசராமல் தண்ணியடிக்கலாம்!



## அபாய மாத்திரை பிசினஸ்!

செய்து முதன்முறையாக மூலிகை முறையில் ஓர் அற்புத மருந்தை நாட்டுக்காகக் கண்டுபிடித்துள்ளோம்" என்று பதிலளிக்கிறது அந் நிறுவனம்!

மேலும், "ஹேங்க் ஓவர் எனப்படும் பாதிப்புகளால் இங்கிலாந்து நாட்டில் வேலை நாட்கள் பாதிக்கப்பட்டு, ஏழு பில்லியன் பவுண்ட்ஸ் நஷ்டமானது. இந்தியாவில் இதுபோன்றொரு நஷ்டம் ஏற்பட வேண்டுமா?" என்று கவலையோடு கேள்வி எழுப்புகிறது அந்நிறுவனம்!

தனது அரிய கண்டுபிடிப்புப் பற்றி இணைய தளத்திலும் பத்திரிகைச் செய்திகளிலும் கூறுகையில், 'குடிப்பதனால் உண்டாகும் பாதிப்புகளைப் போக்குவதற்காக ஒரு யுனிவர்சிட்டியில நூறு பேருக்கும் மேலாக பரிசோதனை செய்யப்பட்டு மார்க்கெட்டில் விடப்பட்டுள்ளது' என்கிற தகவலையும் தெரிவித்திருக்கிறது.

நன்று. இவர்கள் சொல்வதில் எத்தனை சதவிகிதம் உண்மை அடங்கியிருக்கிறது? மருத்துவ வட்டாரங்களுக்குள் நம் சந்தேகங்களை எழுப்பினோம்.

ஹெர்பல் ப்ராடக்ட் எனப்படும் இந்திய மூலிகைகளைக் கொண்டு குடிப் பழக்கத்தின் பாதிப்புகளைக் களைய முடியுமா?

அப்பல்லோ மருத்துவமனையின் இயற்கை மருத்துவப் பிரிவின் (ஆயுர் வேதா) தலைமை மருத்துவர் பாபி க்ளாட்ஸ் டோன் திட்டவட்டமாக இதன் கூற்றை மறுத்தார்.

"இது மூலிகைகளாலான மருந்து என்று அறிவிக்கப்பட்டால், அது நிச்சயம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதாக இருக்க வேண்டும். ஆயுர்வேதம் போன்ற தேவ மருத்துவம் ஒரு போதும் குடிப் பழக்கத்தை ஊக்குவிப்பது கிடையாது.

'Clinically Proven' என்று அவர்கள் வாதிட்டாலும், இந்திய அரசாங்கம் இது வரை மூலிகை மருத்துகளுக்கென விதி முறைகள் எதையும் நிர்ணயிக்கவில்லை. இங்கு மருத்துவர்களுக்குத்தான் கட்டுப் பாடுகள் உண்டே தவிர, மருந்துகளுக்குக் கிடையாது. இதுபோன்ற கண்டுபிடிப்புகள் சமுதாயத்தைச் சீரழிக்கக் கூடியது" என்று படபடத்தார்.

மருந்து அட்டைகளில் இந்த 'Clinically Proven' என்கிற வாசகம் இருந்தாலே அது சட்டென்று மருந்து மீதான நம்பிக்கையை ஏற்படுத்தி விடும். ஆனால் இதிலுள்ள வேதனையான விஷயம், இந்திய மருத்துவத்துறை, இயக்குனரகம், இதற்கு விதித்துள்ள சட்டங்கள் என்ன தெரியுமா? அம்மருந்தைப் பரிசோதனை செய்ததாக இரு மருத்துவர்களின் சான்றிதழ் தேவை, மருந்தைத் தயாரிக்கப் போதுமான 1200 சதுர அடியுள்ள ஓர் இடம் தேவை, என இதுபோன்ற சுலபமான விதிமுறைகள்தான்.

'ஒரு கேப்ஸ்யூலுக்குள் சாக்பீஸ் தூளை அடைத்துக் கொடுத்தால்கூட, காசுக்காக ஆசைப்படும் சில டாக்டர்கள், அதற்குத் தரச்சான்றிதழ் (!) அளித்து அரசாங்கத்துக்கும் பரிந்துரைப்பார்கள்' என்கிற பீதியூட்டும் உண்மையையும் நம்மிடம் சில மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த மருந்தோ புத்திசாலித்தனமாக Over the counter (OTC) ப்ராடக்ட் என்பதின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டியதில்லை. மருத்துவர்களின் கட்டாயப் பரிந்துரையும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"குடிப்பதனால் ஏற்படும் ஹேங்க் ஓவரை தடுக்க ஸ்பெஷல் மாத்திரை அறிமுகப்படுத்துவது சரியா?" என்று சென்னை மருத்துவக் கல்லூரி பேராசியரும், மனநல மருத்துவருமான டாக்டர் சத்தியநாதனிடம் கேட்டோம். அவரும் இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் பதறி விட்டார்.

"அலோபதியில் கூட Disul Firum என்கிற மாத்திரையை மதுப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பரிந்துரை செய்வோம். இதனை உட்கொண்டு மது அருந்தினால்

"அந்த இன்ஸ்பெக்டர் எதுக்காக கபாலி கால்ல போயி விழறாரு?"

"அவன் திருந்தி வாழப் போறதா மிரட்டினான்"

- அஜித்வால்





"என்ன தைரியமிருந்தா 'ஓட்ட' பிரிச்சு திருடியிருப்பே?"

"அரசியல்வாதி வீட்ல அப்படி திருடறதுதானுங்களே நியாயம்?"

- வே. ஆறுமுகம்



* டாக்டர் முரளி



* டாக்டர் பாபி

கடுமையான பின்விளைவுகள் ஏற்படும் என்பதால், இதற்கு பயந்தே மதுவிலிருந்து தங்களை மீட்டெடுத்துக் கொள்வார்கள். இப்படி குடிப்பழக்கத்தைத் தடுப்பதற்காக எதிர்மறையாக மருந்துகள் கண்டுபிடிக்கப் படலாமே தவிர, அதை ஊக்குவிக்கக் கூடாது. இதுபோன்ற மருந்துகள் நிச்சயம் தடை செய்யப்பட வேண்டும்" என்றார்.

ஒரு கேப்ஸ்யூல் பத்து ரூபாய் என்று விற்கப்படும் இம்மருந்து பற்றிய விளம் பரம், கடந்த ஆறு மாத காலமாக ஆங் கிலப் பத்திரிகைகளிலும், விமானப் பயணங்களுக்கென்று அச்சடிக்கப்படும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுகிறது. இது பற்றிய கருத்தை அறிய சில குடி மகன்களிடம் சென்றபோது, அனைவரும் இதனை ரத்தினக் கம்பளம் விரித்து வர வேற்பதாக குஷியுடன் கூற, நமக்கு பகிரென்றது!

"மது அருந்துவதால் உடலுக்குள் செல்லும் ஆல்கஹால், கல்லீரலில் Acetaldehyde எனும் வேதிப்பொருளை உண்டாக்கி, பல பின் விளைவுகளை ஏற் படுத்துகிறது. ஆனால் இம்மருந்து, Acetaldehyde உருவாவதையே தடுக்கிறது என்று கூறப்படுகிறதே... இது சாத்தியமா?" என்று Gastroenterologist டாக்டர் முரளியிடம் கேட்டோம்.

"அலோபதியில் Clinically proven என்றால் அதை அடைய பல வழிகள் உண்டு. அமெரிக்காவிலெல்லாம் அச்சான் நிகழ் பெற பத்து வருடங்கள் கூட ஆகும். ஆனால் இங்கு மூலிகை மருந்துகளுக்கு எந்த வரை முறையும் கிடையாது என்பது வருத்தமான விஷயம்" என்றார். "கல்லீர லைக் (Liver) காப்பதாகச் சொல் கிறார்கள். இது வெறும் வீண் பேச்சு. குடிப்பதனால் உடலுக் குள் ஆல்கஹால் செல்வதால் முத லில் கல்லீரல் பலவீனமாகும். அதன்பின் கறுப்பாகி விடும். இதனால் கல்லீரலில் ரத்த ஓட்டத் தைக் குறைத்து ரத்த வாந்தியை ஏற்படுத்தும். நாளடைவில் fatty liver, alcoholic hepatitis, liver cancer போன்ற கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகும். இதைப் பற்றி இத் தனை விஷயங்கள் இருக்கும் போது, மதுவும் அருந்தி, அதனால் Acetaldehydeம் தடுக்கப்பட்டு கல்லீரல் பாதுகாக்கப்பட் டால், அம்மருந்தைக் கண்டுபிடித்தவருக்கு நோபல் பரிசுதான் தர வேண்டும்" என் றார் காட்டமாக.

இந்த மாத்திரையில் கல்லீரல் பாது காக்கப்படுகிறது என்றே வைத்துக்கொள் வோம், மதுவின் விளைவாக மூளையில் ஏற்படக்கூடிய சிதைவுகள் தடுக்கப்பட முடியாதவை. மருந்துண்ட ஜோரில் மக்கள் மேலும் நாலு ரவுண்ட் குடித்து விட்டு போதையில் தள்ளாடி, உள றிக்கொட்டி சுயகௌரவமும் சுயப் பிரக்ஞையையும் இழப்பதைத் தவிர்க்க முடியாது.

அணு ஆயுதம், தீவிரவாதம், வேலை யின்மை, இனக்கலவரம் போன்றவைதான் ஒரு நாட்டை அச்சுறுத்தும் விஷயங்கள் என்று இல்லை... இதுபோன்ற தவறான விளம்பரங்களும் தீயசக்திகளே. இந்திய சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி நாள்தோறும் மதுவினால் உண்டாகும் பாதிப்புகளை மேடைகளில் முழங்கி வருகிறார். திரைப்படங்களில் மது அருந் தும் காட்சியைக் கண்டிக்கிறார். மதுபான விளம்பரங்களைத் தடை செய்வதாக சொல்லியிருக்கிறார். திரைப்படங்களில் சிகரெட் புகைக்கும் காட்சிகளைத் தடையே செய்துவிட்டார். அவர் கண்ணி லிருந்து இப்படியொரு விளம்பரம் எப் படித் தப்பித்தது?

இனியாவது நடவடிக்கை எடுப்பாரா அன்புமணி?

- ச.ந.கண்ணன்

# வாழ்க நலமுடன்

ஆகஸ்ட் முதல் வாரம் வெளியாகிறது







# கல்கி மருத்துவ மலர் 2005



லேட்டஸ்ட் மருத்துவத் தகவல்களை அழகான கேப்ஸ்யூலாக்கித் தந்திருக்கிறோம்... ஸோ இன்ட்ரஸ்டிங்! வெரி யூஸ்ஃபுல்!

விலை ரூ.25/- மட்டுமே

## சந்தாதாரருக்குப் பரிசு!

'கல்கி' பத்திரிகைக்கு ஆறு மாதச் சந்தா ரூ.165/- கட்டினால் ரூ.25/- பெறுமானமுள்ள **கல்கி மருத்துவ மலர் - 2005** இலவசம்! முந்துங்கள். உடனடியாகச் செயல்பட்டா, 'அடடா... மிஸ் ஆயிடுச்சே'னு ஏமாறாம இருக்கலாம். ஏற்கெனவே, எங்களோட நேரடி சந்தாதாரராதான் இருக்கீங்களா! நோ ப்ராப்ளம்! ஆறு மாத சந்தாத் தொகையை அனுப்பி, உங்கள் சந்தாவை நீடிக்கச் செய்து பரிசைப் பெறலாம்.

**கடைசி தேதி: ஜூலை 15, 2005**




## நுழைவுத் தேர்வும் நீதிமன்றத் தீர்ப்பும்

பொது நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்த தமிழக அரசின் அவசர அதிரடி நடவடிக்கையை, உயர் நீதிமன்றம் விரைந்து ரத்து செய்தது வரவேற்கத்தக்கதே. உச்சநீதி மன்றத்தின் ஆமோதிப்பும் இந்த நடவடிக்கைக்குக் கிடைத்தால் மேலும் மகிழலாம்.

தமிழக அரசை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்த மாணவர் குழுவுக்கு முதல் பாராட்டு உரியது.

மருத்துவ, பொறியியல் கல்விக்கான நுழைவுத் தேர்வுகளைத் தனியே நடத்துவதில் மிகுந்த அர்த்தமும் அவசியமும் இருக்கிறது. அரசியல் காரணங்களுக்காக தமிழக அரசு அதில் தலையிட்டு, உயர்நீதிமன்றத்தால் குட்டப்பட்டது.

ஆனால், இதன் விளைவான பாதிப்பு யாருக்கு என்று பார்த்தால், மாணவச் செல்வங்களுக்குத்தான். நுழைவுத் தேர்வை எழுதிய ஏராளமான மாணவர்கள் அதனால் பயனில்லை என்று அல்லாட வேண்டிய நிலைமை முதலில் உருவாயிற்று. அடுத்து, நுழைவுத் தேர்வில் தேர்வதும் அவசியமில்லையென்ற நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, பல்லாயிரம் மாண வர்கள் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளுக்கு நம்பிக்கையோடு விண்ணப்பித்தனர். உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு, இந்த மாணவர்களின் பாடு கேள்விக் குறியாகிவிட்டது.

இவ்வளவு குழப்பம் ஏற்படுத்தியது போதும்; உயர்நீதிமன்ற




கல்கி



2005 ஜூலை 10
பார்த்திப ஆனி 26
மலர் : 63
இதழ் : 50


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




தீர்ப்பை ஏற்று, விவகாரத்தை இத்தோடு விட்டுவிடலாம் என்று பேசாதிருந்திருக்கலாம். தமிழக அரசு அப்படி அல்லாமல், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறது. இவ்வாண்டு கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள வேண்டிய தமிழக மாணவர்களின் நிலை மீண்டும் திரிசங்கு சுவர்க்கமாகிவிட்டது.

பிற்படுத்தப்பட்ட, நலிந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதாக எண்ணிக் கொண்டுதான், நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்தது தமிழக அரசு. அந்த நடவடிக்கை, மருத்துவ - தொழில் நுட்ப கல்வித்துறை விதிகளோடு ஒத்துப் போகவில்லை. மேலும், இந்த நடவடிக்கை நலிந்த பிரிவினருக்கு உதவுவதற்குப் பதில், அவர்களைச் சங்கடத்துக்குத்தான் உள்ளாக்கும்.

அப்பிரிவைச் சேர்ந்தவர்கள், பொறியியல், மருத்துவம் பயில திரண்டு வர வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் கடினமான அந்தக் கல்விமுறைகளை ஏற்றுச் சமாளிக்க, தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டு வர வேண்டும் என்பதும் முக்கியம்.

தமிழக அரசு விரும்பினால் இந்த நலிந்த பிரிவு மாணவர்களின் தகுதியை விரைந்து உயர்த்தலாம். அவர்களின் ஆங்கில அறிவு, பொது அறிவு மேம்படவும், நுழைவுத் தேர்வுகளில் அவர்கள் பிறரோடு சமபலத்துடன் போட்டியிடவும், குறைந்த செலவில் அல்லது இலவசமாகப் பயிற்சி மையங்கள் நடத்த வகை செய்யலாம்; தன்னார்வ அமைப்புகள், என்.ஜி.ஓக்களைக் கொண்டும் இவற்றை நடத்தச் செய்யலாம்.

(இப்போதும்கூட, இப்பிரிவைச் சேர்ந்த பல மாணவர்கள் சிறந்த மதிப்பெண் பெற்று, மேலும் உழைத்து, ஊக்கமும் பெற்று, மருத்துவ - பொறியியல் படிப்புகளில் சிறந்து விளங்குகிறார்கள்.)

இவ்வாறு மாணவர்களை மேம்படுத்துவதை விட்டுவிட்டு, மருத்துவ - பொறியியல் படிப்பில் நுழைவதை மட்டும் எளிமையாக்கினால், அவற்றில் இலகுவாக நுழைந்துவிடக்கூடிய மாணவ - மாணவியர், பிற்பாடு பாடங்களைப் படித்துத் தேர்ச்சி




பெற முடியாமல் அவதிப்பட நேரும். அப்போது தமிழக அரசு அவர்களுக்கு உதவப் போகிறதா? முதல்வர் முன்வந்து டியூஷன் ஏற்பாடு செய்வாரா?

சுயநிதிக் கல்லூரிகளைத் தாறுமாறாக இயங்க அனுமதித்து, மருத்துவ - பொறியியல் படிப்புகளை அரசு ஏற்கெனவே மிகவும் கொச்சைப்படுத்திவிட்டது. இப்போது அட்மிஷன் விதிமுறைகளில் வேறு தலையிடுகிறது. நாளை, கிராமப்புற மாணவர்களுக்கு உதவுகிறோம் என்று கூறிக்கொண்டு, கல்வித் திட்டத்தையே கலபமாக்குவதற்குக்கூட தமிழக அரசு முயற்சி செய்யலாம்! இவையெல்லாம் மாணவர்களின் தரத்தையும் உயர்த்தாது, கல்வியின் தரத்தையும் உயர்த்தாது! அரைவேக்காடு டாக்டர்களையும், இஞ்ஜினியர்களையும் உருவாக்குவது நாட்டுக்கு நல்லதல்ல.

தமிழக அரசின் எடுத்தேன் கவிழ்த்தேன் நடவடிக்கைகள் உலகப் பிரசித்தமாகிவிட்டன. முதல் இரு ஆண்டுகள் ஆட்சியில் ஜெயலலிதா அறிவித்த பல திட்டங்கள், விதித்த பல சட்டங்கள் இப்போது அப்படியே உல்டா செய்யப்பட்டுவிட்டன. இதனால் மக்கள் குழப்பத்துக்கும் சங்கடத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது இந்தக் குழப்பமும் சங்கடமும், மாணவ சமுதாயத்தையும் பற்றிக் கொண்டிருக்கின்றன. மாணவர்களை இவ்வாறு குழப்புவதால், அவர்களுடைய வாழ்க்கையின் மிக உபயோகமான ஒரு கால கட்டத்தை வீணடிக்கும் பாதகத்தை அரசு செய்ததாகிறது.

உயிரைக் கொடுத்துப் படிக்கும் மாணவர்களும் சரி, வாயைக் கட்டி - வயிற்றைக் கட்டிச் சிறுகச் சேர்த்து அவர்களைப் படிக்க வைக்கும் பெற்றோரும் சரி... நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

அவர்களைப் போட்டுப் பந்தாடாமல், அவர்களுடைய உண்மையான தேவைகளை அறிந்து சகாயம் செய்ய வேண்டும்; சிறந்த கல்விக்கான சம வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும்... கல்வியின் தரம் நீர்த்துப் போகச் செய்துவிடக் கூடாது! ○

# வட்டமேஜை




✉ சூர்யா தன் பர்சனல் டைரியில், தன் தாயைப் பற்றி சொன்னதைப் படித்தபோது, சினிமா நட்சத்திரங்களின் குடும்பத்திலும், ஏதோ ஒரு வகையில் உள்வலி இருக்கத்தான் செய்கிறது என நினைக்கத் தோன்றுகிறது.
தஞ்சாவூர்,
எஸ்.இளங்கோவன்

✉ இழுத்து முடித்தாரோ, அறுத்து முடித்தாரோ, எண்ணூறு எபிசோடுகளுக்கும் ஒரு தனிக் கூட்டமே தவம் கிடந்தது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.
திருநெல்வேலி,
எஸ்.ஆர்.ஸ்வாமி

## கிள்ளி... ஆட்டி... வெரி நாட்டி!

✉ வெள்ளிக்கிழமை வெளியான ‘அந்நியன்’ படத்துக்கு, செவ்வாய் கிழமையே விமர்சனம் வெளியிட்ட உம்முடைய சுறுசுறுப்பையும் சமூகப் பொறுப்புணர்ச்சியையும் பாராட்டுகிறேன்.
திருவண்ணாமலை,
என். சண்முகம்

✉ ரொமான்ஸைத் தாண்டி ஆத்மார்த்த அன்புக்கு அருமையான விளக்கம் அளித்துள்ளார் மணியம் செல்வன்.
மதுரை,
என்.பாலகிருஷ்ணன்

✉ ‘காஷ்மீர் கண்ணீர்’ தலையங்கம் ஆதங்கம் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த காஷ்மீர் மக்களின் உள்மனப் பிரதிபலிப்பாகவே அமைந்திருந்தது.
திருவாரூர்,
ரெ.இராமசுப்ரமணியன்

✉ கதைகளுக்கான படத்தை வரைந்தவர்களிடமே கதையைப் பற்றிய கருத்தைக் கேட்டிருப்பது புதுமை. அவை வாசகர்களின் கருத்தை எதிரொலித்தது அருமை!
லோயர் அணைக்கட்டு,
பி.இராஜேந்திரன்

✉ 96ம் பக்கத்தில் கல்கியைக் களிப்பதற்கான காரணத்தைக் கூறும் பிரபலங்களின் கருத்துகள், அவர் சார்ந்த துறைக்கேற்ற ரசனையுமாகவும் அமைந்து வருவது ரசிக்கத் தக்க அம்சம்!
நெய்வேலி,
சு.ஸ்ரீகாந்த்

✉ ஐஸ்வர்யா ராயின் செல் நம்பரைக் கொடுத்து விட்டு, எங்கள் முன், பின் பக்க விளைவுகளுக்கு நீங்கள் பொறுப்பல்ல என இறுதியில் எச்சரிக்கை விடுத்துள்ளீரே...? பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது குசும்புதானே?
தூத்துக்குடி,
வே.முத்துக்குமார்

✉ தீக்குச்சி தயாரிப்பில் ‘பொட்டாசியம் குளோரேட்டு’ என்ற வேதிப் பொருளைத் தான் பயன்படுத்துகிறார்கள். ‘தடைகளைத் தாண்டி..’ கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல பொட்டாசியம் குளோரைடு அல்ல!
சென்னை,
என்.கே.ஆராவமுதன்

**வாரம் ஒரு வாசகர்!**



✉ ஏற்கெனவே அத்வானி நொந்து போய்க்கிடக்கிறாரு! அதுக்கு மேலே பத்துக் கேள்விகள் கேட்டு தாக்குறீங்களே? இது நியாயமா?
சென்னை,
வே.முருகேசன்

ஆடியோ ரிவ்யூ

# பாட்டு கேட்டா பத்து மார்க்!



• கிரிஜா

எப்பப் பார்த்தாலும் நுழைவுத் தேர்வு, கட் ஆஃப் மார்க், அட்மிஷன் என ஏகப்பட்ட குளறுபடிகளில் மாட்டிக் கொண்டு விழிப்பதே வாடிக்கையாகிப் போன மாணவ மணிகளுக்கு ஒரு நல்ல சேதி! ஓர் ஆடியோ கேஸட் (சி.டி.யும் கூட) வந்திருக்கிறது. தமிழ்ப் பரீட்சையில் சுளையாக பத்து மதிப்பெண்கள் கூடுதலாக வாங்க உதவும் 'மனன மணிகள்' என்ற அம்சமான கேஸட்.

பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் உள்ள மனப்பாடப் பகுதியில் உள்ள செய்யுள்கள் அனைத்தும் முதன் முறையாக இசை வடிவத்தில் வந்திருக்கின்றன. இசையமைப்பு : கிரிராஜ், சாரதா ராஜன்.

"எப்படி வந்தது இந்த ஐடியா?" என்று 'வர்ணத்வனி' நிறுவனத்தின் தலைவரும், இந்தக் கேஸட்டில் உள்ள பாடல்களைப் பாடியவருமான கிரிஜா சுப்ரமணியத்திடம் கேட்டபோது...

"நான் அடிப்படையில் ஓர் ஆசிரியை. முறையாக இசை பயின்றவளும்கூட. எந்த விஷயத்தையும் இசை வடிவத்தில் தந்தால், 'பச்' என்று பதிந்து விடும் என்ற லர்னிங் டெக்னிக் அறிந்தவள். அது மட்டுமல்ல. வள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்ற சான்றோர்களின் சிந்தனைகள் பரீட்சை முடிந்ததும் மறந்து போகும் விஷயமாக இல்லாமல், என்றென்றும் மனசுக்குள் நிறைந்துக் கொள்ளும் இசைக் கோவையாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். அந்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது" என்கிறார் கிரிஜா.

மனப்பாடப் பகுதியில் உள்ள ஒவ்வொரு பாடலையும் ஓர் ஆண் குரல் நிறுத்தி நிதானமாக உச்சரிக்க, அதைத் தொடர்ந்து இசை வடிவில் தந்திருப்பது, பதப்பிரிவுகள் எப்படி அமைந்திருக்கிறதோ அதே முறையில் மெட்டு அமைத்திருப்பது, இளைஞர்களைக் கவரும் விதமாக கீ போர்டு, டிரம்ஸ், கிடார் போன்ற நவீன இசைக் கருவிகளைப் பயன்படுத்தியிருப்பது என பலவற்றையும் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறார்கள். கிரிஜா சுப்ரமணியத்தின் குரலில் அந்தக் கால பி. சுசீலாவின் இனிமையும், சுத்தமான உச்சரிப்பும் இருப்பது கூடுதல் சிறப்பு.

"அரசுத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களின் தமிழ் வகுப்பு நேரங்களில் தினமும் சில நிமிடங்கள் இந்த கேஸட்டை ஓட விட்டாலே போதும், நல்ல பலனிருக்கும். இதைக் கேட்ட ஆசிரியர்கள், மாணவர்களின் பாராட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழக முதல்வர் மனசு வைச்சா, மாணவர்களுக்கு அரசாங்கமே இலவசமாகத் தந்து தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கலாம்" என்கிறார் கிரிஜா.



- மினி

# "வீட்டுல யாரு?"



"பாட்டிம்மா, வீட்ல யாருமில் லையா?"

"எல்லாரும் வெளியில போயாச்சு! நா மட்டுந்தான் இருக்கேன். உள்ளே வாம்மா. உக்காரு. நீ எங்கே வேலை பண்ணுறே?"

"நா ஸ்கூல்ல டீச்சராயிருக்கேம்மா."

"ஒங்க வீட்டுக்காரரு..."

"அவரு வெளியூர்ல பாங்க்கில வேலை பார்க்கிறாரு!"

"கொழந்தைங்க இருக்கா?"

"ம்... ரெண்டு பேரு..."

"என்ன படிக்கிறாங்க?"

"பையன் நாலாவது பொண்ணு ரெண்டாவது"

"வீட்டுக்காரரும் வெளியூரு... நீ வேலை பார்க்கிறே. கொழந்தைங் களை யார் பார்த்துக்கிறாங்க?"

"க்ரெச்தான்"

"மாமியார், மாமனார், அம்மா, அப்பா, பெரியவங்க யாருமே இல் லியா?"

"பாட்டி! நான் சென்ஸஸ் எடுக்க வந்திருக்கேன். நீங்க உங்களைப் பத்தின விவரங்களைச் சொல் லுங்க"

- ரேவதி பாலு






# தேசப்பற்று, மொழிப்பற்று, ஆன்மிகப் பற்று!

"நான் மாணவர் காங்கிரசில் இருந்தபோதே ம.பொ.சியை அறிவேன். பல கூட்டங்களுக்கும் அவரைப் பேசக் கூப்பிடுவேன்!" என்கிறார் பூந்தமல்லியில் இருக்கும் வழக்கறிஞர் எஸ்.கே. பாலசுப்பிரமணியம்.

"1947லிருந்தே மொழிவாரி மாகாணம் வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் ம.பொ.சி. தேவிகுளம் - பீர்மேடு தமிழ்நாட்டோடு சேர, போராட்டம் நடத்தினார். திருவாங்கூரில் இருந்த தமிழ்ப் பகுதிகள் சேர, நேசமணிக்கு உறுதுணையாக இருந்தார்.

"ஆந்திர மாநிலம் 1952ல் பிரிந்தபோது, சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மென்னாக இருந்தவர் ம.பொ.சி. 'சென்னையையும் ஆந்திராவுக்கே கொடுத்துவிட வேண்டும்' என்று கோஷம் எழுந்தபோது அதை எதிர்த்து, நகரசபையில் ஏகமனதாகத் தீர்மானம் போட்டவர். இதில் அவருக்குப் பின்பலமாக இருந்தவர்களில் ராஜாஜியும், கல்கியும் முக்கியமானவர்கள். அப்போது ம.பொ.சி முன்வைத்த கோஷம்: 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'. அதில் அவர் வெற்றியும் கண்டார்.

"திருத்தணி தமிழ்நாட்டோடு சேரப் பாடுபட்டவர் ம.பொ.சி. அப்போதும், முதல்வராக இருந்த ராஜாஜியோடு, சுதேசமித்திரன், கல்கி, ஆனந்தவிகடன் போன்ற வார இதழ்களும், ம.பொ.சிக்கு ஆதரவு கொடுத்தன.

'ம.பொ.சி செய்த மிகப் பெரிய பணி, 'சுதந்திரப் போரில் தமிழகம்' என்ற இரண்டு பெரிய தொகுதிகள் கொண்ட நூலை எழுதியதுதான். அதற்கு நானும், அறிஞர் பெ.சு. மணியும் நிறைய தியாகிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொடுத்தோம். அரசாங்கமே செய்ய வேண்டிய பணியை, அவராகச் செய்தார். எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது இந்த நூல் அரசுடைமை ஆக்கப்பட்டது. பட்டாபி சீதாராமையா தொகுத்த நூலில்கூட நிறைய ஆந்திர மற்றும் வட நாட்டுத் தலைவர்கள் பற்றித்தான் எழுதியிருந்தார். தமிழ்நாட்டுத் தலைவர்கள் பற்றி அதிகமாக இருக்கவில்லை. அந்தக் குறையைப் போக்கியவர் ம.பொ.சி."

"குன்றத்தூர் சேக்கிழார் விழா, காரைக்குடி கம்பன் விழா தவிர, ஏராளமான திருக்கோயில் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, ஆழ்வார்களைப் பற்றியும், நாயன்மார்களைப் பற்றியும் சிறப்பாகப் பேசியிருக்கிறார். தமிழ் மன்னர்கள் செய்த தெய்வத் தொண்டுகளை எப்போதும் சொல்லுவார்."

"வ.உ.சியைப் பற்றிய நூல் எழுதி, அவர் பெருமையைத் தமிழ்நாடு முழுதும் அறியச் செய்த பெருமை ம.பொ.சியைத்தான் சாரும். சிலப்பதிகாரத்தை, அதன் பெருமையை மேடைகளில் எல்லாம் முழங்கியவர். அதில் வழக்குரைகாதை வந்தால் 'இப்போது எஸ்.கே.பி பேசுவார்' என்று அறிவித்து விடுவார். நான் பேசுவேன்.

ம.பொ.சி.யின் பண்புகள் எப்படி?

"பழக இனிமையானவர். சுயசாதிப் பற்றோ, பிறசாதிப் பகைமையோ அவரிடம் கிடையாது. தமிழ்நாட்டுத் தலைவர்களில், தேசப்பற்று, மொழிப்பற்று இரண்டுடன் ஆன்மிகப் பற்றும் கொண்டவர் ம.பொ.சி."

தூய காந்தியவாதி. கதர் தவிர வேறு அணிய மாட்டார். நேரு குடும்பத்தினர் மீது தனிப்பற்று உண்டு."

**- சாருகேசி**

# "ஜோதிகாவுக்கு தேசிய விருது?"

நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவுக்குள் பெண் இயக்குனர் ஒருவர் நுழைந்திருக்கிறார். ஜோதிகா, குஷ்பு, சரிதா என்று மூன்று ஹீரோயின்களை வைத்து, 'ஜூன் ஆர்' என்கிற வித்தியாசமான தலைப்புள்ள படத்தைச் சத்தமில்லாமல் இயக்கிக் கொண்டிருக்கிறார் ரேவதி எஸ். வர்மா. பத்து





வருடங்களுக்கு மேலாக விளம்பரத்துறையில் ஜொலித்து விட்டு, கோலிவுட்டுக்குள் காலடி வைத்திருக்கிறார்.

**அடிப்படையில் மலையாளியான நீங்கள் தமிழில் படம் இயக்குவது ஏன்?**

என் பெற்றோர்கள் தான் மலையாளிகள். ஆனால், நான் தற்போது தமிழ்நாட்டைச் சேர்ந்தவள். என் தொழில், திறமைகளெல்லாம் இங்குதான் வளர்ந்தன. தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த பெண் நான். 'ஜூன் ஆர்'க்கும் நான்தான் வசனம் எழுதுகிறேன்.

இந்தப் படத்தை முதலில் ஹிந்தியில்தான் பண்ண நினைத்தேன். ஆனால், என் கதையை அறிந்த ஜோதிகா, 'இதுமாதிரியான வித்தியாசமான கதையை எல்லாம் தமிழில்தான்

ரசிப்பார்கள். அவர்கள்தான் பெண்களுக்கு மரியாதை அளிப்பவர்கள்'' என்றெல்லாம் கூறி என்னை முடுக்கிவிட்டார்.

**அப்படியென்ன கதை?**

நம் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில் எல்லாம் நமக்கு கெட்டதுதான் நடக்க வேண்டும் என்பதில்லை. நல்லதும் நடக்கலாம் அல்லவா? அதுதான் 'ஜூன் ஆர்' படத்தின் கதைக் கரு. இதில் கதாநாயகனாக பிரபல நடிகர் நடிக்கவுள்ளார். இப்போதைக்கு அவரைப் பற்றிய விவரத்தை ரகசியமாக வைத்திருக்கிறோம். மூன்று ஹீரோயின் களாச்சே, ஹீரோவுக்கு என்ன வேலை என்றெண்ணி விட வேண்டாம். படத்தில் ஒவ்வொரு திருப்புமுனையையும் ஏற்படுத்துவது ஹீரோவின் கைங்கர்யம்தான்.

காதல் கதை மட்டும்தான் சினிமா என்றில்லை. நம்மில் எத்தனை பேர் காதல் திருமணம் செய்துகொள்கிறோம். ஆக, காதல் கதையில்லாமல் படம் எடுக்க முடியும் என்று இதில்





• ஜோதிகாவுடன் ரேவதி எஸ். வர்மா

படம் வெற்றி பெறும் என்பதும் கிடையாது. நம் தாவை தண்ணீரில் நனைய விட்டு ஆட விடுகிற படங்களெல்லாம் ஜெயித்து விடுகிறதா என்ன? 'குத்து' பாட்டும் என் படத்தில் இருக்காது. 'ஜூன் ஆர்'ல் ஜோதிகா, குஷ்பு, சரிதாவை எப்படிப் பயன்படுத்தியிருக்கிறேன் என்று பாருங்கள். என் கணிப்பில் ஜோதிகாவெல்லாம் பிறவியிலேயே நடிகையாக இருந்திருக்க வேண்டும். நிச்சயம் தேசிய விருதுக்கான பெர்ஃபான்ஸை இதில் காண்பித்திருக்கிறார்.

**புகழ்பெற்ற காமிராமேனான மது அம்பட் எப்படி இதற்கு ஒளிப்பதிவாளரானார்?**

ஐஸ்வர்யா ராயை வைத்து ஹாலிவுட் படம் எடுத்துக் கொண்டிருக்கும் திறமைசாலி அவர். 'அஞ்சலி'க்குப் பிறகு என் கதை பிடித்துப் போய், நீண்ட வருடங்கள் கழித்து இந்தப் படத்தின் மூலமாகத்தான் தமிழுக்கு வருகிறார். நான் செய்த பாக்கியம் இது. ஒவ்வொரு ஃப்ரேமும் பளிங்கு மாதிரி பளீரென இருக்கும்.

**இந்தப் படம் முடிந்து மீண்டும் விளம்பரங்களை இயக்கச் சென்று விடுவீர்களா?**

வாய்ப்பே கிடையாது. என் மூச்சே டைரக்‌ஷன்தான். சினிமாவில், அதுவும் தமிழ் சினிமாவில் காலூன்றி ஜெயிக்க வேண்டும் என்பதே என் கனவு. என் அனுபவத்தில் தமிழ் ரசிகர்கள் போல் ரசனையுள்ளவர்கள் வேறெங்கும் கிடையாது.

மற்றபடி இன்றைய தேதியில் விளம்பரப் படங்கள் இயக்குவது சுலபமாகிவிட்டது. அழகான பெண்கள், ஒரு நடன இயக்குனர் போதும். ஊரைக் கூட்டி ஆட விட்டால் அதுதான் விளம்பரம் என்றாகிவிட்டது. இந் நிலைமை எனக்கு வேண்டாமென்றுதான், சினிமாவில் முழுமூச்சாக இறங்கியுள்ளேன்.

நிரூபித்திருக்கிறேன்.

**ராமதாஸ், திருமாவளவனைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் 'ஜூன் ஆர்' என்று ஆங்கிலத் தலைப்பு வைத்திருக்கிறீர்களே?**

தமிழ்நாட்டில் யார் சித்திரை, வைகாசி என்று மாதங்களைச் சொல்கிறார்கள்? தமிழ்நாட்டில் எத்தனை பேர் தமிழில் இனிஷியல் வைத்திருக்கிறார்கள்? படம் பார்த்தால்தான் தெரியும். ஏன் அப்படியொரு டைட்டிலை வைத்தேன் என்று. தமிழ் எனக்கும் பிடிக்கும். சங்கீதம் கலந்த தேனான மொழி தமிழ். அதனால்தான் எல்லாவிதமான பாடல்களையும், தமிழில் சுலபமாக இசையமைக்க முடிகிறது. மற்றபடி ஆங்கிலத்தில் டைட்டில் வைக்கக்கூடாது என்பது சிறுபிள்ளைத்தனமானது. இதைவிட கவனம் செலுத்த வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கு.

**உங்களால் ஜனரஞ்சகமாக படம் தர முடியுமா?**

தமிழைத் தவிர பிற மொழிகளிலெல்லாம் பெண் இயக்குனர்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டு தானிருக்கிறார்கள். என் அடுத்தபடம் ஆக்‌ஷன் வித் லவ் ஸ்டோரிதான். எப்பொழுதும் ஜனரஞ்சகமாக, தயாரிப்பாளருக்கு லாபம் தரும் வகையில்தான் படமெடுப்பேன்.

மற்றபடி மசாலா படமென்று என் ஹீரோயினை வீணடிக்க மாட்டேன். 'ரன்' ஹிட்டான படம்தான். ஆனால் அதில் மீரா ஜாஸ்மினுக்கு நடிக்க ஸ்கோப்பே இல்லையே. அதேபோல் நடிகையை கவர்ச்சியாகக் காட்டினால்தான்

**- ச.ந. கண்ணன்**

## நாளும் பெருகிவரும் சிக்கலான, மற்ற மருத்துவ முறைகளில் கட்டுப்படுத்த இயலாத நோய்களான,

- ★ ஆஸ்துமா
- ★ வயிற்றுக்கோளாறுகள்
- ★ மூட்டுவலி
- ★ மகப்பேறு இல்லாமை
- ★ ஆரம்பநிலை புற்றுநோய் (Grade I Cancer)
- ★ நீரிழிவு (Type II)
- ★ மஞ்சள் காமாலை (Hepatitis 'B' Virus)
- ★ சர்ம நோய்கள் (Psoriasis, Eczhima)

ஆகியவற்றுக்கு நவீன கணிப்பும், சித்த மருத்துவமும் இணைந்த தரமான, விரைந்து நிவாரணம் தரத்தக்க சிகிச்சையை உருவாக்கி பலரும் வியக்கத்தக்க பலனைப் பெற்றுள்ளனர். மேற்கண்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் எம்மிடம் கீழ்க்கண்ட முகவரியில் காலை 10 முதல் 1 மணி வரை, மாலை 4 முதல் 8 மணி வரை. ஆலோசனையும், சிகிச்சையும் பெறலாம்.

விவரங்கட்கு:-

**சென்னையில்**

மூலிகைமணி
Dr. க. வேங்கடேசன், MA., Ph.D, RMP
K.V. பாலாஜி, M.Sc., (Bio-Chemist)
**The Modern Siddha Speciality Clinic**
Flat No.9, BBC Manor,
23, துரைசாமி ரோடு, தி. நகர்,
சென்னை-17. ☎: 24331494.

**கோவையில்**

மூலிகைமணி
Dr. K.V. அபிராமி, BSMS
**The Modern Siddha Speciality Clinic**
New No.6-10, நேரு வீதி லேன்,
ராம்நகர், (சிங்கப்பூர் பிளாசா பின்புறம்), கோவை - 641 009.
☎: (0422) 2234808.





DOCTOR FEES FREE FOR WOMEN!

# 1st Time IN INDIA





*The Camirror to Choose Your Correct Frame*

ESTD - 1978

# GKR Optics & Eye Clinic

115.[old 63] Arcot Road, 22, Corp, Market Building, Kodambakkam, Chennai- 600 024

Ph : 24830713 / 52162913

VARILUX BAUSCH & LOMB Ray-Ban CORNING® ZEISS

*Conditions Apply

சிறுகதை

# ஜியாமெட்ரி

**ப**டிச்சதுமே மனசு நெகிழ்ந்துடுச்சுங்க! எங்க ஸ்கூல்லியே எத்தனையோ பசங்க, பேனா, நோட்டு இல்லாமதான் வராங்க. நான் அவங்களுக்கு தண்டனை தரமாட்டேன். அவங்க பின்னாலும் செல்லம் போன்ற தாய்மார்கள் இருக்கலாமில்லையா?

- **ரமேஷ்,** (பள்ளி ஆசிரியர்)



* படம் : ஸ்ரீஹரி

**“எ**லே! பாலா! எந்திரிடா! நித்தம் இவனோட மல்லுக் கட்டுறதே ஏஞ்சோலியாப் போச்சு...”

- செல்லம் என்ற செல்லம்மாள், அவனை பாயோடு இழுத்து உருட்டினாள். அலறியடித்து எழுந்தான் பாலா.

பாலசுப்ரமணி, செல்லம்மாளின் ஒரே மகன். ஐந்து வயதிலேயே அப்பனை இழந்த அவனை செல்லம்தான், செங்கல் சூளையிலே வேலை பார்த்து வளர்க்கிறாள். பாலாவின் அப்பா மாடசாமி, காத்தாடி மில்லுல அடிபட்டு செத்தப்புறம், செல்லம் அவனை வளர்க்கப் படுகிறபாடு கொஞ்ச நஞ்சமில்லை.

பாலா அஞ்சாப்பு படிக்கிறான். ஆராம்புளி (ஆரல்வாய்மொழி) ஊர்லயே, ஊர்க்கோடியில் பள்ளிக்கூடம்.

“எலே சீக்கிரம், பல் தேய்ச்சுட்டு வாலே... கஞ்சி ஊத்தி வச்சிருக்கேன்.”

- பாலாவின் ஒரே பள்ளிச்சீருடையைப் போட்டு ஊக்கு போட்டு குத்திவிட்டாள். முகவாயைப் பிடித்து தலையைச் சீவினாள்.

“பயலுக்கு பத்து வயசாகுது. இன்னும் தலை ஒழுங்கா சீவத் தெரியல...”

- இழுத்து வைத்து பவுடர் பூசினாள். அலுமினிய சம்புடத்திலிருந்து திருநீறு எடுத்து அவனுக்குப் பூசி, அவளும் பூசிக் கொண்டாள்.

“கஞ்சியக் குடியாம்லே... துரைக்கு திருப்பித் திருப்பிச் சொல்லணுமா...?”

“போம்மா... டெய்லி கஞ்சிதானா, துரையண்ணன் கடைல ஆப்பம் வாங்கித்தா...”

“எனக்கு வாரக் கோவத்துக்கு.. குடிலே கஞ்சிய...”

- தாயின் கோபத்தில் மிரண்டு கஞ்சியை கடகட என்று குடித்தான். காலைலே தினசரி பழையதுதான்.



# பாக்ஸ்

நாஞ்சில் பாரதி

## ஜாலி ஜூட்!




எப்பாவது தொட்டுக்க ரசவடை வாங்கித் தருவாள். மத்தியானம் பள்ளிக்கூடத்துல சத்துணவுல சாப்பாடு. ராத்திரிக்குத்தான் கடுசோறு. அதுவும் ஒரு ரசம், துவையல்தான்.

பள்ளிக்குச் செல்ல தயாரான பாலா... புத்தகப்பையை எடுத்தான். புத்தகப்பையின் மேல் அவனைப் பார்த்துச் சிரித்தது ஜியாமெட்ரி பாக்ஸ். தகரத்தில் பெயின்ட் எல்லாம் போய், நாலு வருஷமா பக்கத்து வீட்டு முருகண்ணன் படிச்சு தேய்ச்ச ஜியாமெட்ரி டப்பா. பாலாவுக்குக் கோபமாக வந்தது.

பாக்ஸைக் கையிலெடுத்தவன்,

"எம்மா, இது வெறும் ஓட்ட டப்பாம்மா! சரியா வரையவே முடியல்ல. எல்லாப் பயல்களும் விதவிதமா பாக்ஸ் வச்சிருக்காம்மா! இது வேண்டாம்மா, தூரப்போட்டுட்டு, புதுசு வாங்கித் தாம்மா"

"வாலே! நானே வாடகைக்குக் குடுக்கக் கூட வழியில்லாம முதலாளி கிட்ட கடன் கேட்டுட்டிருக்கேன். இதுல உனக்கு சாமிட்ரி பாக்ஸ் வேறயா? ஏன், முருகண்ணன் இத வச்சுத்தான் படிச்சா? புதுசு வாங்கணும்னா நாப்பது ரூபா ஆகும். அதுக்கு நா எங்க போவேன்...? போலே! பேசாம பள்ளிக்கூடத்துக்கு. ஏம் வாயக் கிளறாம..."

வீட்டுக்கதவை இழுத்துப் பூட்டி சாவியை நிலைப்படி மேலே வைத்து விட்டு, விறுவிறு என்று நடந்தாள்.

பாலாவுக்கு மனசே சரியில்லை. அன்றைக்குப் பார்த்து கணக்கு வாத்தியார் வரவில்லை. கிளாஸ் சார் வந்து எல்லாப் பயல்கள் கிட்டேயும் இருந்து தலைக்கு எட்டணா கொண்டு வரச் சொல்லியிருந்ததை வாங்கினார். பாலாவை அவரு மொதல்லேயே 'காசு நீ கொண்டு வர வேண்டாம்ல. நானே கொடுக்கேன்'னு சொல்லியிருந்தார். அதுவே அவனுக்குக் கூச்சமாயிருந்தது.

வாத்யாரு பைசாவைப் பிரிச்சுக் கூட்டி எடுத்து, அவரு பாக்கெட்ல இருந்து அஞ்சு ரூவா நோட்டா எடுத்து, பாலாவையும், கிளாஸ் லீடர் மணியையும் கூப்பிட்டு, "எலேய், இந்தாங்கல ஐம்பது ரூபா! ரெண்டு பேரும் போயி, வகுப்புக்குத் தண்ணி எடுத்து வைக்க, நல்ல பானையா, ஒரு மண்பானை வாங்கிட்டு வாங்கலே... பானைய பத்திரமா உடையாம கொண்டு வாங்கலே... என்ன?" அனுப்பினார்.

- மணிக்கும், பாலாவுக்கும் குஷியாக

இருந்தது. டிராயரை இறுக்கிக் கட்டிக் கொண்டு, வாயால் கார் ஓட்டிக் கொண்டு ஓடினர்.

**பா**னை வாங்கும் இடம், பாலாவின் அம்மா செல்லம்மா வேலை செய்யும் சூளையைத் தாண்டி இருந்தது. பானை வாங்கி விட்டு வரும் போது, மணி, பாலாவின் அம்மாவைப் பார்த்து விட்டான்.

"எலே பள்ளிக்கூடத்துல இல்லாம, எங்கடா வந்திங்க...?"

"பானை வாங்க வந்தம்மா... மணிகூட வந்திருக்கிறான்."

- பரிவாக மகனின் தலையைக் கோதி நேராக்கினாள்.

"எலே பாலா! காலைல நீ கேக்கச் சமயம் கோவத்துல சொல்விட்டு வந்துட்டம்ல. எனக்கு மனசே சரியில்ல. வந்ததும் முதலாளிகிட்டே கேட்டேன்.

"**அ**ங்கேயா போறீங்க? வெயில் கொளுத்துமே!" என்று சில நண்பர்கள் பயமுறுத்தினார்கள். ஆனாலும் பரவாயில்லை என்று நாங்கள் புறப்பட்டுச் சென்றது சிங்கப்பூருக்குத்தான். நாங்கள் அங்கு தங்கியிருந்த நான்கு நாட்களில், இரண்டு நாட்கள் மழை பெய்தது எங்கள் அதிர்ஷ்டம்தான். பசுமையான ஊர். பார்த்து ரசிக்க வேண்டிய பல இடங்கள்!

"ஜூராங் பறவைகள் பூங்காவில் பாஸ்போர்ட் உட்பட பல முக்கியமான பொருள்கள் வைக்கப்பட்டிருந்த என்னுடைய கைப்பை காணாமல் போன விஷயமே, முக்கால் மணி நேரம் கழித்துத்தான் தெரிந்தது. பூங்கா அலுவலகத்தில், பதற்றத்துடன் புகார் தெரிவித்தபோது, அங்கிருந்தவர் புன்னகையோடு, "கவலைப்படாதீர்கள். கறுப்பு நிற கைப்பையா! உள்ளே என்னென்ன வைத்திருந்தீர்கள் என்று எழுதிக் கொடுங்கள். சரி பார்த்து விட்டுக் கொடுத்து விடுகிறோம்" என்றார். அடுத்த சில நிமிடங்களில் என் கைப்பை மறுபடி என் கையில்!

"கைப்பை தொலைத்த டென்ஷன், சென்னை வெயிலைவிடக் கொடுமையானது."

**- பாரதி பாஸ்கர்**

தொகுப்பு : **ச.ந., மௌலி**

"எலே... ஓங்கம்மாடா..."

- பாலா... பானையை இறக்கி வைத்துவிட்டு சூளைக்குள் சென்றான். சூளையில் செங்கல் அறுக்க மண் குழைத்துக் கொண்டிருக்க, அவன் அம்மா, தலையில் சும்மாடு மேல குடம் வச்சு தண்ணி எடுத்துட்டு வந்துக் கிட்டிருந்தாள்... தலையெல்லாம் மண்ணாகி, முகத்துல எல்லாம் வழிஞ்சு... சீலையெல்லாம் சேறு வடிந்தது. பாலாவுக்கு அழுகையாக வந்தது. அம்மாவை நெருங்கி அவளது அழுக்கேறிய கைகளைப் பிடித்துக் கொண்டான். செல்லம்மா, தலைக் குடத்தை இறக்கிவிட்டு, சும்மாடை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சாயங்காலம் ரூவா தாரேம்னு சொன்னாரு. சாயங்காலம் வேலை முடிஞ்சு வந்ததும், நாகர்கோவில் போயி சாமட்ரிபாக்ஸ் வாங்கலாம்லே... என்னா?"

- பாலாவுக்கு அழுகையாக வந்தது.

'எவ்வளவு நல்ல அம்மா...' அம்மாவின் கையைப் பிடித்தான்.

"வேண்டாம்மா! முருகண்ணன் தந்த ஜியாமெட்ரிபாக்ஸே நல்லாத்தாம்மா இருக்கு... அதே எனக்குப் போதும்மா..."

- தாயின் முகம் பார்க்கத் துயரப்பட்டு... பானையைத் தூக்கிக் கொண்டு, வேகமாக ஓடினான். செல்லம்மாள் பெருமூச்சுடன் தண்ணீர்ப் பானையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாள். ●

## காதல் கிறுக்கன்

## 13

காதலைப் பற்றிய என் சொந்தக் கருத்துக்கள் கொஞ்சம் கடுமையாகவே இருக்கும். ஆனாலும் சொல்லித்தான் ஆகணும்.

கல்லூரியில் படிச்சப்ப எனக்கு நெருங்கின நண்பன் ஒருத்தன் இருந்தான். அவனோட குடும்பச் சூழ்நிலை சரியில்லை. சம்பாதிக்கறவர் அப்பா மட்டும் தான். அதுவும் குறைஞ்ச சம்பளம். ஒக்காந்து சாப்பிட இவனையும் சேர்த்து ஏழு ஜீவன்கள். ஆனாலும் கடனை வாங்கியாவது இவனைப் படிக்க வைக்க அவங்க குடும்பத்துக்கு ஆசை. மத்தவங்க மாதிரி இவன் கையில பணப்புழக்கம் இருக்காது. இவனுக்கு நிறைய செலவழிக்கணும், வித விதமா ட்ரஸ் போடணும், பொண்ணுங்களை ப்ராக்கெட் போடணும்... இதெல்லாம்தான் ஆசைகள். எதையுமே நிறைவேத்தக்கூடிய வல்லமை இல்ல. ஆனா நண்பர்களுக்கு முன்னால தானும் காதலிக்கறேன்னு ஜம்பமா சொல்லிக்கணும். அதுக்காக நிஜத்துல நடக்காத கற்பனைக் கதைகளை உருவாக்க ஆரம்பிச்சான்.

தான் ஒரு பெண்ணைக் காதலிக்கறதா மெதுவா ஒரு கற்பனைக் கதையைத் தொடங்கினான். அதுக்குக் காது மூக்கு ஒட்ட வச்சு உருவம் கொடுத்தான். அந்தக் காதலி, ஒரு கல்லூரியில படிக்கறான்னு தொலைவுல இருக்குற ஒரு கல்லூரியைச் சொல்லி, அவ இவன் வாழற தெருவுல வாழறான்னு ஆரம்பிச்சு என்னன்னமோ சொல்வான். எங்களுக்கெல்லாம் ஒரே த்ரில்லா இருக்கும். அவ வசதியான பொண்ணு - இவனுக்கு டீ ஷர்ட், வாட்ச், வாசனைப் பொருள்கள் இதையெல்லாம் பரிசாக் கொடுத்தான்னு அப்பப்ப காட்டுவான். நாங்கள்லாம் பொறாமைப்படுவோம் - நமக்கு இப்படி ஒரு காதலி கிடைக்கலியேன்னு! "டேய்! உன் ஆளை ஒரு நாளாவது எங்களுக்குக் காட்டுடா"ன்னு கெஞ்சுவோம்!

இருந்தாத்தானே காட்டுவான்? ஒரு மாதிரி சமாளிச்சுக்கிட்டு வந்தான்.



# கண்ணுக்கும் நெஞ்சுக்கும் ருசியா காதல்...

தேவிபாலா

சமாளிக்க முடியாத நிலைமை வந்துடுமோன்னு பயந்தான்.

மூணாவது வருஷ பி.எஸ்சி. படிப்பு அது. அவன் காதலிக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சுன்னு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

'இப்பப் பாதிப் படிப்புல இருக்கேன். எனக்கு வருமானமும் இல்லை. என் குடும்பச் சூழ்நிலையும் சரியில்லை. எப்படி என் காதல் நிறைவேறும்'னு கேட்டு அழுதான். 'பணக்கார வரன் அவளுக்கு வந்திருக்கு'ன்னு சொன்னான்.

'நாங்க உன் காதலுக்கு உதவறோம்'னு கச்சை கட்டிட்டு இறங்க, அவன் தடுத்துட்டான்.

'நாளைக்கு அவளுக்கு மதுரைல கல்யாணம்'னு சொல்லிட்டு, எங்ககிட்ட அழுதான்.

இவனோட கற்பனைக் காதலிக்கு மதுரைல பொய்யான கல்யாணம் நடக்கற அன்னைக்கு, வண்ணாரப் பேட்டை ரயில் நிலையத்துல அவனோட சேர்ந்து நாங்கள்லாம் சோகம் கொண்டாடினோம்.

இந்த மூணு வருஷ காலத்துல, தன்னை நண்பர்களுக்கு மத்தியில ஒரு கதாநாயகனாகக் காட்டிக் கொள்ள இவன் ஆடிய நாடகத்துக்கு பல பேர் பலி.

ஃபீஸ் கட்டும்போது தொகையை இரட்டிப்பாச் சொல்லி, வீட்ல பணம் வாங்குவான். ஏற்கெனவே கஷ்டப்படற குடும்பம். இவனே பரிசுப் பொருள்களை வாங்கி, அவ தந்ததா எங்ககிட்ட காட்டுவான்.

அதாவது போகட்டும்!

சுத்தமா படிப்பைக் கோட்டை விட்டு, ஒவ்வொரு பேப்பரையும் அரியர் வச்சு, கடைசி வருஷத்துல எல்லா பேப்பர்களையும் எழுத முடியாம வாஷ் அவுட் ஆனான். நாங்கள்லாம் பிரிஞ்சோம். சில பேர் மேல் படிப்புக்கு, சில பேர் வேலைக்குன்னு திசை திரும்ப, இவன் மட்டும் எதுக்கும் உதவாம ரொம்ப காலம் உயிரைச் சுமந்துட்டு, வீட்டுக்கு பாரமா இருந்து, குடும்பத்தார் வெறுப்பை நிறைய சம்பாதிச்சிட்டான். பெத்தவங்களுக்கு, உடன்பிறப்புகளுக்கு இவன் மேல உள்ள பாசம் சுத்தமா தொலைஞ்சு போச்சு.

காதல் அவனை முட்டாளா, உதவாக்கரையா ஆக்கினதுதான் மிச்சம்.

கல்லூரி நாட்களைக் கடந்து சம்பாதிக்கற எல்லைக்குள்ளே வரும்போது

**"மதுரைல கல்யாணம்... வண்ணாரப்பேட்டைல சோகம் கொண்டாடினோம்!"**

நான் சந்திச்ச அடுத்த நபர்...

என்னோட வேலை பார்த்தவன்...

ஒரு பெண்ணை விரும்பினான். அவளுக்கும் இவன்கிட்ட நாட்டம் இருந்தது. அவ வேற எடத்துல வேலை பார்த்ததால், சாயங்காலம் ஆபீஸ் முடிந்து தினசரி ரெண்டு பேரும் சந்திப்பாங்க. பீச், ரெஸ்ட்டாரன்ட்னு அலைஞ்சிட்டு வீடு போய்ச் சேருவாங்க.

காதல் ஒரு பக்கம் இருந்தாலும், அந்தப் பெண் புத்திசாலி. வாழ்க்கையைப் பற்றின ஒரு கணிப்பை வச்சிருந்தவ. இரவு நேரங்கள்ல படிச்சு, நிறைய டிபார்ட்மென்டல் தேர்வுகளை எழுதி, அதிகாரி ஆயிட்டா. இவனையும் படிக்கச் சொன்னா. இவன் சோம்பேறி! காதல் சோம்பேறி!

என்ன ஆச்சு?

இவனைவிடப் பெரிய பதவிக்கு வந்து, இவனைவிடக் கூடுதலா சில ஆயிரங்களைப் பார்த்ததும், அவ தாவிட்டா. இவன் நம்ம அந்தஸ்துக்கு சரிப்பட மாட்டான்னு உதறிட்டா. காதலை அவ பொழுதுபோக்கா வச்சிருந்தா. விளைவு, இவன் ஏமாந்துட்டான்.

காதல் வாழ்க்கைல ஒரு சம்பவம்தான். அதையே வாழ்க்கைன்னு நினைக்கற முட்டாளை எதுல சேர்க்கறது?

**கா**தல் குடும்பப் பாசங்களையும் உதற வைக்குது. இவனும் எனக்கொரு நண்பன்தான்.

வயசான பெத்தவங்க. கல்யாண வயசுல ரெண்டு சகோதரிகள், படிக்கற ஒரு தம்பி. அப்பா பென்ஷன் கொஞ்சம் வரும். இவன்தான் முக்கிய பொறுப்பு.

ரயில்ல போகும்போது ஒரு பெண்கூட பழக்கம் ஏற்பட்டு, காதலா மாறிடுச்சு. அவள் இவனோட ஜாதி இல்லை. மதம் கூட வேற மதம். இவன் காதலைத் தெரிஞ்சுக்கிட்டு நான் எச்சரிக்கை பண்ணினேன்! 'இது பிரச்னைல முடியும். உன் குடும்பத்துக்கு நீ ரொம்பத் தேவை'ன்னு சொன்னேன். அந்த நேரம் ஏதோ ஒரு பதில்லைச் சொல்லி சமாளிச்சான்.

அப்புறமா ரொம்ப நெருங்கிப் பழகினதுல, அந்தப் பெண்கிட்ட எல்லை மீறிட்டான். இதையே வச்சு, அவ அவனை சுலபமா தன் பக்கம் இழுத்துட்டா.

வேற்று மதம் வேற... விவகாரம் பெருசாகி, வீட்டு வாசல் வரைக்கும் வந்து, இவனோட அப்பா தாங்க முடியாம, 'நீ அவ கூடப் போயிடு'ன்னு உதறிட்டார்.

அப்புறம் இவனோட பெரிய தங்கை வேலை தேடி, அம்மா, வீட்டளவுல சின்னதா ஒரு மெஸ் நடத்தி, இவன் உதறின காரணமா அந்தக் குடும்பம்



தள்ளாடித் தடுமாறி இப்ப ஒரு வகையா கரையேறிட்டாங்க. ஒரு மெகா தொடருக்குண்டான கதை இது. காதல், பாசத்தை பலி வாங்கிய கதை.

**கா**தலுக்குக் கண் இல்லைன்னு சொல்லுவாங்க. அது உண்மை! காதலிக்கத் தொடங்கிட்டா, தன்னை நம்பினவங்களை, தனக்குள்ள எதிர்காலப் பொறுப்பை, நன்றி உணர்ச்சிகளை இப்படி எல்லாத்தையும் உதறிட்டு, காதல் மனிதர்களை சுயநலத்தின் உச்சிக்குக் கொண்டு போகுது! சினிமால ரெண்டரை மணி நேரம் பாக்கும்போது இளமையா, விறுவிறுப்பா, வித்தியாசமா காதல் ருசியாத்தான் இருக்கும். நடைமுறைல அதெல்லாம் சிக்கல்!

'காதல் மேல இத்தனை கோபமா?

இத்தனை வெறுப்பா?

ஏன் பாலா? உலகமே காதலர் தினத்தை பிப்ரவரி 14ம் தேதி கொண்டாடும்போது, காதல் இல்லைன்னா, இந்த உலகத்துல மென்மையான உணர்வே இல்லைன்னு ஊர் கூடி உரக்கப் பேசும் போது, உங்களுக்கு மட்டும் காதல் மேல் எதுக்கு இத்தனை காழ்ப்பு?'

கேள்விக் கணைகள் என் மேல வீசப்



படும்! தெரியும்.

எனக்குக் காதல் மேல எந்த வெறுப்பும் இல்லை. நூற்றுக்கும் மேற்பட்ட காதல் கதைகளை ரசிச்சு எழுதி, என் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றவன் நான். வாழ்க்கையை ஒரு பார்வையாளனா இருந்து, தள்ளி நின்னு ரசிக்கறவன். ஒரு ரசிகன்தான் நல்ல படைப்பாளியா மாற முடியும். அந்த வகைல பாதிக்கப்பட்டவர்களின் வரிசை அதிகமாகுது, எச்சரிக்கத் தோணுது.

கல்லூரிக் காதலும், அதற்கு அடுத்த கட்டக் காதலும் முழுமையா யோசிச்சு முடிவுக்கு வராத உணர்வுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரக்கூடிய காதல்.

பெண்ணின் நெருக்கமும், பெண் வாசனையும், ஸ்பரிசமும், உடல்ரீதியான பாதிப்புகளை அதிகமா தருமே தவிர, உள்ளங்கள் இரண்டாம்பட்சம்தான்.

இளமை இருக்கும் வரைதான் காதல் சிறகுகள் உயரே பறக்கும்! வயது ஏற ஏற, அந்த உணர்வுகள் மங்கும்போது அறிவு விழித்துக் கொள்ளும்.

காதலிக்க வேண்டாம்னு சொல்லலை, சொல்லவும் முடியாது. அது பாதிப்புகளை ஏற்படுத்தாமல் பார்த்துக்கணும்.

பசிக்கும்போது கூட, அளவாத்தான் சாப்பிடணும்! அள்ளி விழுங்கினா அஜீரணம்தான் மிஞ்சும். காதலை, கண்கள் மட்டுமே முடிவு செய்யறது தான் பெரிய துரதிர்ஷ்டம். அறிவு முடிவெடுக்கணும்.

எதையுமே உணர்வுகள் முடிவெடுத்தா, விளைவுகள் விபரீதம்தான். கொஞ்சம் யோசிக்கணும். இப்பிடி செஞ்சா, எதிர்காலத்துல என்ன பின் விளைவுகள் உண்டாகும்னு சிந்திக்கற தீர்க்கதரிசனத்தை எல்லாரும் வளர்த்துக்க முயற்சிக்கணும். அது கொஞ்சம் கஷ்டம்தான். வாய்க்கு ருசியான பொருள்கள் எல்லாமே வயிற்றுக்கு நல்லதுன்னு சொல்ல முடியாது.

அதே மாதிரி கண்ணுக்கும், நெஞ்சுக்கும் ருசியா இருக்கற காதல், வாழ்க்கைக்கு நல்லதுதானான்னு யோசிச்சுட்டா, அந்தக் காதலுக்கும் மரியாதை... காதலிக்கறவங்களுக்கும் பாதுகாப்பு.

**"இளமை இருக்கும்வரைதான் காதல் சிறகுகள் உயரே பறக்கும்!"**

சந்திப்பு : **மு.மாறன்**
படங்கள் : **ஸ்ரீஹரி**



# பக்கத்து வீட்டு முகி!

## வலைப்பதிவு

சின்னஞ்சிறு கொள்ளிக் கட்டை போன்ற சிகரெட்டை அணைக்காமல் எறிவது கொஞ்சமும் சரியல்ல. சிகரெட் நுனியில் கனன்று கொண்டிருக்கும் தீயின் உஷ்ணம் 800 முதல் 1200 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும். தீப் பிடித்துக் கொள்ள காகிதத்துக்கு 45 டிகிரியும், மரத்துக்கு 47 டிகிரியும் போதுமாம். 'படுக்கையில் சிகரெட் குடிக்காதே' என்று அமெரிக்காவில் ஓயாமல் எச்சரிக்கிறார்கள். அப்படியிருந்தும் அதை இலட்சியம் செய்யாமல், படுக்கையில் சிகரெட் குடித்து விட்டு, அப்படியே தூக்கத்தில் ஆழ்ந்ததால் 2500 அமெரிக்கர்கள் (கடந்த சில மாதங்களில் மட்டும்) தங்களுக்குத் தாங்களே கொள்ளி வைத்துக் கொண்டார்களாம். அவர்களில் பலர் தாங்கள் குடியிருந்த கட்டடங்களையும் சாம்பலாக்கி விட்டுப் போய்விட்டார்கள். (kuruvikal.blogspot.com வலைப்பதிவிலிருந்து. விஞ்ஞானச் செய்திகள் பல இப்பதிவில் புதைந்திருக்கின்றன.)

## தகவல்

'துன்பம் வர்றப்போ கக்கபிக்கன்னு சிரிக்கணும்'னு வள்ளுவரே சொல்லியிருக்காருப்பா!' - இப்படி அடிக்கடி அடுத்தவங்க சொன்னதை மேற்கோள் காட்டிப் பேசறது நம்ம பழக்கம். அறிஞர்கள், தலைவர்கள், புகழ் பெற்றவர்கள் சொன்ன வார்த்தைகளை தொகுத்து வைச்சிருக்காங்க isearchquotations.com தளத்தில். மண்டேலான்னு வார்த்தையைத் தட்டி தேடுனா, அவரு சொன்ன புகழ்பெற்ற வரிகளெல்லாம் மேற்கோள்களா வருது. ம்... முன்னேயெல்லாம் மேற்கோள்களுக்கு வார்த்தைகளுக்குள்ள கண்களை மேயவிட்டுத் தேடுவோம். இப்போ எல்லாமே ஈஸி.

## நட்சத்திரம்

'தென்னிந்திய ரசிகர்கள் என்னை தங்கள் பக்கத்து வீட்டுப் பெண் போலத்தான் பார்க்கிறார்கள். இருந்தாலும் பாலிவுட்டில் என் திறமையை நிரூபிக்கும் வாய்ப்பிற்காகக் காத்திருக்கிறேன். இங்கே எனக்கு போட்டி யாரும் கிடையாது. அதேபோல் என்னை நான் எப்போதும் சீனியர் நடிகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததே கிடையாது. நான் ஃபீல்டை விட்டுப்போன பின்பும் ரசிகர்களின் மனதில் நீண்ட காலம் வாழ விரும்புகிறேன்.' சொல்வது அழகிய முகி ஜோதிகா. இன்னும் ஜோரா ஜோவை ரசிக்க jothikaonline.com

## அட!



- வலைஞன்



# A to Z
## மாடர்ன் ரெமோ ஜோசியம்!

ஜிகா பைட் யுகத்திலும் ஜோசியம், நியூமராலஜி, வாஸ்து போன்றவற்றில், ஜீன்ஸ் இளசுகள் மத்தியிலும் ஜொள் ளளவு ஆதரவு இருப்பது வாஸ்தவமே! அப்படிப் பட்ட A to Z ஜோசியம்தான் இது!

இன்று கல்லூரிகளில் 'கலகல' வெனவும் மின்னஞ்சல்களில் 'மள மள'வெனவும் பரவிக்கொண்டிருக்கிறது மாடர்ன் ரெமோ ஜோசியம்! எப்படி நம் 'கேரக்டரை' தெரிந்து கொள்வது?

உங்கள் பெயர் 'POOJA' என்று வைத்துக்கொள்வோம். 'P', 'O', 'J', 'A' ஆகிய 4 எழுத்துக்களுக்கு நேரே என்ன விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது (நட்பை திடமாக நம்பும் பூஜா திறந்த மனதுடையவர். வேகமாக, மிகவும் உற்சாகமாகச் செயல்படக் கூடியவர். கலையார்வமுடையவர்!) என பார்த்து புன்னகை செய்து கொள்ளுங்கள்...

A - மிகவும் உற்சாகமானவர். (குலுக்கி வைத்த கோக் போல)
B - Norton Anti Virusபோல எச்சரிக்கையுடன் இருப்பீர்கள்.
C - மறுபக்கம் மிக ரகசியமானது. பொறுமைசாலி.
D - எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். (மெகா சீரியல் நடிகைகள் போல)
E - மனதில் ஏதாவது முக்கிய சிந்தனை ஓடும்போது (வாஜ்பாய் மாதிரி) அமைதியாகி விடுவீர்கள்.
F - எல்லோரின் நேசத்தையும் அள்ளுவீர்கள்.
G - அடுத்தவர்களைப் புரிந்து கொள்வதில் வல்லவர்.
H - முடிவெடுக்க கொஞ்சம் திணறுவீர்கள்.
I - அடுத்தவரை மகிழ்விப்பீர்கள். ஆர்வக் கோளாறும் உண்டு.
J - கலையார்வமுடையவர்.
K - பொறாமை குணம் உண்டு. விளம்பரப் பிரியர்.
L - காதலை ஆழமாக (குணா லெவலுக்கு) நம்புபவர்.
M - எளிதாக வெற்றி பெறுவீர்கள். ஆனால் தோல்வியைக் கண்டு மிரளுவீர்கள்.
N - அதிக ஓய்வை விரும்புவீர்கள். உணவு எப்போதும் அன்லிமிடெட்தான்.
O - திறந்த மனதை உடையவர். (பிராட்பேண்ட் அளவு) வேகமுடையவர்.
P - நட்பை (சங்கர் சிமெண்ட் மாதிரி) திடமாக நம்புபவர்.
Q - குழப்பவாதி, கொஞ்சம் பயந்தாங்கொள்ளி.
R - (விவேக் ஓபராய் அளவுக்கு) சமூக நலன் விரும்புபவர்.
S - புதுமை விரும்பி. கவிதை எழுதும் கெட்ட பழக்கமுடையவர்.
T - லட்சியவாதி. படிப்பாளி.
U - பெரிய மனது படைத்தவர். நம்பிக்கைக்குரியவர்
V - (நோக்கியா 9500 மாதிரி) அழகிய தோற்றமுடையவர்.
W - தனிமை விரும்பி. (ஷங்கர்) மாதிரி மெதுவாகச் செயல்படுவீர்கள்.
X - அதிகம் பொய் சொல்வீர்கள். (ஒரு நாளைக்கு கால் கிலோ)
Y - பிறருக்குத் தொல்லை ஏற்படுத்துவீர்கள். (கொசு மாதிரி)
Z - (அரசியல்வாதிகள் போல்) விதண்டாவாதம் பண்ணுவீர்கள்.

- முகில்

# புக் பேங்க்




## சித்திரச்சிலம்பு - கு. ராஜவேலு

'போதையூட்டும் கள், பக்கத்தில் பொறி பறக்கும் தீ, ஊடே நல்ல இளங்காற்று, மேலே கறுப்பு வான்வெளியில் நிலவும், மீன்களும் காட்டும் ஜாலவித்தை. இவற்றை அனுபவிக்கும் சுகத்தைத் தருபவை...' என்று ரசனையையே வர்ணிக்கிற கவி வேறு யாராக இருக்க முடியும்? தமிழ்க் காப்பியங்களை அனுபவிக்கும் சுகத்தை இப்படி வர்ணித்தவன் பாரதிதான். அதே அனுபவத்தைத் தந்து விடுகிறது இந்த சிலப்பதிகாரத்தை ஆய்வு செய்யும் 'சித்திரச்சிலம்பு. 'தமிழ்நாட்டு சாக்ரடீஸ், ஷேக்ஸ்பியர், மில்டன்' என்று நம் கவிகளைப் புகழ் பாட, அயல்நாட்டவரைச் சேர்ப்பது எத்தனை அறிவீனம், அபத்தம் என்று வீசுகிற சாட்டையில் அனல் பறக்கிறது. தமிழ் எழுத்துலகம் வளமை பெறவும், வழியும், நெறியும், வாழ்வும், பண்பும் பெற்று நிமிரவும், தமிழ்க் காப்பியங்களைப் பயில்வது எத்தனை முக்கியம் என்று அறைந்து அறிவுறுத்தும் நூல். உட்பொருளுக்கு விலையே இல்லையென்பதால், அச்சுக்கும் பதிப்புக்குமே விலை.

**எல்.கே.எம். பப்ளிகேஷன், 15/4, ராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-17 விலை. ரூ. 400/-**




## விக்கிரமனின் சிறுகதைக் களஞ்சியம் - விக்கிரமன்

கண்ணெதிரே நிகழ்பவை கருத்தைப் பாதித்தால், அவை மற்றவர்க்கு வெறும் காட்சிகளாயும், எழுத்தாளனுக்கு அது கதைகளாயும் மாறி விடுகின்றன. ஐம்பது ஆண்டுக் கால யதார்த்த நிகழ்வுகளைத் தொடர்ந்து சிறுகதைகளாய்க் கூறும்போது, அது அந்த மக்களின் சரித்திரமாகி விடுகிறது. பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும், எதற்கு இவை என்று நினைக்கும் பலருக்கு, சரித்திரம் என்றாலே வேம்புதான். ஆனால் இங்கு வேம்பே வெல்லமாகி, இனிப்பாய்த் தந்திருக்கிறது தமிழ் மக்களின் வாழ்வியல் சரித்திரத்தை. அர்ச்சகர்களாகி அறிமுகிழ்த்திருக்கும் மற்ற எழுத்தாளர்களின் முன்னுரைகள் வாசிக்கத் தூண்டுகின்றன.

**விக்கிரமன் பதிப்பகம், 3. ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33, விலை ரூ.300/-**

**- விஷ்வக்**

# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

## மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை,
சென்னை – 600 015. ☎போன் : 2435 1190, 2433 2047.
செல்போன் : 9381005716 / 9840411551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.



# திருக்கயிலாயம் - மானஸரோவர் - முக்திநாத்

## ஆறாம் ஆண்டு புனித யாத்திரை 2005-ல்

## செப்டம்பர் வரை, மாதா மாதம் ஒரு குழு புறப்பட இருக்கிறது.

**பெங்களூரிலிருந்து விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து, பின் விமானம் மூலம் பெங்களூர் வருவதற்கு 18 நாட்கள் ஆகும். விமான கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) ரூ.64,999/-மட்டுமே**

12 ஆண்டுகளாக நிறைந்தது, ஞானந்தது, பக்தியை வெளிப்படுத்தி வரும் ஆன்மீகம் தெய்வீக மாத இதழ் சாரம திருக்கயிலைநாதனின் திருவருளால் தெய்வீக அன்பர்கள் அனைவரும் திருக்கயிலைநாதனை தரிசனம் செய்யவேண்டும் என்ற இறை சிந்தனையோடு ஆன்மீக உணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும், 10 வருடங்களாக திருக்கயிலாயம் மானசரோவர் யாத்திரை சென்ற அனுபவமுள்ள ECO-Trek International (P) Ltd., (Kathmandu) நிறுவனத்தின் உரிமையாளர் Mr.JOTHY ATHIKARI மூலம் யாத்திரை நடைபெறும். பார்வதியின் அம்சமாக கருதப்படும் மானசரோவரில் புனித நீராடி, திருக்கயிலாயம் பரிக்கிரமா (கிரிவலம்) செய்து வர இருக்கிறோம். இங்கு சிவபெருமானே மலை வடிவில் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். டாக்டர்களுக்கு முன்னுரிமை தரப்படும். குழுவாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு. குறைந்தது 12 நபர்கள் கொண்ட குழுவாக வந்தால் தாங்கள் விரும்பும் தேதியில் திருக்கயிலாயப்பயணம் ஏற்பாடு செய்து தரப்படும். பாஸ்போர்ட் மிக அவசியம்.

### திருக்கயிலாயம், மானஸரோவர், நேபாள் திருப்பயணத்தின் சிறப்பம்சங்கள்

• மானசரோவரில் கயிலைநாதருக்கு நூற்றியெட்டுக் கொண்டு சிறப்பாக பூஜை ஹோமம் செய்யப்படும் • பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி நாட்களில் திருக்கயிலை மற்றும் மானசரோவரில் தங்குதல் • தினசரி கூட்டு வழிபாடு நடத்தப்படும் • ஒரு ஜீப்பில் 4 அன்பர்கள் மட்டுமே அழைத்து செல்கிறோம் • திருக்கயிலை திருப்பயணம் வீடியோ எடுக்கப்படும் • யாத்திரை காலம் முழுவதும் தென்னிந்திய உணவு வசதி • மருத்துவ உதவி • குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) • உயர்மட்ட அனுபவத்திற்கேற்றபடி அதிக நாட்கள் தங்கிச் செல்லுதல் • கயிலை நாதர் முன்பு நடைபெறும் ஹோமத்தில் வைக்கப்பட்ட கயிலைநாதர் வெள்ளி டாலர் வழங்கப்படும். • சென்னையிலிருந்து திருக்கயிலாயம் சென்று வலம் வந்து திருக்கயிலைநாதனை தரிசித்து வர திரும்பி வரும்வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

— முன் பதிவுக்கு அணுகவும்... —



## ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

(Specialist in Holy Mt.Kailash - Manasarovar & Mukthinath Yatra)

68, நடுத்தெரு, (ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவில் அருகில்) மயிலாப்பூர், சென்னை -600 004.

**TEL:52067068. Cell : (0)9282226230 (24 Hours)**



இளமைத் தொடர்

# உள்ளம் துறந்தவன்

மாற்று இதயம் பொருத்திய பின், ராகவேந்தர் மெல்லத்தான் குணமாகி வந்தார். உடலின் எடை குறைந்திருந்தது. சோர்வு அதிகமாயிருந்தது. 'ஆறு மாதத்துக்கு அலுவலக வேலை எதுவும் எதுவும் பார்க்கக்கூடாது' என்று டாக்டர் ராவ் ஆணித்தரமாகச் சொல்லிவிட்டார். பாலா அவரை பதினைந்து நாள் கண்காணித்து விட்டுச் சென்றார். மஞ்சரியை விசா கிடைத்த உடன் ஒரு மாறுதலுக்கு அமெரிக்கா வந்து, அண்டர்கிராஜுவேட் படிப்பில் சேருமாறு சொல்ல, மஞ்சரி தலையாட்டினாள். "இப்படி மையமா தலையாட்டினா என்ன அர்த்தம்?" என்றாள் மரகதம்.

"அழகேசனையே நெனைச்சு வாழ்க்கை பூரா உருகிக்கிட்டிருக்கப் போறியா?"

"அத்தை, அவ எல்லாம் சரியாயிடுவா. அமெரிக்கா வந்த மறுவாரத்திலே மறந்துருவா பாருங்க"

"இல்லை மறக்க மாட்டேன்" என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டாள். இப்போதெல்லாம் யார் எது சொன்னாலும் பேசாமலிருக்கப் பழகி விட்டாள். பெரும்பாலான அவள் பதில்கள் சின்ன, உள்ளம் ஒத்துழைக்காத புன்னகைகளாகவே இருந்தன.

ராகவேந்தர் வீட்டுக்கு வந்துவிட்டார். உடலுக்குள் அந்நிய இதயத்தை நிராகரிக்கும் தடுப்புச் சக்திகளை மழுப்ப, அவருக்கு நிறைய மருந்துகள் கொடுக்கப்பட்டு வந்தன. அதனால் முதல் மாதம் அவரை யாரும் சந்திக்க இயலவில்லை. உறவினர்கள் அனுமதிக்கப்பட்டாலும், தூரத்திலிருந்தே கண்ணாடிக்கு வெளியேதான் நின்று பார்க்க முடிந்தது. முழுவதும் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில், திறமையுள்ள நர்ஸ்களின் மேற்பார்வையில், வேளைக்கு வேளை உணவும் மருந்தும் அளிக்கப்பட்டு, எவ்வித நோய்க்கிருமியும் தொற்றிக்கொள்ளாமல், பத்திரமாக மெல்லிய கண்ணாடிப் பொருள் போல பாதுகாக்கப்பட்டு வந்தார்.

'அவருக்கு நடந்ததெல்லாம் தெரியுமா? சதிச் செயல்கள் எல்லாம் புரியுமா?' என்ற சந்தேகம் மஞ்சரிக்கு விலகவில்லை. யாரையும் அவளால் நம்ப முடியவில்லை. தனியாக, மிகத் தனியாக ஒரு கொடூரச் செயலின் அநியாயத்தை விழுங்கி, மனசுக்குள் வைத்திருந்தாள். வெளியில் போகும் போதெல்லாம், நாகரத்தினம் யாரையாவதுகூட அனுப்பி கண்காணித்தார். தனியாக அவளை விடவே இல்லை, நாகரத்தினம் புதிதாக இரண்டு மேல் நாட்டுக் கார்களை வாங்கியிருந்தார். இன்சாஃப் நிறுவனத்தில் 'ஆஃபீசர் ஆன் ஸ்பெஷல் ட்யூட்டி' என்று புதுப் பதவிக்கு தனக்கே வேலை போட்டுக் கொண்டார். ராகவேந்தரின் அறையில் உட்கார்ந்தார். அவரைக் கேட்பார் யாரும் இல்லை. கேட்டால் அவர்களை





சுஜாதா

பதவி நீக்கினார், மாற்றினார். தண்ணீர் போல தாராளமாகச் செலவழித்து கெஸ்ட் அவுஸ், தனிவீடு என்று வாங்கித்தள்ளினார். வீட்டுக்கு அலங்காரத்துக்கென்றே ஏறத்தாழ ஐம்பது லட்சம் செலவழித்தார். கல்யாணி நகையாக வாங்கி அடுக்கிக்கொண்டாள். மரகதத்துக்கு புருஷன் பிழைத்துவிட்டார் என்று தெரிந்ததும், நகை ஆசை மீண்டது. சரவணன் ஸ்போர்ட்ஸ் கார் வாங்கியிருந்தான். அவன் புதுப்படம் எடுக்க பூஜை போட்டான், எல்லாம் ஆபீஸ் பணத்தில்.

'இதெல்லாம் ராகவேந்தருக்குத் தெரியுமா?' சந்தேகமாக இருந்தது. வேறு யாரும் தட்டிக் கேட்பதாகத் தெரியவில்லை. எகனாமிக் டைம்ஸ் பத்திரிகையில், இன்சாஃப் போர்டு மாற்றப்பட்டதாக செய்தி வந்தது. ராகவேந்தர் சேர்மனாக மட்டும் நியமிக்கப்பட்டு, அவரிடமிருந்து எம்.டி பதவி, ஆரோக்கியம் காரணமாக நீக்கப்பட்டதாகவும், சில கம்பெனிகளின் நிர்வாகம் மாறி, புதிய இளைஞர்கள், அதிக சம்பளத்தில் சேர்ந்திருப்பதாகவும் செய்தி வந்தது. ஒவ்வொரு செயலையும் அடுத்து, ஷேர் மதிப்புகள் ஏறி இறங்குவது குழப்பமாகத்தான் இருந்தது. ஒரு கணிசமான டிவிடெண்டு அறிவிக்கப்பட்டது. கம்பெனியின் உள்ளுறை வலுவினால், நான்காவது குவார்ட்டர் முடிவுகள் நன்றாகவே இருந்தன. ஆடிட்டரை மாற்றிப்போட்டு கணிசமான லாபம் காட்டப்பட்டது.

இந்நிலையில் மஞ்சரி ஒருநாள் ராகவேந்தரை சந்தித்தாக வேண்டும் என்று தீர்மானித்தாள்.

ஒரே ஒரு தடவை, நர்ஸ்கள் மாறும் இடைவேளையின்போது, அவருடைய அசெப்டிக் அறைக்குள் சென்று,

**27**

மெல்ல 'அண்யா' என்று அழைத்தாள். அவர் பாதி உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்தார். ''இப்பத்தான் உன்னைப்பத்தி கனாக் கண்டேன், நேர்ல வந்துட்ட. ஏம்மா கண்ணு, என்னைப் பார்க்கவே வரலை? கோபமா, வருத்தமா, நீ வந்தாத்தான் எனக்கு குணமாகும்னு எத்தனை தடவை அந்த மலையாளப் பொம்பளைகிட்ட சொன்னேன்''

''அண்யா, உங்களுக்கு இன்ஃபெக்ஷன் ஆய்டும்னுதான் ஒதுங்கியிருந்தேன்.''

''உங்கிட்டருந்து எனக்கு அஃபெக்ஷன்தாம்மா ஒட்டிக்கும். அந்தப் பையன் அழகேசன் எனக்கு இதயம் கொடுத்தானே, உன் சிநேகிதன். அவர் பேர்ல ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டச் சொல்லியிருக்கேன். அதுக்காக நூறு கோடி ரூபாய் முதல்ல சாங்ஷன் பண்ணச் சொல்லியிருக்கேன்''

''அண்யா, அதைப்பத்தித்தான் பேச வந்தேன்''

''என்னம்மா?''

''அந்த ஆஸ்பத்திரி கட்டறதை, நாகு மாமா பொறுப்பில கொடுக்காதீங்க''

''ஏம்மா?''

முகத்தைத் துடைத்துக் கொண்டாள். ''அவர்தான் அழகேசனைக் கொன்னவர் அண்யா''

ராகவேந்தரின் நெற்றி சுருங்கியது. ''பைத்தியம் மாதிரிப் பேசறே'' என்று மணிப்பொத்தானை அழுத்தினார்.

''நாகரத்தினத்தைக் கூப்பிடு''

''ஸார், நீங்க இப்ப ரெஸ்ட் எடுக்கறது...''

''அதெல்லாம் புண்ணாக்காய்ப் போவட்டும். கூப்பிடு அவனை''

நர்ஸ் பதற்றத்துடன் 'என் வேலை போயிரும்' என்று ஓடினாள். அதற்குள் நாகரத்தினமே வந்துவிட்டார். ''மஞ்சு, இந்த அறையில யாரும் நுழையக் கூடாதுன்னு சொல்லிருக்கேனில்லை, என்ன நர்ஸ்ங்க நீங்கல்லாம்''

''அதெல்லாம் கிடக்கட்டும் - இங்கே வா''

''என்ன மாமா?''

மஞ்சரியையும் ராகவேந்தரையும் பார்த்து நிலைமையை உடனே கிரகித்துக்கொண்டார்.

''நாகு, இவ சொல்றதப் பாரு, நீதான் அழகேசனைக் கொன்னியாம்''

''மாமா, இவளுக்கு யார் இந்த விபரீத எண்ணங்கள் தராங்கன்னே தெரியலை. உங்ககிட்ட சொல்லியிருக்காளா?''

''வாட் நான்சென்ஸ்?''

நாகரத்தினம் பதற்றம் காண்பிக்காமல் ''எங்ககிட்டயும் சொன்னா, உங்ககிட்டயும் சொல்லிட்டாளா? என்னமோ, மண்டைக்குள் புகுந்து குடையுது. புத்தி பேதலிச்சிருக்கு மாமா. நீங்க சுகமாகி வந்த உடனே, முதல்ல பார்க்க வேண்டிய விஷயம், அழகேசனுடைய ஆக்சிடெண்ட் ரிப்போர்ட், எஃப்.ஐ.ஆர், ஆஸ்பத்திரில சர்ஜன்கள் ரிப்போர்ட்டு, சர்ட்டிபிகேட்டு எல்லா டாக்குமெண்ட்டையும் பாத்துருங்க.''

''எல்லாம் பொய்.''

''எப்படிம்மா அத்தனை பெரிய பொய்! சாத்தியமே இல்லம்மா, எத்தனை பேர் அதில இன்வால்வ் ஆகியிருக்காங்க தெரியுமா? ட்ராஃபிக் போலீஸ், ஆர்.ஏ. புரம், கேளம்பாக்கம், கானாத்தூர் போலீஸ் ஸ்டேஷன்ங்க, அப்புறம் ட்ராபிக் போலீஸ் பதிஞ்ச ஆக்சிடெண்ட் ரிப்போர்ட்டு, கவர்மெண்ட் டாக்டருங்க, மேஜிஸ்ட்ரேட்டுங்க, எப்படிம்மா சாத்தியம்! யார் உங்கிட்ட இல்லாததும் பொல்லாததும் சொல்றாங்க''

''ஒருத்தர்''

''அதான, யாருங்கறேன்? கூட்டி வா அந்தாளை''

'ஓ நோ, அவனை அடிச்சே கொன்னுடுவீங்க'' ராகவேந்தர் குறுக்கிட்டு, நர்ஸ் வந்து மாரைத் தடவிக் கொடுப்பதை உதறித் தள்ளி, மிகுந்த கோபத்துடன், ''பாரும்மா, நான் குணமாகி வந்த உடனே, இதை கவனிக்

''சீரியல் சுபமாகத்தானே முடியுது... ஏன் அழுற?''

''முடிஞ்சுடுச்சே!''

- அம்பை தேவா



கிறேன். நீ சொல்றது நிஜம்னு தெரிஞ்சா...''

"தெரிஞ்சா?"

அவர் கண்களில் நீர் நிரம்பியது. "செத்துப் போயிடறேம்மா. அந்த மாதிரியான இதயம் எனக்கு வேண்டாம்" மூச்சுத் திணறல் ஏற்பட்டு, ஆக்சிஜன் வைக்க வேண்டியிருந்தது.

''பாத்தியா, பெரியவரை எப்படி அப்செட் பண்ணிட்ட, உன்னை உன்னை...''

மஞ்சரி முகத்தில் எந்தவிதக் கருணையும் காட்டாமல் "நான் கண்டுபிடிக்கத்தான் போறேன். உங்களை எல்லாரையும் நடுத்தெருவில நிறுத்தத்தான் போறேன்" என்று இரைச்சலாகச் சொன்னாள். ராகவேந்தர் அவள் கையைப் பற்ற, அதை உதறிவிட்டு வெளியே வந்தாள். சற்று நேரம் பாத்ரூமில் அழுதாள்.

ராகவேந்தர் ஆசுவாசப்படுத்திக் கொண்டார். ''என்ன மாப்பிளை, இப்படிச் சொல்லிட்டுப் போறா...?''

"நீங்க இதுக்கெல்லாம் அப்செட் ஆகாதிங்க. அப்புறம் இத்தனை பாடுபட்டுச் செய்த ஆபரேசன் பலனில்லாமப் போயிரும்"

''அவ சொல்றதில் ஏதாவது, ஏதாவது அர்த்தம் இருக்கா? எதுக்காக அப்படி ஒரு அபாண்டத்தைச் சொல்லிவிட்டு கூலாப் போவுது அந்தப் பொண்ணு"

''அந்தப் பையனைக் கல்யாணம் செய்துக்கறதா இருந்திச்சுங்க. உங்ககிட்ட சொல்லலை. அவனே விபத்துல அடிபட்டு, உங்களுக்கு இதயம் கொடுக்கும்படியா ஆனது அகஸ்மாத்தான விஷயம். அவ நம்பலை. எல்லாரும் சேர்ந்து சதி செய்துட்டாங்கன்னு மனசில பதிஞ்சிருச்சு"

"இதை நீக்க என்ன செய்யணும்?"

"நீங்க ஒரி பண்ணிக்காதீங்க. நாங்க பாத்துக்கறோம். கம்பெனில கூட, நீங்க வந்தா போதும். மத்ததெல்லாம் நாங்க பாத்துக்கறோம். கம்பெனி ரொம்பப் பெரிசா போய்க்கிட்டிருக்கு. ஒரு பெரிய ஐபிஎம் ப்ராஜெக்ட் வருது. எல்லா அமெரிக்கக் கம்பெனிகளும் வந்து குமியறாங்க. இப்ப பெரிய பெரிய சந்தர்ப்பம். உங்களுக்கு குணமாயிருச்சுன்னு தெரிஞ்ச உடனே, சன்செக்ஸ் எப்படி எகிறி குதிச்சுது தெரியுமா? அந்த செய்தியை வச்சே கோடீஸ்வரனானவங்க நெறையப் பேரு"

"என்னால வீட்ல இருக்க முடியாது, எப்ப ஆபீஸுக்குப் போலாம்னு துடிச்சுக்கிட்டிருக்கேன்"

"பாத்தீங்களா, இனிமே நீங்க ஆபீஸ் போக வேண்டாம் மாமா. எல்லாம் மாறிடுச்சு"

"இப்ப யாரு எம்.டி?"

"பார்கவாதான்"

"பார்கவா, அந்த மலை முழுங்கியா?"

"மாமா, பார்கவா போர்டு மெம்பர்ங்க அத்தனை பேரையும் கைல வச்சிருக்கான். அவனை விட்டுப் பிடிக்கிறேன், பாருங்க. உங்களுக்கு எதுக்கு? டீவி பாத்துக்கிட்டு கம்மா படுத்துக்கிடங்க"

"என்ன சொன்ன? படுத்து...?"

"படுத்துகிட்டிருங்கன்னேன்!"

"வேற ஏதோ வார்த்தை சொன்னே"

"சேச்சே, உங்கமேல உள்ள மரியாதை எனக்கு என்னிக்குமே குறையாது மாமா"

மஞ்சரி அழகேசனின் தாயைப் பார்க்கக் கிளம்பியபோது, அவளருகே ஒரு மோட்டார் சைக்கிள் தொடர்ந்தது.

(தொடரும்)

கோவில் முரசு; கோலம் புதுசு!



# வீட்டுக்கு விளக்கேற்றும் ஆலயம்



• ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர்

"ஐயோ, டீச்சர், இந்த நேரத்தில உள்ளேயா போகப் போறீங்க?" கேட்ட குரலில் உச்ச டெஸிபலில் பதற்றம்.

"ஆமா" டீச்சர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

"உள்ளார பெரிய பெரிய பாம்பெல்லாம் இருக்கு டீச்சர்."

"இருக்கட்டும். புள்ளையா குட்டியா, எனக்கு என்ன? போனாப் போறது. போய் விளக்கேத்தி கும்பிட்டுட்டு வந்துடறேன்."

இடிந்து, சிதிலமடைந்து பாழடைந்து கிடந்த அந்தக் கோயிலுக்குள் போய், முடிந்தவரை சுத்தம் செய்து, அதிக பூஜையோ, வேறு உற்சவங்களோ, எதையும் பார்க்காமல் 50 வருஷங்களாக வாடிப் போயிருந்த விருத்தாஜலேசுவரருக்கும், பிரஹந்நாயகிக்கும், பக்கத்தில் லக்ஷ்மி நாராயணருக்கும் விளக்கேற்றிவிட்டு வந்தார் டீச்சர். ஒருவேளை, ஒரு நாள் இல்லை. ஏதோ ஒரு சடுபாடு வந்து... அந்தத் திருப்பணி 48 நாட்கள் தொடர்ந்தது. பலன்...! 'குழந்தையா குட்டியா?' என்று வருத்தப்பட்ட அந்த ஆசிரியையின் வீட்டில் ஒரு தீபம் உதித்தது. குழந்தை ஒன்று அழகாகப் பிறந்து, அவர் வீடு ஒளிர்ந்தது.

அசந்துபோன ஊர் மக்களுக்கு அப்புறம்தான் சிரத்தை பிறந்தது. தலைமைச் செயலகத்திலிருந்து ஓய்வு பெற்று ஊர் வந்த ரெங்கராஜனுக்கு, தாம் ஓய்வு பெற்றதே இதற்குத்தான் என்று தோன்றிவிட்டது. ஏழு வருஷங்கள் ஓடி ஆடி, அன்பர்களைத் தேடித் தேடி கோயிலைப் புதுப்பிக்க பகீரதப் பிரயத்தனம் செய்து, 6.6.2004-ல் கும்பாபிஷேகம் நடக்கவும் ஏற்பாடு செய்துவிட்டார்.



* புதிய திருக்கோலம்

சோழ ராஜராஜனால் கட்டப்பட்டதாம் இத்திருக்கோயில். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டும்போது சிற்பிகளும், பணியாட்களும் ஓயாது வேலை செய்வதால் அலுப்புத் தட்டாமல் இருக்க, நடனம், பாட்டு, கேளிக்கை என்று ஏற்பாடு செய்திருந்தான் ராஜராஜன். அப்படி நடனமாட வந்த கலைஞர்களுக்கும், தங்க குடியிருப்புகளும் வசதிகளும் தாராளமாகச் செய்தான். அந்த இடங்களை சோழகச்சேரி என்றார்கள். அப்படி ஒரு சோழகச்சேரிதான் இந்த மேலதிருமதிக்குன்னம் கிராமம். கலைஞர்களுக்காகவும், சுற்றியுள்ள ஊர் மக்களுக்காகவும் ஆலயங்களும் எழுப்பித் தந்தான் ராஜராஜன். விருத்தாஜலேஸ்வரரும், லக்ஷ்மி நாராயணரும் இங்கே கோயில் கொண்டது இப்படித்தான் என்கிறார்கள். இங்கிருந்த ராஜராஜனது சிலை, தற்போது திருவாரூர் அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

இப்போது குடமுழுக்கும் நடந்து கோயில் பொலிவு பெற்றது போலவே, சுற்றியுள்ள நிலங்களிலும் நல்ல விளைச்சல், ஏழ்மை தாண்டவமாடிய கிராமங்களில் மெல்ல மெல்ல சுபிட்சம் குடியேறிவிட்டது.

குழந்தைப் பேறு வேண்டுமா, திருமணம் தடையேதுமின்றி நடக்க வேண்டுமா? திருவாரூரிலிருந்து 13 கி.மீ.தான் சோழகச்சேரி கிராமம். வாருங்கள், விருத்தாஜலேஸ்வரரையும் லக்ஷ்மி நாராயணரையும் கண்டு வரங்களைப் பெற.

- விஷ்வக்

தகவல், படங்கள்:
பி. கோவிந்தராஜு,
சோழகச்சேரி

* விருத்தாஜலேசுவரர்



* பிருஹந்நாயகி



"தமிழ்நாட்டிலுள்ள பாகவதர்கள், பாடகர்கள் ஆகியவர்களில் ஒரே ஒருவருடைய பாட்டைத்தான் நீர் கேட்கலாம். அப்படியானால் யாரைத் தேர்ந்தெடுப்பீர்!" என்று என்னைக் கேட்டால்,

சீனிவாசய்யரிடம் வந்தால், ஒரு பெரிய முட்டுக்கட்டைதான். அவருடைய பாட்டு வேண்டாமென்று தள்ளிவிட்டு எப்படிப் போவது? ஆனாலும் மேற்படி கேள்விக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று வற்புறுத்தினால், திணறித் திண்டாடி விட்டு, முடிவாக மாங்குடி சிதம்பர பாகவதரைத்தான் தேர்ந்தெடுப்பேன். ஏனென்றால், ஏறக்குறைய பரிபூரண சங்கீதத்துக்குரிய அம்சங்கள் எல்லாம் அவருடைய பாட்டில் பொருந்தியிருக்கின்றன என்பது என் அபிப்பிராயம். அத்தகைய சரீரத்தில் பகவான் எப்படிப்பட்ட சாரீரத்தைத்தான் அமைத்திருக்கிறார்! இவ்வளவு வருஷ காலமாய்ப் பாடிய பிறகு அந்தச் சாரீரத்தில் துளி கம்மல் வேண்டுமே, இடையாது.



அதற்குப் பதில் சொல்வது மிகவும் கஷ்டமாய்த்தானிருக்கும். ஒவ்வொரு பாடகராகச் சிந்தித்து வரும்போது, அவரவர்களிடம் சில அபூர்வ சரக்குகள் இருப்பதால், தள்ளிக் கொண்டு மேலே செல்வது மிகவும் சிரமம். உதாரணமாக, செம்மங்குடி

# கொழுக்கட்டை பாகவதர்!

எவ்வளவு தூரம் சாரீரத்தை அடக்கிக் கட்டுக்குள் வைத்திருக்கிறார்? இடி முழக்கம் போன்ற தொனியைக் கிளப்பும் அதே தொண்டை, அடுத்த நிமிஷத்தில் வீணாகானம் போன்ற நாதத்தைத் தருகிறது!

பாகவதருடைய சங்கீதத்தில் சுருதி, லயம் இவைகளைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. அவை பாகவதருக்கு அடிமை பூண்டு தொண்டு புரிகின்றன.

கதை சொல்வதில் பாகவதருடைய திறமை பிரசித்தியானது.

ரஸிகத் தன்மையில் தலை சிறந்த கல்விமான்களும், அதை அநுபவிக்கலாம். கல்வியறிவில்லாத சாதாரண ஜனங்களுக்கும் அது ருசியாயிருக்கும்.



"கிருஷ்ண பரமாத்மாவைச் சிசுபாலன் திட்டத் தொடங்கினான். பகவானுக்கு முன்னால் வெற்றிலைத் தாம்பாளமும், பாக்குச்சடையும் இருந்தன. சிசுபாலன் வைய வைய, பகவான் ஒவ்வொரு பாக்காகப் போட்டு வசவுகளை எண்ணிக் கொண்டே வந்தார். நூறு வசவுகள் ஆனதும், "அடடே! உனக்குத்தானேடா முதல் தாம்பூலம் கொடுக்க வேண்டுமென்கிறாய்? இந்தா, எடுத்துக்கொள்!" என்று எதிரிலிருந்த வெற்றிலைத் தட்டை எடுத்து வீசி எறிந்தார். அதுவே சக்ராயுதமாகிக் கரகரவென்று சுழன்று சென்று சிசுபாலனை சம்ஹரித்தது" என்று அவர் கூறும்போது, ரஸிகர்கள் நாவைச் சப்புக் கொட்டிக் கொண்டு அதனுடைய நயத்தை அனுபவிக்கிறார்கள்.

அடுத்தாற்போல், அவர் உணவு வகைகளை அடுக்கும் பாட்டுப் பாடி வருகையில், 'கொழுக்கட்டை' என்பதையும், 'பொரிச்ச குழம்பு' என்பதையும் பாவத்துடன்(!) கூறும்போது சர்வ ஜனங்களும் சிரிக்கிறார்கள். இவ்வாறு உயர்தர நகைச்சுவையும், சாதாரண விகடமும் அவர் கதையில் காணலாமாயினும், ஆபாச அருவருப்பு ரஸங்களை மட்டும் காணவே முடியாது.

இன்னும் ஒரு வார்த்தை. பாகவதரைப் பற்றிச் சித்திரத்துடன் இன்னொரு கட்டுரை வெளியாகுமென்று நான் கூறி அதிக காலம் ஆயிற்று. இத்தனை தாமதம் ஏனென்றால், பாகவதரைப் போன்ற பெரிய மனிதர் படத்தைப் போடுவதற்கு ஆனந்தவிகடனுடைய 'ஸைஸ்' அவ்வளவு பொருத்தமில்லாமலிருந்ததுதான். ஆனாலும் இதற்காக விகடனுடைய ஸைஸைப் பெரிதாக்குவது சாத்தியமில்லையென்று தெரிந்துவிடவே, பாகவதருடைய மன்னிப்பை எதிர்பார்த்து, ஏதோ இருக்கிற இடத்தில் படத்தைப் போட்டு விடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.)

மாங்குடி சிதம்பர பாகவதர்,
- கல்கி களஞ்சியம்,
வானதி பதிப்பகம்

அந்த நாள் ஞாபகம்

ஏவி.எம் நிறுவனத்துக்கு பாரதிராஜா ஒரு படம் இயக்கித் தர வேண்டும் என்ற ஆசை, எங்களுக்கு ரொம்ப நாட்களாக இருந்தது. 'புதிய வார்ப்புகள்' படம் வெளிவந்து வெற்றி பெற்ற போதே, எங்கள் படத்துக்காக அப்பச்சி, பாரதிராஜாவுக்கு அட்வான்ஸ் கொடுத்திருந்தார். ஆனாலும் அந்தத் தருணம் என்னமோ வாய்க்காமலேயே இருந்தது.

"ஸாரி... நான் எப்போதோ உங்களுக்குப் படம் பண்ணியிருக்க வேண்டும். தள்ளிக்கொண்டே போகிறது... என் தவறுதான். விரைவில் பண்ணுகிறேன்" என்று உறுதி தந்தார்.

எங்களுக்காக அவர் இயக்கிய படம்தான் புதுமைப்பெண்! அருமையான படம். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு வர்த்தக

# வரி விலக்கிய

ரீதியாக வெற்றியடையவில்லை என்பதில், எல்லோருக்கும் - குறிப்பாக பாரதிராஜாவுக்கு வருத்தமே.

அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்களுக்கு, நடிகர் சங்கத்தில் அந்தப் படத்தைப் போட்டுக்காட்டினோம். 'புதுமைப்பெண்' அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. பாராட்டினார்.

பாராட்டுகள் குவிந்தனவே தவிர, படம் ஓடவில்லை.

ஒருநாள் என் அறைக்கு வந்த பாரதிராஜா 'கொஞ்சம் சின்னவரிடம் பேசலாமா?' என்று என்னிடம் கேட்டார். சின்னவர் என்றால் எம்.ஜி.ஆர்.

நான் உடனே தோட்டத்துக்கு ஃபோன் போட்டேன்.

"வாங்க முதலாளி... வாங்களேன்... இங்கே வாங்க... உட்கார்ந்து பேசலாம்" என்றார் எம்.ஜி.ஆர்.

நானும் பாரதிராஜாவும் சென்று அவரைப் பார்த்தோம். 'புதுமைப் பெண்'ணின் வர்த்தகரீதியான தோல்வி பற்றிய எங்கள் கவலையை அவருடன் பகிர்ந்து கொண்டோம். விஷயத்தைக் கேட்ட எம்.ஜி.ஆர், உடனே இன்டர்காமில் தம் உதவியாளர் சம்பத்தைக் கூப்பிட்டார்.

"வீரப்பாவுக்குப் போடப்பா" என்றார்.

லைனில் வந்த அன்றைய அமைச்சர் ஆர்.எம். வீரப்பனிடம் 'புதுமைப்பெண்' படத்துக்கு வரி விலக்கு தரணும். உடனே செய்யணும்" என்று உத்தரவிட்டார்.

வீரப்பன் உடனே செயல்பட்டார். முன்பு ஐந்து ரூபாயாக இருந்த டிக்கெட், வரி விலக்கு சலுகைக்குப் பின் மூன்று ரூபாயாகக் குறைக்கப்பட்டது. 'வரி விலக்கு அறிவிப்பு, படத்தைத் தூக்கி நிறுத்தியது. தியேட்டர்களில் ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. எட்டு ரூபாய்



ஏவி.எம்.சரவணன்



• 'உன்னைத்தானே...'

# வள்ளல்!

கொடுத்து பிளாக்கில் வாங்கி புதுமைப்பெண் பார்த்தவர்கள் ஏராளம்.

ஐந்து ரூபாய் என்று டிக்கெட் இருந்தபோது வாங்கிப் பார்த்தவர்கள், அது மூன்று ரூபாயாகக் குறைக்கப்பட்டபின்பு டிக்கெட் கிடைக்காததால், பிளாக்கில் எட்டு ரூபாய் கொடுத்து வாங்கிய விநோதம் வேறெந்த தமிழ்ப்படத்துக்காவது இருந்திருக்குமா என்பது சந்தேகம்.

மதுரையில் ஒரு தியேட்டரில் படம் 208 நாட்கள் ஓடியது. படத்தின் வெற்றியில், முதல்வர் எம்.ஜி.ஆரின் பங்கு மிகப் பெரியது.

வரதட்சணைக் கொடுமையை அடிப்படையாகக் கொண்ட அந்தப் படம், மத்திய அரசின் விருதுக்குத் தகுதியானது என்று கருதி அனுப்பினோம். ஆனால், ஒருநாள் தாமதமாகி விட்டதால் வாய்ப்பை இழந்தோம்.

மாநில அரசின் பரிசுக்காக அந்தப் படம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்படவும், விழா நடக்காமல் அப்படியே முடங்கிவிட்டது. ஆக, அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் எந்தவிதமான விருதையும் அந்தப்படம் பெறாமலேயே போய்விட்டது.

## நல்லவனுக்கு நல்லவன்

'தர்மாத்முடு' என்றொரு தெலுங்குப் படத்தைப் பார்த்த, ஏ.ஸி. திரிலோக்சந்தர் அதைத் தமிழில் எடுக்கலாம் என்று என்னிடம் பலமாகப் பரிந்துரை செய்தார். அதிலும் ரஜினிகாந்தை வைத்து இதை எடுக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. பாலாஜியும் அந்தப் படத்தைப் பார்த்திருந்தார். ஆனால் சிவாஜிக்கு சரிப்பட்டு வராது என்று அவர் நினைத்ததால், அந்த முயற்சியைக் கைவிட்டார்.

அந்தத் தெலுங்குப் படத்தை நாங்கள் போட்டுப் பார்த்தோம்.

''இது ஹிட்லர் உமாநாத் படம். ஓடாத படம். அதை தெலுங்கில் எடுத்திருக்கிறார்கள். பின் அதையே நாம ஏன் எடுக்கணும்?'' என்று கேட்டார் பஞ்சு அருணாசலம்.

ஆனால், எனக்கும் எஸ்.பி. முத்துராமனுக்கு மட்டும், அந்தப் படத்தில் வெற்றிக்கான ஏதோ

திரையுலக நினைவுகள் 36

ஒன்று இருப்பதாகவே பட்டது.

விசுவைக் கூப்பிட்டுப் படத்தைப் போட்டுக்காட்டினோம்.

"ரொம்ப நல்லா பண்ணலாம் ஸார்... சின்னச் சின்ன மாற்றங்கள் செய்தால் போதும்... நல்லா வரும்..." என்று யோசனை சொன்னார்.

அவரது பணிக்காக நான் ஒரு தொகையைக் குறிப்பிட்டேன்.

'ரொம்பக் கம்மி ஸார்' என்றார் விசு.

"இல்லை விசு. இப்ப ஒத்துக்குங்க... பின்னால் பார்க்கலாம்' என்று சொல்லி அவரை ஒப்புக் கொள்ள வைத்தேன்.

இதற்கிடையில் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இந்தப் படத்தில் - அதாவது தெலுங்குப் பதிப்பில் - ஒரு மோனோ ஆக்டிங் காட்சி வரும். அந்த மோனோ ஆக்டிங் 'ஹிட்லர் உமாநாத்' படத்தில் நாகேஷ் செய்தது. ஹைதராபாத்தில் ஒரு விழாவில் கலந்துகொண்ட நாகேஷ் அந்த மோனோ ஆக்டிங்கை அப்படியே மேடையில் செய்துகாட்ட, அதைப் பார்த்த தெலுங்குத் தயாரிப்பாளர் தனது 'தர்மாத்முடு' படத்தில் அந்தக் காட்சியைப் புகுத்திக் கொண்டார். நாங்கள் இதைச்சுட்டிக் காட்டியபோது 'ஆமாம்' என்று ஒப்புக் கொண்டதுடன், அதற்காக விலையில் கொஞ்சம் குறைத்தும் தந்தார்.

படம் முடிந்தது. கிளைமாக்ஸ் காட்சி ரொம்பவும் மென்மையாக, ஒரு கவிதை போல வந்திருந்தது. படத்தை முழுவதுமாகப் போட்டுப் பார்த்தபோது, அந்த கிளைமாக்ஸ் எனக்கு உடன்பாடாக இல்லை.

"படத்தை மசாலாத்தனமாக எடுத்திருக்கிறோம். அதற்கு இப்படியொரு மென்மையான கிளைமாக்ஸ் சரியாக வராது. மாற்றி எடுப்போம்" என்றேன்.

ஆனால் ரஜினிக்கும், எஸ்.பி. முத்துராமனுக்கும் அந்த மென்மையான கிளைமாக்ஸே பிடித்திருந்தது.

"இந்தப் படம் 'ஆறிலிருந்து அறுபது வரையோ', 'எங்கேயோ கேட்ட குரலோ' இல்லை. மென்மையான அது போன்ற படங்களுக்கு இதுமாதிரியான ஃபினிஷிங் ஓ.கே. ஆனால் நாம் எடுத்திருக்கும் முறைக்கு ஆக்ஷன் கிளைமாக்ஸ்தான் எடுபடும்" என்றேன்.

சென்ஸார் ஆகிவிட்ட நிலையில் அப்போது படம் இருந்தது.

"ஒரு ஆக்ஷன் கிளைமாக்ஸையும் படமாக்குவோம். அதையும் சென்ஸாருக்கு அனுப்பி ஓ.கே வாங்கி விடுவோம். அப்புறம் இதுவா, அதுவா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்" என்றேன்.

அப்படியே செய்தோம்... ஆக்ஷன் கிளைமாக்ஸோடு படத்தைப் பார்த்தபோது, அனைவருக்கும் அதுவே பிடித்துப் போயிற்று. அப்படியே படத்தை வெளியிட்டோம்.

• 'ஒரு தென்றல் புயலாகி...'



படம் வெற்றிகரமாக ஓடியது.

விசுவை அழைத்து அவருக்கு நான் தருவதாகச் சொன்ன தொகையைப் போல இரு மடங்கு தொகையை அவர் கையில் தந்தேன். அதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. அவருக்கு ஒரே த்ரில்!

ரஜினியை வைத்து நாங்கள் எடுத்த படங்களிலேயே, எனக்கு மிகவும் பிடித்த படம் 'நல்லவனுக்கு நல்லவன்'தான்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு அந்தப் படத்தை சென்னை தொலைக் காட்சியில் போட்டார்கள்.

அன்று எனக்கு தொலைபேசியில் எதிர்பாராத ஒரு குரல்... ரஜினி பேசினார்!

"டீ.வியில் படம் பார்த்தேன் ஸார். என்னமா எடுத்திருக்கோம்!



• 'மிஸ்டர் பாரத்'தில் ரஜினி, சத்தியராஜ்

அடேயப்பா.... அப்ப தெரியல. இப்ப படம் பார்க்கிறது போதான் தெரியுது ஸார்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

பல இனிமையான விஷயங்கள் இந்தப் படத்தில் இருந்தன.

ஒரு வேலைநிறுத்தம் ஸீன் உண்டு. அது டீ.வி.எஸ் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை வைத்து அமைக்கப்பட்டது.

'எங்கேயோ கேட்ட குரல்' தெலுங்குப் படத்தில், ராதிகாவின் அருமையான பர்ஃபாமென்ஸைப் பார்த்துதான் நாங்கள் இந்தப் படத்தில் அவருக்கு எமோஷனல் ரோல் கொடுத்தோம். அற்புதமாகச் செய்தார்.

'உன்னைத்தானே' என்றொரு பாட்டு. அது வி.ஸி. குகநாதன் படத்துக்காக வைரமுத்து எழுதி, இளையராஜாவின் இசையில் ஜேசுதாஸ் பாடி, பின்னர் அந்தப் படத்தில் பயன்படுத்தப்பட முடியாமல் போன பாட்டு. எனக்கு ஜேசுதாஸ் மீது ஈடுபாடு உண்டு. அவரது பாடல்களை மிகவும் ரசிப்பவன் நான்.

குகநாதனிடம் நோ அப்ஜெக்ஷன் ரிப்போர்ட் வாங்கி, அதன் பிறகு 'உன்னைத் தானே' என்ற அந்தப் பாடலை இந்தப் படத்தில் சேர்த்தோம் என்பது, பலருக்குத் தெரியாத தகவல்.

**மி**ஸ்டர் பாரத்!

சத்யராஜை வைத்து நாங்கள் எடுத்த படம். இதில் 'என்னம்மா கண்ணு' என்ற பஞ்ச் டயலாக் அடிக்கடி வரும்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், நான் இந்த வார்த்தைகளை எடுத்துக்கொண்டது ஆனந்த் தியேட்டர் அதிபர் ஜி. உமாபதியிடமிருந்துதான்.

அவரிடம் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாலே 'என்னம்மா கண்ணு' என்று அடிக்கடி பயன்படுத்துவார்.

அதையே பஞ்ச் டயலாக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நான் சொன்ன யோசனை க்ளிக் ஆயிற்று.

"என்னம்மா கண்ணு, சௌக்கியமா?" என்று தொடங்குவது மாதிரி ஒரு பாட்டையும் நாங்கள் இதில் போட்டோம்.

இதில் சுவையான செய்தி என்ன வென்றால், இந்தப் படத்தை நாங்கள் உமாபதியின் ஆனந்த் தியேட்டரிலேயே வெளியிட்டோம்.

'உங்ககிட்ட இருந்துதான் இந்த டயலாக்கை எடுத்துக் கொண்டோம்' என்று உமாபதியிடமே நான் சொன்னேன். சிரித்தார்.

இந்தப்படத்தில் ரகுவரனுக்கும் நல்ல ரோல்.

சிறிய ரோல்தான் என்றாலும் அது பற்றிக் கவலைப்படாமல், அதை செம்மையாகச் செய்ததை ரகுவரனின் சிறப்பியல்பாகக் கருதுகிறேன்.

(தொடரும்)

# இங்கும் பெண்கள்



* நதீம்



* ஸ்ரீனிவாசன்

இன்றைக்கும் முழங்காலுக்குக் கீழே உடை அணிபவர்கள்தான் சென்னை மக்கள். ஆனால் ஆச்சர்யமாக இந்தியாவிலேயே ஃபேஷன் டெக்னாலஜி படிப்பில் கொடி கட்டிப் பறக்கிறது சென்னை. 'ஃபேஷன் பற்றிய நுணுக்கங்களை அறிந்து கொள்ள வேண்டுமா, ஓடு சென்னைக்கு' என்பதுதான் இன்றைய நிலவரம்.

ஃபேஷன் டிசைனிங்குக்கு இருக்கும் மவுசு பற்றி மேலும் விவரமறிய Institute of Design (IOD) நிறுவனத்தில் நடந்த ஃபேஷன் ஷோவில், கலக்கலாக வடிவமைத்து முதலிடம் வென்ற ஸ்ரீனிவாசனைச் சந்தித்தோம். "சார், நான் மெக்கானிகல் இன்ஜினியரிங் படிச்சுட்டு ஃபேஷன் டெக்னாலஜி மோகத்துல, அதை பாதியிலேயே விட்டுட்டு வந்தவன்'' என்று சிரித்தவர் தொடர்ந்தார்.

''இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். படிக்கிற காலத்துலேயே எங்க இன்ஸ்ட்டிடியூட் மூலமா டிசைனரா அங்கீகாரம் கிடைச்சிருக்கு. ரோஹன்ங்கிற நடிகருக்கு காஸ்ட்யூம் டிசைனரா நானும் என் ஃப்ரெண்ட்ஸும் நியமிக்கப்பட்டிருக்கோம். பல பிரபல டிசைனர்ஸ் சென்னையோட மதிப்பு அறிஞ்சு, அவங்களோட பொடிக் ஷாப்களை இங்கே ஆரம்பிச்சிருக்கிறது எங்களை மாதிரியான ஸ்டூடண்ட்ஸுக்கு வரப் பிரசாதம்'' என்றவர், தாம் வென்ற போட்டியில் பாரம்பரியம், மாடர்ன் இரண்டும் கலந்த உடைகளை வடிவமைத்து, வந்திருந்த பார்வையாளர்களை அசத்தியிருக்கிறார். முக்கிய விஷயமாக, "இது போன்ற ஃபேஷன் தொடர்பான படிப்புகளிலும் ஷோக்களிலும் அதிக ஆர்வம் காட்டுவது பெண்கள்தான்'' என்கிறார். ம்... இங்கேயும் ஆட்சி அவங்க கையிலதான்னு சொல்லுங்க.

"சரி, பேஷன் எங்கிருந்து பிறந்து பல இடங்களில் ஊர் சுற்றப் போகிறது?'' என்றோம். அதற்கு, ''சாதாரண மனிதர்களிடமிருந்து கூட ஃபேஷன் தோன்றியிருக்கு. ஃபேடட் ஜீன்ஸ், பேண்ட்டுல அங்கங்கே கிழிச்சுக்கறது, இதெல்லாம் வேறெங்கேயிருந்து வந்ததுன்னு நினைக்





கிறீங்க?'' என்று படு ஷோக்காக பதில் வருகிறது.

இளைஞர்கள் மட்டுமல்லாது, குடும்பத் தலைவிகளும் ஃபேஷன் டிசைனிங் படிப்பில் ஆர்வம் காட்டுவதாகச் சொல்கிறார் இந்நிறுவனத் தலைவர் நதீம். ''ஓய்வு நேரத்துல டிரஸ் டிசைன் பண்ணி, நாலு காசு பார்க்கலாம். ரெடிமேடு கடை வைக்கலாம். கொஞ்சம் கற்பனையும், அழகுணர்ச்சியும் இருந்தால் தூள் கிளப்பலாம்!'' என்கிறார்கள் மாணவத் திருமதிகள் சுதர்ஷணா, ஜோதியும்...

தலைப்பு ஜஸ்டிஃபைட்!

**- செந்தில்**













# ஆட்சி!



பாட்டியிடம் கதை கேட்பது,
கூட்டாஞ்சோறு சமைப்பது,
மைதானத்தில் விளை
யாடுவது, மாட்டு வண்டிப்
பயணம், மரம் ஏறுவது,
குளத்தில் நீந்துவது,
நண்பர்களுடன் டிராமா
போடுவது என எனக்குக்
கிடைத்த அற்புதமான
அனுபவங்கள் என்
குழந்தைகளுக்குக் கிடைக்
காததில் எனக்கு
வருத்தம்தான்...

... ஆனால் ஒரே ஒரு
விஷயத்தில் எனக்கு
ரொம்ப திருப்தி...
அன்று நான் நேசித்த
**கோகுலத்தை**
இன்று என் குழந்தை
களும் சுவாசிப்பதை
பெருமையாக
நினைக்கிறேன்!



குழந்தைகளின் குதூகலம்!

# கோகுலம்

47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-600 032

தனி இதழ் : ரூ.6/-    ஆண்டுச் சந்தா : ரூ.72/-

# தகுதி ஏது?

ஒருவன் தப்புப் பண்ணுகிறான் என்றால் கோபம் கொள்கிறோமே, அப்படியானால் நாம் தப்புப் பண்ணாதவர்களா? ஒருவனைப் பாபி என்று நாம் துவேஷிக்கும்போது, நாம் அந்தப் பாபத்தைப் பண்ணாதவர்தானா என்று நினைத்துப் பார்க்க வேண்டும். காரியத்தில் பண்ணாவிட்டாலும் மனசால் பண்ணியிருப்போம். நாம் அநேக தப்புக்களை, பாபங்களைப் பண்ணிக்கொண்டேதான் இருக்கிறோம். நம்மைவிடத் தப்பும் பாபமும் பண்ணுகிறவர்கள் இருக்கலாம். நம் மனசு ஏதோ ஓர் அளவுக்குப் பக்குவம் அடைந்திருப்பதால், நாம் இந்த அளவு பாபத்தோடு நிறுத்துகிறோம். அவனுடைய மனசுக்கு இந்தப் பக்குவம் கூட வராததால் இன்னும் பெரிய பாபம் பண்ணுகிறான். நாம் செய்கிற தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு எத்தனை பாடுபட வேண்டியிருக்கிறது? நம்மையும் விட மோசமான நிலைக்கு இறங்கிப் பாபங்களைச் செய்யப் பழகி விட்ட இன்னொருத்தனின் மனசுக்கும், அதிலிருந்து மீளுவது சிரமமான காரியம்தான். அப்படிப்பட்டவனோடு நாம் சேர்ந்திருக்க வேண்டும் என்பதில்லை.

அஸத்ஸங்கத்தைவிட்டு ஸத்ஸங்கத்தில் சேர்வதுதான் ஆத்மாபிவிருத்திக்கு முதல்படி என்று சகல சாஸ்திரங்களும் சொல்கின்றன. ஆனால் பாபிகளை நாம் வெறுப்பதிலும், அவர்களைக் கோபிப்பதிலும் பயனில்லை. அவர்களுடைய மனசும் நல்ல வழியில் திரும்ப வேண்டும் என்று பிரார்த்திப்பதொன்றே நாம் செய்ய வேண்டியது. ஈசுவரானுக்கிரகத்தில் நம்மில் யாருக்காவது அநுக்கிரக சக்தி கிடைத்திருந்தால், அதை இந்தப் பாவிகள் கரையேறுவதற்கே உபயோகிக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி
காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்



சிறுகதை

கதை ரொம்ப யதார்த்தம்! ஒரு மாமியாரா, என்னால பார்வதியின் உணர்வைத் துல்லியமா புரிஞ்சுக்க முடியுது! மகளுக்குக் கல்யாணமானால் வீட்டுக்குப் புதிய மகன் கிடைப்பான். மகனுக்குக் கல்யாணமானால், பொல்லாப்புதான் கிடைக்கும் என்பார்கள்... பார்வதிக்குக் கிடைத்ததோ...

- சியாமளா (இல்லத்தரசி)



* படம் : ஸ்ரீஹரி

# மாமியார் மனசு

அதிகாலை வெயிலில் தண்ணீர் தெளிக்கப்பட்ட காய்கள் பளபளத்தன. எதை வாங்கலாம் என்று பார்வதியின் கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன.

"கத்தரிக்காய் நல்லாயிருக்கும் அம்மா! ஒரு கிலோ நிறுத்தட்டுமா?" என்றான் நல்லகண்ணு.

பார்வதியின் கண்கள் கேரட்டும், பீட்ரூட்டும், வெள்ளரிக்காய்களும் வைக்கப்பட்டிருந்த மேல்புறத் தட்டுகளுக்குத் தாவின.

முதல்நாள் மாலை மருமகள் அபூர்வாவுக்கு குமட்டல், வாந்தி இருந்ததால், டாக்டரிடம் காட்டிய போது "திருமணமாகி எத்தனை நாட்கள் ஆகின்றன?" என்று கேட்டார். "மூன்று மாதங்கள்" என்று அபூர்வா பதிலளித்ததும், "வாழ்த்துகள்! இன்னும் ஏழெட்டு மாதங்களில் அம்மா ஆகப் போகிறாய்" என்றபோது, சிவப்பான அபூர்வாவின் கன்னங்கள் மேலும் சிவந்துவிட்டன. பார்வதியோ மருமகளைக் கட்டிப்பிடித்து முத்தமே தந்துவிட்டாள்.

பார்வதி அவளை மகளாய்த்தான் பார்த்தாள். நல்ல வைட்டமின், நார்ச்சத்துள்ள காய்கறி, பழங்களாய் மருமகளுக்குக் கொடுங்கள் என்று பட்டியலே போட்டுத் தந்திருந்தார் டாக்டர். எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து பொறுக்கி எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

ஞாயிறுடன் இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் விடுமுறை. பையன் ஜெயேஷும் மருமகளும் இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. 'நல்லவேளை, பிளாஸ்கில் காப்பியைக் கலந்து வைத்துவிட்டு வந்தோம்' என்று நினைத்தபடி பார்வதி நடையைத் துரிதப்படுத்தினாள்.

மருமகள் அபூர்வா குழந்தையை இப்போதே பெற்றெடுத்து தன் கையில் கொடுத்துவிட மாட்டாளா என்றிருந்தது பார்வதிக்கு. தனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்காதா என்று பார்வதி ஏங்காத ஏக்கம் இல்லை. ஒரே பையன் ஜெயேஷும் ஏகப்பட்ட கருச்சிதைவுகளுக்குப் பின்னரே பிறந்தான். இறுதியில் ஒரு குழந்தையாவது தங்கியதே என்ற ஒரு

சீதாராம்

நிம்மதி.

வளர்ந்த பிள்ளைக்கு உள்ளூரிலேயே நல்ல இடத்துச் சம்பந்தமுடன் திருமணமும் முடிந்திருக்கிறது. ஊரே கம்ப்யூட்டர் துறையில் புகுந்து அமெரிக்கா பக்கம் திரும்புகையில், ஜெயேஷ் மட்டும் அவசரப்படவில்லை. வந்த மருமகளும் கூட்டுக் குடும்பமாக இருக்கலாம் என்று தன் அபிப்பிராயத்தைச் சொன்னபோது பார்வதிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. என்ன... மருமகளும் வேலை பார்க்கப் போய்விடுவதால், பார்வதிக்குப் பொழுதுபோகவில்லை. அவ்வளவுதான்... பேரனோ பேத்தியோ பிறந்துவிட்டால் குழந்தையுடன் நேரம் கழிக்கலாம்.

சொந்த வீட்டில் பால்கனியில் அமர்ந்துகொண்டு, மருமகளுக்குப் பின்னி பூ வைத்துப்பார்க்கவும் கொள்ளை ஆசை. சின்னஞ்சிறுசுகள் வீட்டிலேயே தங்குவதில்லை. பார்க்கலாம். அபூர்வா இப்போது இருக்கும் நிலையில் வெளியே செல்வது குறையும்...

பார்வதியின் சிந்தனை தடைப்பட்டது. தோள்பட்டை சிறிது வலிப்பதுபோல் இருந்தது. கூடைகளைக் கீழே வைத்துவிட்டு



சற்று நிமிர்ந்து கொண்டாள். போய் விடலாம். இன்னும் அதிக தூரம் இல்லை. வீடு திரும்பும் முனையில் நெல்லிக்காய் விற்பனையாவது தெரிந்தது. அபூர்வா புளிப்புக்கு ஏங்குவது தெரியும். ஆவக்காய் கிடைக்காத காலம். அதனாலென்ன, உப்பு மிளகாயுடன் இதுவும் ருசியாகத்தான் இருக்கும்.



"ஊறுகாய்க்கென்று வாங்கினால் அளவு குறைவாக இருக்கும்போல் தெரிகிறதே!" என்று சொல்லியபடி சேர்ந்துகொண்டாள் எதிர் வீட்டு ருக்மணி.

'இவளிடம் சொல்ல ஏன் தயங்க வேண்டும்?' என்று நினைத்த பார்வதி, மருமகளின் குமட்டல் வாந்தியில் தொடங்கி, தாய்மை அடைந்திருப்பது உறுதியானது பற்றியும், டாக்டரின் அறிவுரை வரையும் பொறுமையாகச் சொல்லி முடித்தாள். இயல்பாகவே அதிர்ந்து பேசாதவள்; ஆனால் முகம் மட்டும் அவளது குதூகலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

ருக்மணியின் பார்வை பிளாஸ்டிக் கூடைகள் மீது படிவதைக் கண்டு, "கொஞ்சம் கொஞ்சம் எல்லாவற்றையும் செய்து கொடுத்தால், பத்து பருக்கைகளில் ஒன்பதை வெளியில் எடுத்தால்கூட ஒன்று வயிற்றில் ஒட்டுமில்லையா, அதனால்தான்" என்றாள் கூச்சத்துடன் பார்வதி.

"என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது; உன்னை மாதிரி மாமியார் கிடைக்க, அந்தப்பெண் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று சான்றிதழ் தந்த ருக்மணி, "வீட்டுக்காரரைக் கூட்டி வரக் கூடாதோ? எடுத்துக்கொண்டு போக சிரமம் தெரியாமல் இருக்குமில்லையா?" என்றாள்.

"அவர் வேலையிலிருந்து ஒய்வு பெற்றதுமே ஒரு நாய் வளர்க்க ஆரம்பித்துவிட்டார். அதனுடன் நடப்பதே இப்பொதெல்லாம் அவரது பொழுதுபோக்கு: அப்படி ஒன்று கனம் இல்லை" என்றாள் புன்னகையுடன்.

**வீ**டு நெருங்கும்போதுதான் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி நிற்பதை பார்வதி கவனித்தாள். 'ஜெயேஷ் என்ன மறுபடியும் ஆபீஸ் வேலையாக வெளியில் போகிறானா? சொல்லவே இல்லையே!' என்று குழம்பியபடியே உள்ளே நுழைந்தாள். வரவேற்பறையில் சம்பந்தி நாராயணன் நின்றபடியே பவ்யமாக 'வணக்கம்' சொன்னபோது, ஒன்றும் புரியாமல் புருவத்தை உயர்த்தினாள்.

"விஷயம் கேள்விப்பட்டேன். சந்தோஷம் சம்பந்தியம்மா. அபூர்வா முழுகாமல் இருப்பதையும், சங்கடங்களையும் ஃபோனில் சொன்னாள் இந்தச் சமயத்தில் அம்மாவுடன் இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்து கூட்டிப்போக வந்தேன். ஓரிரண்டு மாதங்கள் கழித்து இங்கு வந்து கொள்ளட்டும். அங்கிருந்து அவளுக்கு ஆபீஸும் பக்கம்" என்று நாராயணன் சொல்லிக்கொண்டேயிருக்கும்போது, ஜெயேஷும் தன் கொள்ளலாம்'' என்றார். 'துணிமணிகள் அதிகம் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறதே' என்று நினைத்த பார்வதி, கேட்க முடியாமல் மௌனமாகத் தலையை மட்டும் அசைத்து விடை கொடுத்தாள்.

**கா**ர் புறப்பட்டதுமே உள்ளே தலைதெறிக்க ஓடிவந்த மூர்த்தி, டீ.வியைப் போட்டுவிட்டு ரிமோட்டையும் கையில் எடுத்துக் கொண்

"**வெ**யிலுக்கு பயந்து ஊட்டி, கொடைக்கானலில் படப்பிடிப்பு வைத்துக் கொள்வார்கள். அப்போது, வெயில் தொல்லை இல்லாவிட்டாலும், ஷூட்டிங் வேலை இருக்குமே! அதனால்தான், ஷூட்டிங்கைக்கூட ஒதுக்கி வைத்துவிட்டு நான், என் கணவர், எங்கள் குடும்ப நண்பர், அவரது மனைவி என்று நாலு பேராக ஊட்டிக்குப் போய், ஐந்து நாட்கள் இருந்துவிட்டு வந்தோம்.

ஒருவருஷ உழைப்பு காரணமாய் ஓய்ந்த உடம்பு, மனசு இரண்டையுமே ரீசார்ஜ் செய்து கொள்ள, மிகவும் சௌகரியமாய் அமைந்தது இந்த ஊட்டி பயணம்.

ஆனாலும் ஒரு சின்ன சங்கடம். எங்கே போனாலும் சின்னத்திரை உபயத்தில், ரசிகர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். ஆட்டோகிராப் கேட்கிறார்கள்; அதுவும் எப்படி? ஒருவரே வரிசையாய் பத்து, பன்னிரண்டு வாங்கினார். 'இத்தனை எதுக்கு?' என்று கேட்டால், "தெரிஞ்சவங்களுக்குத் தர" என்று பதில் வந்தது!

- பாம்பே ஞானம்

டார். அவருக்கு இன்னும் சில நாட்களுக்குப் போட்டியே இல்லை.

பெட்டியைக் காரில் வைப்பதைப் பார்வதி பார்த்தாள்.

''நீயும் ஆபீஸ் வேலையாக வெளியே போக வேண்டியிருக்கிறதா என்ன?'' என்று கேட்க ஆரம்பித்த பார்வதியை இடைமறித்த கணவர் மூர்த்தி, "அபூர்வா தனியாய்ப் போக அழுதாள். ஜெயேஷுக்குத் தயக்கம். நான்தான் கூடப் போய் ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் இருந்துவிட்டு வா என்று சொன்னேன். அவனும் அங்கிருந்தே வேலைக்குப் போய்க்

வளர்ப்பு நாய் ஜிம்மி மட்டும் சோகமாக பார்வதியையே பார்ப்பது போல் அவளுக்குத் தோன்றியது. "ஜிம்மி பசிக்கிறதா? உள்ளே வா! ரொட்டியும் பால் பாக்கெட்களும் கூட நிறைய வாங்கி வைத்திருக்கிறேன்.''

தன் குரல் இயல்புக்கு மீறி எழும்பியது பார்வதிக்கேகூட ஆச்சரியத்தைத் தந்திருக்க வேண்டும்! ○

அதிரடி அனுபவம்

# காஷ்மீர் காடுகளில் அலைந்தேன்!



'கற்க கசடற' படத்தில் வில்லனாக அறிமுகமாகியிருக்கிறார் ஜாக்ராசே. எவரையும் ஏறெடுத்துப் பார்க்க வைக்கிற உயரம், முரட்டுக்குரல், அரட்டும் பார்வை என்று தமிழ் சினிமா வில்லன்களுக்கே உரிய தோற்றம். ஆனால் ஜாக்ரசேவுக்குள் ஒளிந்துகிடக்கிற ஆசாமி, வில்லன் ரகம் அல்ல.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் தமது அடையாள அட்டையைக் காண்பித்துவிட்டு, அசால்ட்டாக உள்ளே நுழையும் பத்திரிகை ஜாதி. அமெரிக்க வாழ் தமிழர். சமீபத்திய சுனாமியாகட்டும், தேசத்தை உலுக்கிய கார்கில் போராகட்டும், சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று, அதை டாக்குமெண்டரியாக்கி, அமெரிக்க டீ.வி சேனல்களுக்கு சுடச்சுட தரும் இந்த மீடியா பறவை, "காஷ்மீர் காடுகளில் தீவிரவாதிகளைத் தேடியலைந்து, செய்தி திரட்டிய அனுபவம் திகிலானது" என்கிறார். அதிருக்கட்டும், அற்புதமான பத்திரிகைப் பணியை விட்டுவிட்டு, இவர் ஏன் தமிழ் சினிமாவுக்கு நடிக்க வந்தார். அதுவும் வில்லனாக?

"எனக்குச் சொந்த ஊர் ராஜபாளையம். ஹவாய் பல்கலைக் கழகத்தில், முதுகலை பட்டப்படிப்பாக ஜர்னலிசம் மற்றும் மீடியா மேனேஜ்மெண்ட் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது Duolose என்ற, உலகின் மிகப்பெரிய கடலில் நகரும் புத்தகக் கண்காட்சியில், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வேலை கிடைத்தது! படிப்பை முடித்துவிட்டு அந்தக் கப்பலில் உலகம் சுற்ற ஆரம்பித்தேன். கடல் நடுவே புத்தகங்களைப் படிப்பதும், உலக சினிமாக்களைப் பார்ப்பதும்தான் எனது பொழுதுபோக்குகள். நான் பார்த்த சர்வ தேசப் படங்களோடு, சமகாலத் தமிழ்ப் படங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றின் தரத்தையும், உள்ளடக்கத்தையும் எண்ணி மனம் புழுங்கியிருக்கிறேன். தமிழ் சினிமாவுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் காரணமாக, வேலையை விட்டுவிட்டு ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். அங்கே உலக சினிமா பற்றி ஆராய்ச்சிப் படிப்பு... புதிய



• டாக்குமென்டரி தந்த ஆதரவு இல்லம்...




• தீவிரவாதிகள் ஜாக்கிரதை - அறிவிப்பு!

திசையைக் காட்டியது. சினிமா தயாரிப்பதில் கண்டங்களை இணைக்க முடியும் என்ற முயற்சியில் இப்போது தீவிரமாக இறங்கியிருக்கிறேன்" என்று என்று சொல்லும் ஜாக்ரசே, "திறமையான தமிழ் இயக்குனர்களை அமெரிக்க மண்ணிற்கு அழைத்துச் சென்று, ஆங்கிலப் படங்களை இயக்க வைக்க வேண்டும் என்பது தான் லட்சியம்" என்கிறார். இந்திய - அமெரிக்க கூட்டுப் படைப்பாக, அப்படியொரு படத்தைத் தயாரிக்க முதல் அடி வைத்தபோதுதான் ஜாக்ராசேவுக்கு ஹாலிவுட்டில் படைப்பாளிகள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று நிறைய நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஆங்கிலப் படங்களில் நடிக்க அழைப்பு வந்திருக்கிறது. ஆனால் "என் முதல் படம் தாய்மொழியில் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அது 'கற்க கசடற மூலம் நிறைவேறிவிட்டது" என்கிறார்.

ஒரு பக்கம் ஹாலிவுட் ஸ்டுடியோக்களில் வலம் வந்துகொண்டே மறுபக்கம் அமெரிக்க 'ஃபேமிலிசானல்' டீவிக்கு டாக்குமெண்டரிகளை எடுத்துத் தரும் ஜாக்ராசேவின் 'மிஷன் டு காஷ்மீர்' என்ற டாக்குமென்டரி, ஐரோப்பிய செய்திச் சானல்களில் இப்போது திரும்பத் திரும்ப ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்த டாக்குமெண்டரிக்காக காஷ்மீரில் சுற்றித் திரிந்த இவரது அனுபவங்களில் செம திகில்.

"காஷ்மீரில் தோடா மாவட்டம்தான் தீவிரவாதிகள் அதிகமுள்ள இடம். இந்த மாவட்டத்தின் எல்லையில் நுழையும் போதே 'தீவிரவாதிகள் ஜாக்கிரதை!' என்று நெடுஞ்சாலையில் அறிவிப்புப் பலகை வைத்திருக்கிறார்கள். புதிய 'ஆட்களை ராணுவமே தடுத்து நிறுத்தி விடுகிறது. மீறிப் போனால் 'உங்கள் உயிருக்கு நாங்கள் உத்தரவாதமில்லை' என்று சொல்லி அனுப்பி வைக்கிறார்கள். எப்படியும் ஒரு தீவிரவாதிகள் குழுவையாவது பேட்டி எடுத்து விட வேண்டும் என்று வனப் பகுதியில் சுற்றித் திரிந்தேன். துப்பாக்கி வைத்திருந்த ஓர் ஆளைப் பிடித்து, "நீங்கள் தீவிரவாதியா?" என்றேன். "நான் எதுவும் சொல்லமுடியாது" என்றார். ஒருவழியாக காஷ்மீர் மத்திய சிறையிலிருந்த தீவிரவாதிகளை சிறப்பு அமைதி பெற்று பேட்டியெடுத்தேன். தீவிரவாதிகளுக்கும், இந்திய ராணுவத்துக்கும் நடக்கும் மோதலில், குடும்பத்தை இழந்த ஆதரவற்ற குழந்தைகளையும், விதவைகளையும் எனது டாக்குமெண்டரியின் மையப்புள்ளியாகக் கொண்டு வந்தேன். இந்த டாக்குமெண்டரியைப் பார்த்த ஐரோப்பியர்கள் வழங்கிய நன்கொடையால், இப்போது காஷ்மீரில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஒரு மையம் தொடங்கப்பட்டுள்ளது. இது ஒரு பத்திரிகையாளனுக்குக் கிடைத்த வெற்றி" எனும் ஜாக்ராசே, 'மேக்ஸிமம் செக்யூரிட்டி' என்ற ஹாலிவுட் படத்தில் சர்வதேசத் தீவிரவாதியாக நடிக்கிறார்.

பேட்டி: **ஜெய்**
படம்: **ஸ்ரீஹரி**

• டால் ஏரியில்...







# தாலி கேட்கும் பிடாரி அம்மன்!

## – விநோத கிராமம்

நம்ம பெண்கள் என்னதான் நாகரிகம் அடைந்தாலும், அவர்களுக்கு தாலி சென்டிமெண்ட் கொஞ்சம் தூக்கல்தான்.

தாலிக்கயிறுக்கு மஞ்சள் பூசுவது, குங்குமமிட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வது, மாங்கல்ய பலம் வேண்டி விரதமிருப்பது போன்றவை இன்னும் வழக்கத்திலிருக்கின் றன. ஆனால் கடலூர் மாவட்டம் காணாது கண்டான் கிராமத்துப் பெண்கள் ரொம் பவே வித்தியாசமானவர்கள். அம்மனுக்கே தாலி தானம் செய்கிறார்கள்!

இந்த ஊர்ப் பெண்கள் திருமணத்தின்போது கட்டப்பட்ட தாலியை, தங்களது தலைப் பிரசவம் வரைதான் அணிந்திருப்பார்கள். பிரசவ வலி எடுத்தவுடனேயே தாலியைக் கழற்றி, மஞ்சள் துணியில் முடிந்து வைத்துவிடுவார்கள். சித்திரைத் திருவிழாவின் போது, பிடாரியம்மனுக்கு காணிக்கையாகச் செலுத்திவிடுவார்கள். பிறகு வாழ்நாள் முழுவதும் கணவன் கட்டிய மஞ்சள் கயிறு மட்டுமே அணிந்திருப்பார்களாம்.



• சுமதி ரவிச்சந்திரன்



• பூசாரி



• ராசபார்வதி

"எங்க பெடாரியம்மன் துஷ்டக்காரி. அவ கோபத்துக்கு ஆளாயிட்டா, பெரசவம் சிக்கலாயிடும்" என்கிறார் எழுபது வயது மூதாட்டி ராசபார்வதி.

"இந்த ஐதீகத்தை, இந்தக் காலத்துப் பெண்களும் ஏற்றுக் கொள்கிறார்களா?" என்று பிடாரியம்மன் கோயில் பூசாரி விஸ்வநாதனைக் கேட்டால், பயபக்தியோடு கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்.

"ஒத்துக்காம எப்படி? தலைச்சன் பிள்ளை நோய் நொடியில்லாம பொறக்கணும், தலப்பிரசவம் சுகமா ஆகணும்னு தானே எந்தப் பொண்ணுமே நெனப்பா?" என்கிறார்.

"என்ன இது மூட நம்பிக்கைனு நாங்க ஒத்துக்கல. ஆனா நேரம் ஆக ஆக வலி அதிகமாகி, பிரசவம் சிக்கல்னு சொல்லிட்டாங்க. அப்ப ஊர்க்காரங்க, 'தாலியைக் கழட்டிரு. அதான் நல்லது'ன்னாங்க. வேற வழியில்லாம சம்மதிச்சேன். ஆனா என்ன ஆச்சரியம்! தாலியைக் கழட்டின பிறகுதான் வலி குறைஞ்சு, அழகான ஆண் குழந்தை பிறந்துச்சு" என்கிறார் சுமதி ரவிச்சந்திரன். இவர், விருத்தாச்சலத்தில் பள்ளி ஆசிரியை.

இப்படிச் சேரும் தங்கத் தாலிகளை எல்லாம் என்னதான் செய்கிறார்கள்? கணிசமாகச் சேர்ந்ததும், உருக்கி அம்மனுக்கு நகை செய்து போட்டுவிடுகிறார்களாம்.

பேட்டி, படங்கள் :
**கவிசுந்தர்**



**நா**டக மேடையில் டி.வி. வரதராஜனுக்கு இது வெள்ளி விழா ஆண்டு! வித்தியாசமாக அதைக் கொண்டாடுகிறார் டி.வி.வி.

வரும் ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 14 வரை சென்னையிலுள்ள அனைத்து பெரிய சபாக்களிலும் தம்முடைய நாடகம் மட்டுமின்றி, கிரேஸி மோகன், எஸ்.வி.சேகர், ஒய்.ஜி. மகேந்திரா... என இருபத்தேழு நாடகங்களை ஒரு திரு விழாவாக நடத்துகிறார்.



# டி.வி.வி.-25!

''தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நாடகக் குழுக்களும் அமெச்சூர் வகையைச் சேர்ந்தவை. இன்று இந்த நாடகத்தில் நடித்தால் இவ்வளவு பணம் கிடைக்கும் என்றில்லாமல், எத்தனை முறை ரசிகர்களிடம் கைத்தட்டல்கள் வாங்கலாம் என்கிற ஆர்வத்தில் வருபவர்கள்.

சில வருடங்களுக்கு முன்பு மியூசிக் அகடமியில் எனது 'இலவச இணைப்பு' நாடகத்தை நடத்தவிருந்தபோது, வெளியே 'சோ'வென மழை. அரங்கில் மொத்தம் 12 பேர்தான் அமர்ந்திருந்தனர். மேடையில் தோன்றி "வேறொருநாள் நாடகத்தை வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டதற்கு ஒருவர் வெகுண்டெழுந்து "ஏன் எங்களையெல்லாம் பார்த்தால் ரசிகர்களாகத் தெரியவில்லையா?" என்று கேட்டுவிட்டார். அடுத்த நிமிடமே நாடகம் மேடையில் ஆரம்பமானது. நாடகம் முடிந்த பிறகு வந்திருந்த அனைவரும் மேடையேறி எங்களைப் பாராட்டியது, இன்னமும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

அதேபோல் 'மற்றும் பலர்' என்கிற நாடகத்தைப் பார்த்து கே. பாலசந்தர் "நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு நாடகம் பார்த்து அழுதேன் என்று பாராட்டி விட்டு, அதை டெலிஃபிலிமாகத் தயாரித்தார். எப்பேர்ப்பட்ட கௌரவம்!"

"**நா**ன் வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதே இழந்த நாடகத்தின் மதிப்பை மீண்டும் பெறுவதற்குத்தான். அந்தக் காலத்தில் சிவாஜி, எம்.ஜி.ஆர் எல்லாம் நாடகங்களில் நடித்து அதற்கு மதிப்பளித்தார்கள். அதேபோல இன்றைய நடிகர்களும் மாதத்திற்கு ஒருமுறையாவது நாடகங்களில் நடிக்க வந்தால், நாடகக் கலை அழியாமல் காப்பாற்றப்படுமே!"

**- செந்தில்**

ஒருகதை

"**நா**ன் தனியார் நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக வேலை பார்க்கிறேன். எனக்கு சமீபத்துலதான் கல்யாணமாச்சு! பெற்றோர்களுடன் கூட்டுக் குடும்பமாதான் இருக்கேன். லட்சியா மாதிரி குழந்தை பிறந்த பிறகு என் நிலைமையும் இந்தக் கதாநாயகன் மாதிரிதான் ஆயிடும்னு நினைக்கிறேன். கதையின் தலைப்பு மிகப் பொருத்தம்!"

- *சீதா ராம்*



• படம் : ஸ்ரீஹரி

# இன்னொரு குழந்தை!

**ஆ**ட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும்போதே.. "டாடீசச" என்ற குரல் வந்தது.

தலையைத் தூக்கிப் பார்த்தேன். மாடியறையின் ஜன்னலில், லட்சியாவின் உற்சாகமான முகம் தெரிந்தது. பிஞ்சுக் கையை அசைத்தாள். நானும் கையசைக்க அடுத்த நொடியே அந்த இடத்தை விட்டு மின்னலாக விலகினாள்.

"லட்சியா, விழப்போறே! மெதுவா வா" என்று கத்தினேன்.

நான் சூட்கேஸை எடுத்து தரையில் வைத்து விட்டு பர்ஸை எடுத்து பணத்தைக் கொடுத்தேன். ஆட்டோவுக்கு மீண்டும் சூட்கேஸை எடுக்க குனிந்த போது, வாசல் கதவு 'படார்' எனத் திறந்து கொண்டது.

''டாடீ'' என்றபடி ஓடி வந்த லட்சியாவைத் தூக்கிக் கொண்டேன்.

"ஏய்... மெதுவாடி! பி.டி. உஷா மாதிரி என்ன வேகமா ஓடி வர்றா? என்னமோ அப்பாவைப் பார்த்து ஒரு வருஷம் ஆன மாதிரிதான்'' என்றபடியே வந்தாள் நந்தினி.

"நாங்க ஒரு நாள் பார்த்துக்கலைன்னாலும் ஒரு வருஷம் மாதிரிதான். என் செல்லக் குட்டிக்கு என் மேல அவ்வளவு பிரியம். உன்னை மாதிரியா? எங்காவது போங்க, எப்பவாவது வாங்கன்னு இருக்கிறவளாச்சே நீ. இந்தா பிடி'' என்று கூறி சூட்கேஸை அவளை நோக்கி வீசினேன்.

சற்றே தடுமாறிப் பிடித்தவள். ''ஆமாமா! எனக்கு அக்கறை இல்லைதான். அப்பாவும், பொண்ணுமே கொஞ்சிக்கங்க. நீங்க இருக்கிறப்ப தினமும் சாப்பிட எவ்வளவு நேரம் எடுத்துப்பா? ஆனா நேத்து பத்தே நிமிஷத்துல சாப்பிட்டுட்டா தெரியுமா?" என்றாள்.

"சரியா சாப்பிட்டு இருக்க மாட்டா.



ஆரணி யுவராஜ்

அப்படித்தானே?'' என்று கேட்டேன்.

"ம்" என்று கூறி தலையை பலமாக ஆட்டினாள் லட்சியா.

"கவலைப்படாதே! இன்னிக்கு நானே ஊட்டி விடறேன்" என்றேன்.

"அடிப்பாவி! ஈவ்னிங் மேகி அப்புறம் பிஸ்கெட், நைட், பால் சோறுன்னு வரிசையா முழுங்கிட்டு சரியா சாப்பிட லைன்னா சொல்றே. இரு! இரு! உன்னை கவனிச்சுக்கறேன்'' என்றபடி நந்தினி சென்றுவிட்டாள்.

நான் லட்சியாவுடன் சோபாவில் அமர்ந்தேன். காலணிகளைக் கழற்றி னேன். நன்றாக சாய்ந்து அமர்ந்து கொண்டேன்.

ஒரு தனியார் அலுவலகத்தில் பொறுப் பான பணியில் இருப்பவன் நான். கிளை

# ஜாலி ஜூட்!



அலுவலகங்களைப் பார்வையிட இது போல் அடிக்கடி ஊருக்குச் செல்வது வழக்கம் தான். முன்பு அப்படிச் செல்கிற போதெல்லாம், வேலை முடிந்ததும் அந்த ஊரில் பார்க்க வேண்டிய சிறப்பான இடங்கள் இருந்தால் பார்த்துவிட்டு நிதானமாகத்தான் வருவேன்.

ஆனால் இப்போதெல்லாம் அப்படி யில்லை. வேலை முடிந்ததுமே வண்டி யேறி விடுவேன். அதற்குக் காரணம் லட்சியாதான். அவள் பிறந்தது முதல் எனது பழக்க வழக்கங்கள், ரசனைகள் எல்லாமே மாறிவிட்டன. அவளது சிரிப்பு, கோபம், அழுகை என ஒவ்வொன்றையும் ரசிப்பதிலேயே முழு நேரத்தையும் செல விடுகிறேன்.

இப்போது லட்சியாவுக்கு நான்கு வயது. கூர்மையான அறிவுத்திறன், அபார மான ஞாபக சக்தியுடன் இருக்கிறாள். அவளது கேள்விகளுக்கு பதில் சொல் லவே புதிதாக டிப்ளமா படிக்கவேண்டும்.

"டாடி" என்றபடி என் முகத்தை தன் பக்கம் திருப்பினாள்.

"என்ன குட்டி?" என்று கேட்டேன்.

"நேத்து ஈவ்னிங் ஆறு மணிக்கு நீங்க மம்மியை நினைச்சீங்களா?'' என்று கேட்டாள்.

புரியாமல் அவளைப் பார்த்து "ஏன் கேட்கறே?" என்று கேட்டேன்.

நானு, மம்மி, பாட்டி மூணு பேரும் மேகி சாப்பிட்டுட்டு இருந்தப்ப, அம்மா வுக்கு புரை ஏறிச்சு. உன் டாடிதான் நினைக்கறார்னு சொன்னாங்க. நினைச் சீங்களா?'' என்று கேட்டாள்.

காபி கோப்பையுடன் வந்த நந்தினி கண்களை அகலமாக்கி தலையை மறுப் பாக அசைத்து, ஜாடையில் என்னிடம் என்னமோ சொல்ல முயன்றாள். எனக் குப் புரியவில்லை. 'என்ன?' என்று ஜாடையிலே கேட்டேன்.

அதற்குள் லட்சியா ''சொல்லுங்க டாடி" என்று உலுக்கினாள்.

யோசித்துப் பார்த்தேன். இவள் சொன்ன நேரத்தில் அலுவலகத்தில் இருந் தேன். ஊருக்கு வரும்போது கொண்டு வர வேண்டிய முக்கியமான கடிதமே தயாராகி இருக்கவில்லை. அதற்காக ஊழியர்களிடம் 'காச்மூச்' என்று கத்திக் கொண்டிருந்தேன். அந்த நேரத்திலாவது, நந்தினியை நினைப்பதாவது?

"சொல்லுங்க டாடி" என்று மீண்டும் உலுக்கினாள் லட்சியா.

சரி! நந்தினியை ஐஸ் வைப்போமே என நினைத்தவன் "ஆமா நினைச்சேன்" என்றேன்.

"அப்போ என்னை நினைக்கலையா?" என்று கேட்டவளின் முகம் சட்டென கண்டிப்போனது.

"உ... உன்னையும் நி..நினைச்சேனே" என்றேன்.

"பொய்... எனக்கு புரை ஏறலியே. மம்மிக்கு மட்டும்தானே புரை ஏறிச்சு"

என்றாள்.

'ஆகா! மாட்டிக்கிட்டோம்டா. இதை தான் நந்தினி ஜாடையில் சொன்னாளா?' என்று அப்போதுதான் உறைத்தது.

"இதேதாங்க. நேத்து தெரியாத்தனமா நீங்க நினைக்கறதா சொல்லிட்டேன். அவ்வளவுதான். டாடி உன்னைத்தான் நினைக்கறார். என்னை நினைக்கலைன்னு சொல்லி முகத்தை தூக்கி வெச்சுக்கிட்டா. இப்ப மறுபடியும் ஆரம்பிச்சுட்டா" என்றாள் நந்தினி.

பண்ணினேன். அதான் உனக்கு புரை ஏறலை" என்றேன்.

லட்சியா சட்டென தலையைத் திருப்பிப் பார்த்தாள் "பிராமிஸ்ஸா?"

"பிராமிஸ்! பிராமிஸ்" என்றேன்.

அவள் முகம் மலர்ந்தது. சட்டென சோபாவிலிருந்து குதித்தவள் "பாட்டி! பாட்டி" என்றபடி உற்சாகமாக ஓடினாள்.

நான் நந்தினியைப் பார்த்து "எப்படி ஐயாவோட சமாளிப்பு?" என்று கேட்டேன்.

ஏப்ரல், மே இந்த ரெண்டு மாதத்திலும் நான் வெளிநாட்டு ட்ரிப் அடிச்சது கொஞ்சம் இதமா இருந்தது. வைரமுத்து எழுதிய 'வீழமாட்டோம்' என்கிற சுனாமி சம்பந்தமான ஆல்பத்துக்காக ஸ்விட்சர்லாந்துக்குப் போனேன். அங்கே வெயில் ஜஸ்ட் பத்து டிகிரி மட்டுமே. குளுகுளுன்னு இருக்கிற அந்த க்ளைமேட் என்ன சுகம்... என்ன சுகம்... எனக்கு ஜெர்மன் மொழி தெரிஞ்சதால அங்குள்ளவங்ககிட்ட ஜெர்மன் மொழியில பேசினது உற்சாகமா இருந்தது. மே மாசம் இன்னொரு ஷோவுக்காக இலங்கைக்குப் போனேன். கொழும்பு நகர்ல எப்பவும் மழை சோன்னு கொட்டிக்கிட்டே இருந்தது. புத்தர் கோயிலுக்குப் போனது மன அமைதி தந்தது.

**- சின்மயி**
பின்னணிப் பாடகி

லட்சியா என் மடியை விட்டு விலகி சோபாவின் மறுமுனையில் சென்று அமர்ந்து கொண்டாள். முகத்தை 'உம்' என வைத்துக் கொண்டாள்.

"இப்ப நான் சமாளிக்கறேன் பாரு" என்று நந்தினியிடம் கிசுகிசுப்பாகச் சொல்லி விட்டு, லட்சியாவை நெருங்கி அமர்ந்தேன்.

மெதுவாக அவள் தலையில் கை வைத்ததும் சட்டென்று தட்டிவிட்டாள். வாயைக் கோணி அழகு காட்டினாள்.

"லட்சு கண்ணு! பிராமிஸ்ஸா நான் உன்னையும் நினைச்சேன். மம்மிக்கு புரை ஏறிச்சுன்னு சொன்னியே. அப்போ என்ன ஆச்சு?" என்று கேட்டேன்.

"மம்மி இருமினாங்க. கண்ணுல தண்ணி வந்துச்சு. தலையில தட்டிக்கிட்டாங்க. அப்புறம் தண்ணி குடிச்சாங்க."

"கரெக்ட்! புரை ஏறினதால எவ்வளவு கஷ்டம் பார்த்தியா? மம்மி பெரிய ஆள். அதனால சமாளிச்சுட்டா. ஆனா உனக்கு அதே மாதிரி வந்திருந்தா வலிச்சு இருக்குமில்லியா? அதனாலதான் உன்னை நினைச்சதுமே, சாமிகிட்டே என் லட்சுக்கு புரை ஏறக்கூடாதுன்னு ப்ரே

இப்போது அவள் வாயைக் கோணி, "போதும். ரொம்ப பீத்திக்காதீங்க" என்று கூறி விட்டு நகர்ந்தாள்.

'சே! ஒரு மனிசன் உலகத்துகிட்டே இருந்து ஒட்டுமொத்தமா பாராட்டு வாங்கினாலும்கூட, பொண்டாட்டிகிட்டே இருந்து வாங்க முடியாதே!' என்று சலித்துக் கொண்டேன்.

அப்போதுதான் அம்மாவின் நினைவு வந்தது. வழக்கமாக நான் ஊருக்குச் சென்று விட்டு வந்ததும் 'வேலை நல்லபடியா முடிஞ்சதா? ஒழுங்கா சாப்பிட்டியா?' என்று தவறாமல் விசாரிப்பாள். இப்போது எங்கே ஆளையே காணோம்?' என்று நினைத்தவாறு எழுந்தேன்.

அருகே இருந்த அறையில் நுழைந்தேன். லட்சியா அம்மாவின் மடியில் அமர்ந்து கொண்டு, சற்று முன்பு நான் சொன்ன காரணத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ம்... ம்... சரி! போய் விளையாடு" என்றாள் அம்மா. அவள் இறங்கி ஓடினாள்.

"என்னம்மா, உடம்பு சரியில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லையே" என்றாள்.

அம்மாவை எனக்கு நன்றாகத் தெரி

# ஜாலி ஜூட்!



நம்ம ஊரில் வெயில் பட்டையை உரித்துக் கொண்டிருக்கும். நான் எங்காவது ஜெர்மனி, கனடா என்று கச்சேரிகளுக்காகப் பறந்து விட்டிருப்பேன். இந்த ஏப்ரல், மே மாதத்திலும் அமெரிக்க விஜயம்தான்.

வாஷிங்டனில் கச்சேரி முடித்து, இரண்டு நாட்கள் ஓய்வு கிடைக்கவே, நண்பருடன் சுற்றுலா கிளம்பிவிட்டேன். ஜனாதிபதி புஷ் வசிக்கும் வெள்ளை மாளிகையைச் சுற்றிப் பார்த்தோம். பிரெஸிடென்ட் ஹவுஸுவைவிட, அதற்கு முன்னால் ஏக்கர் கணக்கில் விரிந்துள்ள அழகிய பூங்கா தான் என்னை பிரமிக்க வைத்துவிட்டது. பச்சைப் பசேல் புல்வெளி, மலர்களின் ரம்யம், சுத்தமான பராமரிப்பு, கலையுணர்வுடன் கூடிய அமைப்பு என கொள்ளை கொண்டுவிட்டது. இதமான வெயில் இருக்கும். திடீரென பனிமழை பெய்யும். ஃபர் கோட் அணியாமல் வெளியே தலைகாட்டவே முடியாது.

அமெரிக்கால இரண்டு டிகிரி குளிர்ல ஜாலியா இருந்துட்டு இங்கே வந்தா, சென்னையில் 42 டிகிரி செல்ஷியஸ் வரை போனதா சொன்னாங்க. வெயில்லருந்து எஸ்கேப் ஆனதுக்காக சந்தோஷப்பட்டேன்.

**- பாபநாசம் அசோக் ரமணி**

*இசைக் கலைஞர்*

யும். ஒரு சின்ன உணர்வைகூட அவர் முகம் தெளிவாகக் காட்டிக் கொடுத்து விடும். அந்த முகத்தின் அமைப்பு அப்படி. குழந்தைத்தனமான முகம்.

"டல்லா இருக்கியேம்மா. எந்த மெகா சீரியலிலாவது எந்த கேரக்டருக்காவது உடம்பு சரியில்லையா?" என்று கிண்டலாகக் கேட்டேன்.

சட்டெனச் சிரித்தாள். சில நொடிகள் தான். மீண்டும் முகம் பழையபடியே ஆனது. "அதெல்லாம் இல்லைடா" என்றாள்.

"உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுதே. சொல்லும்மா" என்றேன் பிடிவாதமாய்.

சில நொடிகள் என்னையே பார்த்தவர், பிறகு தயக்கத்துடன் சொன்னாள். "நேத்து அந்த நேரத்துல நானும் சாப்பிட்டுக்கிட்டுதான் இருந்தேன்..."

அவரது வார்த்தைகள் முடியாமல் அந்தரத்தில் நின்றன. நான் செய்வதறியாது திகைத்துப் போனேன்.

பா.ராகவன்

# முடிவற்ற சாகசம்!

அமெரிக்க இலக்கியத்துக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுத் தந்த எர்னெஸ்ட் ஹெமிங்வேவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஹெமிங்வேயைப் பற்றிக் கேள்விப்படாதவர்களுக்குக்கூட, அவரது 'கடலும் கிழவனும்' நாவல் குறித்துத் தெரிந்திருக்கும். நாவலைத் தெரியாதவர்களுக்குக்கூட அந்த நாவல் திரைப்படமாகி, ஆஸ்கர் விருது பெற்ற கதையாவது தெரிந்திருக்கும். நாவலாக வந்தபோது நோபல் பரிசு. திரைப்படமானபோது ஆஸ்கர் விருது.

ஹெமிங்வே, தம் வாழ்வில் மிகப் பெரிய காதல் தோல்வியாளர். மூன்று பேரைக் காதலித்து மணந்து, மூன்று பேரையும் விவாகரத்து செய்தவர் - அல்லது மூன்று பேராலும் விவாகரத்து செய்யப்பட்டவர். அதேபோலத் தன் சமகாலப் படைப்பாளி ஒருவர், தம்மைக் காட்டிலும் விரைவாகப் பெயரும் புகழும் நோபல் பரிசும் கூடப் பெற்றுவிட்டாரே என்கிற பொறாமையில் தவித்துத் தவித்துத் தணிந்து, வெறிகொண்டு உழைத்து வெற்றியை எட்டிப் பிடித்தவர்.






• ஹெமிங்வே

கடலில் மீன் பிடிக்கும் சான்டியாகோ என்கிற ஒரு கிழவன். அவனுக்கும் சுறா மீன் ஒன்றுக்கும் இடையில் நடைபெறும் வாழ்வா சாவா போராட்டம் தான் இந்த நாவலின் மூலக்கதை. கிழவன் தன் அனுபவங்களைத் தன் பேரனிடம் பகிர்ந்து கொள்வது மட்டும்தான் நாவலின் உரையாடலுக்கான மாபெரும் சாத்தியம்.

இந்தக் களத்தை வைத்துக்கொண்டு வாழ்வதற்கான மனிதனின் முடிவற்ற போராட்டத்தை, ஓர் உக்கிரமான கவிதை போலத் தீட்டியிருப்பார் ஹெமிங்வே. தமிழில்கூட இந் நாவல் மொழி பெயர்ப்

13

பாகியிருக்கிறது. ச.து.சு. யோகியாரின் பழைய மொழிபெயர்ப்பு தவிர, சமீபத்தில் இன்னொரு புதிய மொழிபெயர்ப்பும் வந்திருக்கிறது. அவசியம் படித்துப் பாருங்கள். உரைநடையில் அந்நாவல் ஒரு மிகப் பெரிய சாதனை.

ஹெமிங்வேயின் வாழ்க்கையே ஒரு யுத்தக்களம் போன்றதுதான். தன் வாழ்நாள் முழுவதும் ஓடிக்கொண்டே இருந்தவர் அவர்.

அமெரிக்காவில் உள்ள இல்லிய னாய்ஸ் மாகாணத்தில், 1889ம் ஆண்டு ஒரு மருத்துவரின் இரண்டாவது மக னாகப் பிறந்தவர் ஹெமிங்வே. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு ஒரு பத்திரி கையில் நிருபராகச் சேர்ந்தார். ஏனோ



• முதல் மனைவி ஹேட்லியுடன்

அவருக்கு அந்த வேலை சரிப்பட்டு வர வில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து, இத்தாலியில் ஒரு போர்க்களத்தில் பணி யாற்றப் போய்விட்டார். (அது முதல் உல கப் போர் காலகட்டம்.) மருத்துவக் குழு வில்தான் பணியாற்றினார் என்றபோதும், போரில் அவருக்குப் படுகாயம் ஏற்பட்டு விட்டது. ஒரு கிராஸ் ஃபயரில் மாட்டிக் கொண்டு உடம்பெல்லாம் அடிபட்டுக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்.

மருத்துவமனையில் படுத்துக்கிடந்த போது எழுத ஆரம்பித்தார். 1926ல் Sun Also Rises வெளியானது. இதுதான் ஹெமிங்வேயின் இலக்கிய அந்தஸ்தை உறுதிப்படுத்தும் படைப்பாக விளங்கியது.

ஹெமிங்வேயின் ஆரம்பக்கால எழுத்துகளுக்குப் பெரிய உந்துசக்தியாக விளங்கியவர், அந்நாளைய முக்கிய எழுத்தாளரான ஷெர்வுட் ஆண்டர்சன். ஹெமிங்வே இவரைத் தம் குரு என்றே சொல்லி வந்திருக்கிறார். (பின்னாளில் ஷெர்வுட் ஆண்டர்சனைக் கிண்டல் செய்து ஒரு கதை எழுதி உறவை முறித்துக் கொண்டார்!) இதே ஷெர்வுட் ஆண் டர்சன் இன்னொரு அமெரிக்க எழுத் தாளருக்கும் பெரிய உந்துசக்தியாக விளங் கியவர். அவர் பெயர் வில்லியம் ஃபாக்னர். ஃபாக்னரும் ஹெமிங்வே யும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் எழுதத் தொடங்கியவர்கள். ஒரே சமயத்தில் புகழடைந்தவர்கள். ஒரே குருநாதர் வேறு என்பதால் கேட்க வேண் டுமா?

ஆனால் ஃபாக்னருடைய எழுத்துக்கும், ஹெமிங்வேயின் எழுத்துக்கும் துளி சம்பந்தம் கூடக் கிடையாது. ஃபாக்னரைப் படிப்பது மிகவும் கஷ்டம். அவ ரது ஆங்கிலமே கொஞ்சம் கரடு முரடானது. ஒரு மாதிரி வட்டார வழக்கு என்று வைத்துக் கொள்ள லாம். ஆனால் ஹெமிங்வேயின் மொழி நீரோடை போன்றது. கவித்துவம் நிரம்பியது. அரை குறை ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூடப் படித்து ரசிக்க முடியும். மிகச் சிறிய சொற்றொடர்களை மட்டுமே அவர் பயன்படுத்து வார். ஒரு சொற்றொடரில் மூன்று அல்லது நான்கு சொற் களுக்கு மேல் இருக்கவே இருக் காது. பத்திகள் சிறியதாக இருக்கும். அத்தி யாயங்களும் சிறியவையே. ஹெமிங்வே, வாசகர்களுக்கு ஒருபோதும் அலுப்பூட் டாதவர்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஹெமிங்வேயின் தனி வாழ்க்கையில் அடுத்தடுத்துத் தோல்விகள் ஏற்படத் தொடங்கின. அவரும் விடாமல் பத்திரி கையாளர்களாகப் பார்த்துத்தான் திரு மணம் செய்துகொண்டார். ஓர் எழுத் தாளனின் வாழ்க்கை முறை தெரிந்து, அனுசரித்து வாழக்கூடியவர்களாக இருப்பார்களே என்று கருதியிருக்கலாம். ஆனால் அவர் விரும்பி மணந்த யாருமே அவரைப் புரிந்துகொள்ளவில்லை.

தூக்கியடித்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்த விரக்தி ஹெமிங்வேக்கு கடைசி வரை இருந்தது. அவர் தம் வாழ்க்கை முறையையே சாகசம் மிக்கதாக அமைத்துக்கொண்டதற்கு, இது ஒரு முக்கியக் காரணமாயிருக்கும் என்று பின்னாளில் பல மனோதத்துவ வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஹெமிங்வே அடிக்கடி வேட்டைக்குப் போவார். அதுவும் பயங்கரமான அமேசான் காடுகளில் மட்டுமே வேட்டை ஆடுவார். ஸ்பெயினுக்குப் போய் ஏறு தழுவும் விளையாட்டில் பங்குபெற்று ஏகப்பட்ட காயங்களுடன் திரும்பி வருவார். மூர்க்கமாக அலைமோதும் கடற்பகுதிகளில் எதிர் நீச்சல் அடித்து மைல் கணக்கில் சென்று திரும்புவார்.

சந்தேகமில்லாமல் அவர் ஒரு போராளி. வாழ்க்கையில் தாம் சந்திக்க நேர்ந்தவர்களுடன் போராடித் தோற்றதற்கு பதிலாகத் தன்னைத்தானே வருத்திக் கொண்டு ஜெயிக்கப் பார்த்தவர். அவர் கடலும் கிழவனும் எழுதியதற்கும் அதுதான் காரணம். அவரது சக எழுத்தாளரான வில்லியம் ஃபாக்னருக்கு 1949ம் வருடம் நோபல் பரிசு கிடைத்தது. சூட்டோடு சூடாக ஹாலிவுட் உலகம் ஃபாக்னரை அரவணைத்துக் கொண்டு, அவரது படைப்புகளைத் திரைப்படமாகத் தயாரிக்கத் தொடங்கிவிட்டது.

ஒன்றாக வளர்ந்துகொண்டிருந்த ஹெமிங்வேக்கு இது வெளியில் சொல்ல முடியாத பொறாமை உணர்ச்சியைத் தூண்டியது. தவிரவும் அவர் எழுதி வெளியிட்ட ஒவ்வொரு படைப்பையும் அக்காலத்து இலக்கிய விமரிசகர்கள் சுமார், சுமார் என்றே சொல்லி வெறுப்பேற்றிக் கொண்டிருந்தார்கள்.

வெறுப்பும் கோபமும் உந்தித்தள்ள, ஹெமிங்வே அட்லாண்டிக் கடலில் ஓர் இலக்கற்ற பயணத்தை மேற்கொண்டார்.

அந்தக் கடல் பயணத்தில்தான் அவருக்கு அந்த நாவலுக்கான கரு கிடைத்தது. போராட்டம். மனிதனின் நிரந்தரமான போராட்டம். உயிர்த்திருப்பதற்கான போராட்டம்.

''எனக்கு வீட்டு வேலை எதுவுமே தெரியாது டார்லிங்...''
''இதை ஏன் நீ கல்யாணத்துக்கு முந்தியே சொல்லலை?''
''உன்னோட கல்யாணம் தடை பட்டுடக் கூடாதுன்னு தான் டார்லிங்!''
- சீர்காழி வி. ரேவதி



கடலும் கிழவனும் நாவல் ஒரு காவியம். அந் நாவலுக்கு நோபல் பரிசு கிடைத்தபோது, லைஃப் பத்திரிகை தன் ஒரு இதழில் வேறெந்தக் கட்டுரையையும், கதையையும் வெளியிடாமல், அப்படியே முழு நாவலையும் வெளியிட்டு ஹெமிங்வேயை கௌரவித்தது. ஹெமிங்வேயைப் பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்துகொண்டு கேட்டார்கள். "இந்நாவலுக்கு நோபல் பரிசு கிடைத்தது பற்றி உங்கள் கருத்தென்ன?"

ஹெமிங்வே சொன்னார்: ''ஒரே கருத்துதான். என்னுடைய நாவலைப் பாமரர்களும் படிக்கலாம்.''

அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பது ஃபாக்னருக்கு மட்டும்தான் அப்போது புரிந்திருக்கும்!

பி.கு: கிட்டத்தட்ட ஒரு கோடி டாலர் மதிப்புள்ள நோபல் பரிசைப் பெறுவதற்குக்கூட ஹெமிங்வே போகவில்லை. பரிசை வென்றதாக அறிவிக்கப்பட்டதே அவருக்குப் போதுமானதாக இருந்தது!

(தொடரும்)

# யார் இந்த சூர்யா?

## பர்சனல் டைரி - 8

இப்போதும் கம்பீரமாக நிற்கிறது அந்தப் புளியமரம். உயரங்களைப் பார்த்து நடுங்கிய வயதில், 'என் மீது ஏறிப்பார், உயரம் உனக்குத் துச்சம்' என அச்சம் துடைத்த ஆச்சரியம் அது. மஞ்சளும் சிவப்பும் கலந்து கொத்துக் கொத்தாக பூத்துக் குலுங்கும் பூக்கள். சடை சடையாகக் காய்த்துத் தொங்கும் புளியம் பிஞ்சுகள். நீண்ட நாள் பழகிய நண்பனைப் போல, காற்றில் கையசைத்துக் கூப்பிடும் அந்த மரத்தைப் பார்க்கிறபோதெல்லாம், மஞ்சள் பூக்கள் நிறைந்த பது டீச்சரின் பச்சைநிறக் குடையை, பூமியில் யாரோ நட்டு வைத்து, அது பெரிதாய் வளர்ந்து விட்டதோ என எண்ணத்தோன்றும். அந்த மரத்தின் புளியங்காய்களை உண்டிவில் வைத்து எப்படி அடித்து வீழ்த்துவது என்று கற்றுக் கொடுத்தவர்கள் அருந்ததியர் வீட்டுச் சிறுவர்கள்.

"தமிழும் தெலுங்கும் பேசும் இவர்கள்தான் இந்த மண்ணின் உண்மையான மைந்தர்கள். 'இவர்களோடு விளையாடு! இவர்கள் வீட்டுக்கு போ" என்று அப்பா சொல்வார். தாத்தாவோ "அவர்களைத் தொட வேண்டாம்" என்பார். ஆனால் அம்மத்தா.... (அம்மாவின் அம்மா) "அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை கண்ணு. எல்லாம் ஒரு தாய் வயித்துப் பிள்ளைகதான்..." என்பார்.

அப்பாவும் அம்மத்தாவும் சொன்னதைப் போலவே கிராமத்தின் அத்தனை ரகசிய முடிச்சுகளையும் விடுவித்துக் காட்டிய இவர்கள்தான் எனக்கு நல்ல நண்பர்களாக இருந்தார்கள். நீருக்குள் மூழ்கி விடாதிருக்க காற்றுப் புகாத சுரைக்குடுக்கையை இடுப்பில் கட்டிக் கொண்டு கவுண்டம்பாளையத்தின் மண்டைக் கிணறுகளில் குதித்து இவர்களோடு நீந்தியிருக்கிறேன்.

காலை ஒரு முறை, மாலை ஒரு முறை ஆடுகளையும் மாடுகளையும் ஓட்டிக் கொண்டு வயல்காடுகளுக்கு மேய்க்கப் போகும் இவர்களோடு, கன்றுக் குட்டியை அவிழ்த்துக் கொண்டு நானும்



* நான் பயம் தொலைத்த இளங்கன்று...

* ... இவன் பயமறியா இளங்கன்று!

கிளம்பிவிடுவேன். எருமை மாடுகளைப் பார்த்து பயந்த என்னை சாதுவான ஒரு எருமையின் முதுகில் ஏற்றி உட்கார வைத்து கம்பீரமாக ஊர்வலமாக நடத்திக் காட்டிய அற்புதத் தோழர்கள்.

அவர்களோடு கூட்டணி அமைத்துக்கொண்டு ஓணான்களைத் துரத்தியிருக்கிறேன். பட்டாம் பூச்சிகளை பதுங்கிப் பதுங்கிப் போய் பிடித்திருக்கிறேன். கூட்டமாய் வந்து அமரும் செம்போத்துப் பறவைகளை விரல்விட்டு எண்ணியிருக்கிறேன். ஜோடி ஜோடியாக மேயும் மயில்களை மணிக்கணிக்கில் கவனித்திருக்கிறேன்.

மேய்ச்சலுக்கு வரும் செம்மறியாடுகளில் விரிந்த கொம்புகளோடு திரியும் பொலிகடாக்களை, அவற்றின் தலையில் கைகளால் மோதி



# புழுதி... புளியமரம்... பெரிய அப்புச்சி!

கோபமூட்டினால் போதும்! முன்னங் கால்களைத் தூக்கிக் கொண்டு முட்ட வரும் அழகை ரசித்திருக்கிறேன். கவுண்டம்பாளையத்தின் வாசம் மிக்க புழுதியில் புரண்டு விளையாடிய என் தோள் மீது கைபோட்டு நடந்த இரண்டு தோழர்கள் பாப்பியன், அமாவாசை. இவர்களின் வீடுகளுக்கும் யாரிடமும் சொல்லாமல் போயிருக்கிறேன்.

ஊர் எல்லையில் ஒதுக்குப்புறமாய் வாழ்வது ஏன் என்று அவர்களின் சின்னஞ்சிறு குடிசை வீடுகள் யோசிக்க வைத்திருக்கின்றன. இன்று பாப்பியனும், அமாவாசையும் வளர்ந்து மில் வேலைக்குப் போய்விட்டார்கள். அவர்களது வீடுகளில் டி.வியும், டெலிபோனும் இடம் பிடித்துவிட்டன. அவர்களது குழந்தைகள் சீருடை அணிந்து பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்கள். கிராமத்தில் எல்லோரும் சமமாகிவிட்டார்கள். இந்த வாழ்க்கை மாற்றத்தைப் பார்க்கும்போது சந்தோஷத்தால் மனம் நிறைந்து வழிகிறது. ஆனால் மீண்டும் அந்த கிராமத்து வாழ்க்கை கிடைக்காதா என்று ஏங்குகிறது

இப்பொழுது கிராமத்துக்குப் போனாலும் கையசைத்துக் கூப்பிடும் அந்தப் புளியமரத்தில் அன்று எப்படியாவது ஏறி

விடத் துடித்தேன். ஏற முயன்று கைகளில் சிராய்ப்புகளோடு வீடு திரும்பிய என்னை, தனது தோளில் ஏற்றிக் கொண்டு புகையிலைத் தோட்டங்களின் வழியே புளியமரம் நோக்கி நடந்தார் பெரிய அப்புச்சி (அம்மாவின் பெரியப்பா).

உச்சிவெயிலில், தோளில் இருந்த என்னைத் தூக்கி லாகவமாக மரத்தில் ஏற்றிவிட்டார். நம்பவே முடியவில்லை. விலாப்புறங்களில் சிறகு முளைத்துவிட்ட உணர்வு. துறுதுறுவென்று கிளைகளில் தாவி ஏறினேன். ஒரு கிளையில் காக்கையின் கூடு. "தாத்தா, கூடு!" என்றேன். "இல்ல கண்ணு, அது காகத்தோடு வீடு... அதைக் கலைக்கக்கூடாது. கீழே வந்துடு" என்றார். நான் கூடென்றேன். தாத்தா வீடென்றார். கிளையை விட்டுக் கீழே இறங்கி வந்து "தாத்தா, பக்கத்துலே வாங்க உங்க தோள்லே இறங்கணும்" என்றேன். அவரோ... "இனிமே நீ களுவா இறங்கலாமப்பா... மரத்தோட முடிச்சைப் பிடிச்சு இறங்கு" என்று சொல்லிவிட்டு வரப்பில் நடந்தார். எனக்கு கை கால்கள் உதறின. தாத்தா தூரமாய் நடக்க... நடக்க... திக்கென்று இதயம் கனக்க பதினைந்தடி உயர மரத்திலிருந்து எப்படி இறங்கினேன். தெரியவில்லை!

மூச்சிறைக்க ஓடிப்போய் தாத்தாவைப் பிடித்தேன்.

"பார்த்தியா, இறங்குவேன்னு சொன்னேனல்லோ?" என்றபடி மீண்டும் தோள்களில் ஏற்றிக் கொண்டார்.

"பேராண்டி, அந்தப் புளியமரத்துல... தூக்குப்போட்டு உயிரை மாய்ச்சவன் காத்து சுத்துதுன்னு ஊருக்குள்ள சொல்லுவாங்கோ. நீ மரத்துல தொத்தி ஏறினியே... காத்து கருப்பு எதுனா பார்த்தியா?"

• அம்மாவின் உயிர்...அம்மத்தா



சகஜமாகக் கேட்டார்.

"காத்து கருப்புன்னா என்ன தாத்தா?" புரியாமல் கேட்டேன்.

"அதானப்பா பேய்! பிசாசு! ஆவி" என்றார் அப்பாவியாக...

எனக்கு பகீரென்று இருந்தது.

தாத்தா மறுபடியும் கேட்டார். "என்ன கண்ணு... பார்த்தியா?"

"இல்லே" என்றேன்.

"இந்த மனுசங்களைப் பாரு! இத்தனை நாள் பொய் சொல்லி சின்னப் பிள்ளைகளை எப்படி பயமூட்டி வெச்சிருக்கான்னு" எனக்குள்ளிருந்த பயத்தைப் பிடுங்கி வீசின அவரது வார்த்தைகள்.

எப்போதும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்கும் அவரோடு, குதிரை வண்டியில் சவாரி செய்வது ஆனந்தமான அனுபவம்...



• கிராமம் எனக்குச் சாமரம்...

பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, "அப்புச்சிக்கு (அம்மாவின் அப்பா) நீங்கெல்லாம் பிள்ளைங்க... பெரிய அப்புச்சி பிள்ளைங்க எங்கே?" என்றேன் அம்மாவிடம்...

"அவருக்கு நாங்கதானப்பா குழந்தைங்க... எங்களைத் தூக்கி வளர்த்தது அவருதான். அவங்களுக்குப் பிள்ளைங்க இல்ல. தொண்ணூறு வயசாகுது. பாகத்தைப் பிரிச்சுக்காமல் தம்பிகூடவே வாழ்ற அதிசயப் பிறவிப்பா அவர்... அவரைக் கேட்காமல் எங்கப்பா இதுவரைக்கும்

துரும்பைக்கூட கிள்ளிப் போட்டதில்லை கண்ணா'' என்றார்.

பெரிய அப்புச்சி போல அபூர்வ மனிதர்களின் மடியில் தவழ வைத்த கிராமத்துக்குச் சென்று பத்து நாள் தங்கும் கொடுப்பினை, ஒவ்வொரு கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது மட்டும்தான் வாய்க்கும். பள்ளி நாட்களில் எப்போது டிசம்பர் வரும்? எப்போது கிராமத்துக்குப் போகலாம் என்று நாட்களை எண்ண வைத்தன, அப்பா அம்மாவின் கிராமங்கள்.



• மாசற்ற கிராமம்...மாசற்ற மனிதர்

மாசுமருவற்ற தெளிந்த வானம் கிராமத்தில் மட்டும்தான் கிடைக்கும். தாத்தா வீட்டின் முற்றத்தில் படுத்துக் கொண்டு, தனிமையில் நட்சத்திரங்களை ரசித்த அந்த நாட்கள் ஒவ்வொன்றும் சொர்க்கம்...

"நாம கிராமத்துலேயே இருந்து விடலாமா?'' அப்பாவிடம் கேட்டேன். அவரது பதில், கிராமத்தை தீவிரமாய்க் காதலித்த என்னை ஒருமாதிரி சிந்திக்க வைத்தது.

"நிலத்துல பாடுபட்டு, விளையறத சாப்பிட்டு, ஒழைச்ச களைப்பில தூங்கி, எழுந்து குழந்தை, குட்டி, குடும்பம்னு வாழ்ந்துட்டுப் போறதுதானப்பா கிராமத்து ஜனங்க வாழ்க்கை. இங்கே வாழ்றவங்க வறுமையைக்கூட இனிமையா எடுத்துகிறவங்க.

"நம்ம குடும்பம்கூட எளிமையான குடும்பம்தான். தாத்தா விட்டுப் போன பதினைந்து ஏக்கரா வானம் பார்த்த பூமி... அதுல விவசாயம் பார்த்துதான் உங்க பாட்டி என்னைப் படிக்க வெச்சாங்க.

"எஸ்.எஸ்.எல்.சி படிக்கிறப்போ ஒரு சோதனை வந்திச்சு! நம்ம நிலத்துல சோளம் விளைஞ்சு அறுவடை நடந்தது. அந்த நேரத்துல கடைசி மாசம் மந்த்திலி ஃபீஸ் 5 ரூபாய் 25 பைசா கட்டச் சொன்னாங்க. பாட்டி சுருக்குப் பையிலே தேடித் திணறி கொடுத்தாங்க. மறுநாள் ஸ்பெஷல் பீஸ் 11 ரூபா 50 பைசான்னாங்க. உங்க பாட்டிக்குக் கோபம் தாங்க முடியலை. இருக்கிற சில்லறையெல்லாம் பொறுக்கிக் குடுத்தாங்க. அடுத்தநாள் குரூப் போட்டோ எடுக்க 3 ரூபா கட்டச் சொன்னாங்க. தயங்கித் தயங்கி வந்து கேட்டேன். "ஏம்ப்பா, நான் சோள அறுவடைக்குக் கூலி குடுப்பனா... போட்டோவுக்குப் பணம் குடுப்பனா...? இப்ப இந்த போட்டோ இல்லைன்னு தான் அழுதாக்கும்! கஷ்டத்தைப் புரிஞ்சுக்கோ'' என்று அனுப்பிவிட்டார்.

இன்று பல கோடி பிரேம்கள்ல என்னோட முகம் பதிவாகியிருக்கு. ஆனால் ஒரு கோடி கொடுத்தாலும் அந்த குரூப் போட்டோ கிடைக்குமா? மூணு ரூபா கொடுக்க முடியாமல், ஆறுவருஷம் கூடப் படிச்ச மாணவர்கள், சொல்லித் தந்த ஆசிரியர்களோடு சேர்ந்து போட்டோ எடுத்துக்க முடியாம வீட்டுக்குத் திரும்பின அந்த நிமிஷம் நினைச்சேன். இந்த அவலம் ஒழியணும், உலகம் நம்மைத் திரும்பிப் பார்க்கிற மாதிரி ஏதாவது சாதிக்கணும்... அதுக்கு பட்டணம்தான் சரியான இடம்னு தோணிச்சு. ஏழ்மையும், வறுமையும் எனக்குத் தடைக்கல்லா இருக்கல, உந்து சக்தி'' என்றார். அப்பாவுக்கு பட்டணம் லட்சிய பூமி... எனக்குப் பதற்றத்தை உண்டு பண்ணும் இடம்.

விடுமுறை முடிந்து சென்னைக்குத் திரும்பியபோது எனது பள்ளியிலிருந்து அப்பாவுக்கு ஒரு கடிதம். பிரித்துப் படித்த அப்பாவின் முகம் அதிர்ச்சியில் உறைந்து போனது...

(டைரியைத் தொடர்வேன்)





**மேஷம்** : சுமாரான வாரம். உத்தியோகத்தில் இடமாறுதல் காத்திருக்கிறது. திருமணம் ஆகாமல் தடைப்பட்டவர்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தைகளுக்கு நற்பலன் கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு மந்த நிலை இருக்கும். கொடுக்கல் வாங்கல் சுமார். தாயாரின் உடல்நிலையில் சற்று கவனம் தேவை. ஆரோக்கியத்தில் சற்று நலிவு இருக்கும். குரு / சனி வழிபாடு செய்யவும்.

**ரிஷபம்** : மேன்மையான வாரம். தொட்டது துலங்கும். வெற்றி மேல் வெற்றி வரும். குழந்தைகள் பற்றின மனக் கவலை தீரும். குடும்பத்தில் சுபகாரியம் கை கூடும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, பணி உயர்வு கிடைக்கும். சுய தொழில் செய்பவர்களுக்கு நற்பலன் கிடைக்கும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். மாணவ மாணவியர்களுக்கு வசந்த காலம். புதிய தொழில் தொடங்க ஏற்ற காலம். வீடு வாசல் வாகனம் வாங்க நல்ல நேரம்.

**மிதுனம்** : நல்லது நடக்கும். மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் ஏற்படும். திருமணம் கைகூடும். பொருளாதார ஏற்றம் பெறும். புதிய முயற்சிகள் கைகூடும். வேலை மாற்றம் வரும். தனம் பெருகும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள் நன்மை பெறுவார்கள். குழந்தைகள் வழியில் நற்பலன் கிடைக்கும். குரு / சனி / கேது வழிபாடு செய்யவும்.





## 6.7.2005 முதல்

# நடக்குமென்பார்; நடக்கும்!





## ராசி பலன்

## 2.7.2005 வரை

## தஞ்சை பரத்வாஜ்





**கடகம் :** நன்மையும் தீமையும் கலந்த வாரம். தெய்வ அனுகூலம் இருக்கிறது. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கொடுக்கல் வாங்கல் சுமார். திருமணத் தடங்கல்கள் நீங்கி திருமணம் கை கூடும். குழந்தைகளுக்கு நற்பலன் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தொழிலில் மந்த நிலை ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் அடங்கும். குரு / சனி வழிபாடு அவசியம்.

**சிம்மம் :** மலைபோல வரும் கஷ்டம் பனிபோல் போகும். வாக்கு வாதம் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவி அனுசரித்துப் போவது நல்லது. குடும்பத்தில் நல்ல காரியம் நடக்கும். கைப்பொருள் மீது கவனம் தேவை. தொழிலில் மந்த நிலை இருக்கும். உத்தியோகத்தி லிருப்பவர்கள் அவசரப்பட்டு வேலை மாற வேண்டாம். ராகு / கேது / சனி வழிபாடு அவசியம்.





**கன்னி :** சனீஸ்வரபகவான் அனுகிரஹம் பரிபூரணமாக இருக்கிறது. எதிலும் முன்னேற்றம் ஏற்படும். இதுநாள் வரை இருந்துவந்த சிரமங்கள் குறையும். பொருளாதாரம் சீர்படும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புது முயற்சியில் அநுகூலம் ஏற்படும். சுபகாரியம் கைகூடும். மனக்கவலை போகும். குரு / ராகு / கேது வழிபாடு அவசியம். புது வீடு, வாகனம் வாங்க ஏற்ற காலம்.

**துலாம் :** சுமாரான வாரம். மொத்தத்தில் நல்லதும் கெட்டதும் கலந்த வாரம். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். திருமணம் ஆகாமல் தடைப்பட்டவர்களுக்கு திருமணம் கைகூடும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. தொழில் செய்பவர்கள் நிதானத்துடன் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். குரு /சனி வழிபாடு சிறந்தது.

**விருச்சிகம் :** பொன்னான வாரம்.





## பரஜ்வாஜ் பதில்கள்

**● பி.எஸ்.பரமேஸ்வரன், பெங்களூர்**

**என் மகனுக்கு நல்ல படிப்பும், வேலையுமிருந்தும் திருமணம் கைகூடுவது தாமதமாகிறது. எப்போது திருமணம் கைகூடும்? பரிகாரம் ஏதும் இன்னும் செய்ய வேண்டுமா?**

ஜாதகருக்கு குரு பலம் இருந்து தசாபலம் இல்லாததால் திருமணம் தாமதமானது. ஆகஸ்ட், 2005க்குப் பிறகு திருமணம் நடக்கும். ஜாதகர் பிறந்த ஊருக்கு அருகிலிருக்கும் ஊரிலிருந்து, படித்த, அழகான, ஈஸ்வரி என்று முடியும் பெயர் கொண்ட பெண் அமையும். ஸர்ப்ப தோஷம் உள்ள ஜாதகமாகப் பார்க்கவும்.

**● ஏ.எம். தியாகராஜன், சேலம் - 1**

**என் மகனுக்கு முதல் திருமணம் விவாகரத்தாகிவிட்டது. 7 வருடம் கழித்து மீண்டும் திருமண முயற்சி செய்கிறேன். திருமணம் கைகூடுமா? செய்யும் தொழிலில் முன்னேற்றம் இருக்குமா?**

உங்கள் மகனுக்கு செப்டம்பர் 2005க்குப் பின், தெற்கு திசையிலிருந்து, இரு உடன்பிறந்தவர் உள்ள பெண் திருமணத்துக்கு அமையும். தொழிலில் நல்ல முன்னேற்றம் காணும்.

**● ஆர்.நாகராஜன், சென்னை - 117**

**எனக்கு ஜாதகம் இல்லை. என் மனைவிக்கு மட்டுமே ஜாதகம் உள்ளது. திருமணமாகி இதுவரை குழந்தை பாக்கியம் இல்லை. இனிமேல் குழந்தைப் பேறு கிட்ட வாய்ப்பு உள்ளதா?**

உங்களுக்கு இன்னும் ஓராண்டில் குழந்தைப் பேறு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. வைத்தியச் செலவுகள் செய்வது தேவையில்லை. சதயம் / சுவாதி / திருவாதிரை நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறக்கும்.

**● பெயர் வெளியிட விரும்பாத வாசகர், ஆடுதுறை**

**என் மகளுக்கு 10வது வரை படிப்பு, கழுத்து சற்று சாய்வாக இருக்கும். வேலையுமில்லை. 99ல் திருமணம் நடந்து விவாகரத்தாகிவிட்டது. இனி என் மகளுக்கு மறுமணம் கூடுமா? நல்ல குடும்ப வாழ்க்கை அமையுமா?**

உங்களுக்கு மகளுக்கு ஏப்ரல் 2006க்குப்

சுபநிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடக்கும். சிலர் அயல் தேசம் செல்பவார்கள். புதிய வீடு வாகனம் வாங்க ஏற்ற காலம். புதிய தொழில் தொடங்க நல்ல நேரம். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். மாணவ மாணவிகளுக்கு நற்பலன் கிடைக்கும். வழக்கு வெற்றி பெறும். புனித ஸ்தலங்கள் செல்வீர்கள். வியாபாரிகள் ஏற்றம் பெறுவார்கள்.

**தனுசு :** சுமாரான வாரம். எதிலும் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும்போது பார்த்துச் செல்லவும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. உதத்தியோகத்தில் நெருக்கடிகள் இருக்கும். அவசரப்பட்டு வேலை மாற வேண்டாம். கோபப்படாமல் பொறுமை காக்கவும். கணவன் மனைவியிடம் அனுசரணை தேவை. வாக்குவாதம் வரும். குழந்தைகள் வழியில் நல்ல காரியம் நடக்கும். குரு / சனி / ராகு / கேது வழிபாடு அவசியம்.

**மகரம் :** யோகமான வாரம். நினைத்தது நடக்கும். குடும்பத்தில் நல்ல காரியம் நடக்கும். திருமணம் ஆகாத ஆண் பெண்களுக்கு திருமணம் கை கூடும். வழக்கு வியாஜ்ஜியம் வெற்றி காணும். வியாபாரிகள் புதிய தொழில் செய்ய ஏற்ற காலம். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு ஏற்படும். சிலருக்கு வெளிநாடு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும்.

**கும்பம் :** சனீஸ்வர பகவான் கடாக்ஷம் பெற்ற உங்களுக்கு எதிலும் வெற்றி வாகை சூடும் வாரம் இது. வேலை வாய்ப்பு கிட்டும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு அயல்நாடு செல்லும்

பின் மறுமணம் கூடும். மகளுக்கு உள்ளது போல் பாவ கிரஹ ஜாதகராகப் பார்த்து கவனமாகச் சேர்த்தால் நல்ல குடும்ப வாழ்க்கை அமையும்.

● **வி.டி. சம்பந்தம், ஈரோடு**

***என் மகளுக்கு திருமணம் தடைப் பட்டுக் கொண்டே போகிறது. எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் பலனில்லை. திருமணம் எப்போது கை கூடும்?***

உங்கள் மகளுக்கு 28 வயதில் திருமணம் கைகூடும். வடக்கு திசையிலிருந்து, உறவு அல்லாத, படித்து நல்ல வேலையிலிருக்கும், முருகன் பெயர் கொண்ட வரனாக அமையும்.

**ஆர். கண்ணகி, சென்னை - 99**

***என் கணவருக்கு 2001ல் வியாபாரத்தில் 10 லட்சம் வரை நஷ்ட மேற்பட்டது. கடன் இன்னும் அடையவில்லை. எப்போது எங்கள் கடன் தீரும்? பரிகாரம் என்ன செய்ய வேண்டும்?***

வரும் சுக்ர தசையில், ஜூலை 2005க்கு மேல் உங்கள் கடன் தீரும். தொழிலில் அகலக்கால் வைக்கவேண்டாம். விக்னேஸ்வரர் பூஜை செய்து வரவும்.

வாய்ப்பு வரும். கணவன் மனைவிக்குள் அனுசரணை தேவை. வண்டி வாகனத்தில் செல்லும்போது நிதானம் தேவை. ஆரோக்கியதில் கவனம் தேவை. முதலீடுகள் செய்வதை சற்று தள்ளிப் போடவும். வெற்றிகரமான வாரம். ராகு / கேது வழிபாடு அவசியம்.

**மீனம்** : குரு, சனி கடாக்ஷம் பெற்ற உங்களுக்கு இந்த வாரம் மேன்மையான வாரம். தொட்டது துலங்கும். வீடு வாசல் வாங்குவீர்கள். ஆரோக்கியம் குன்றி இருக்கும். பூர்வீகச் சொத்து பற்றி நல்ல செய்தி வரும். குழந்தைகள் பற்றிய கவலை தீரும். குடும்பத்தில் திருமணங்கள் நடக்கும். புதிய தொழில் தொடங்க ஏற்ற காலம். உத்தியோக உயர்வு, பதவி மாற்றம் ஏற்படும். பொருளாதாரக் கஷ்டம் இராது. கலைஞர்களுக்கு மேன்மை கிட்டும். ராகு / கேது வழிபாடு அவசியம். ●


VBC யின்
பாட் ஆஃப் கோல்டு
இவ்விழாக் காலத்தில் மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பல வியப்பூட்டும் பரிசுகளை வெல்ல ஓர் அரிய வாய்ப்பு!




உம்மிடி குழுமத்தின் ஓர் அங்கமான VBC 1900லிருந்து பல குடும்பங்களுக்கு அதன் டிசைன்கள், தரம் மற்றும் நேர்மை ஆகியவற்றின் மூலம் புன்னகையையும் பொன்னகையையும் அளித்துள்ளது. இந்த விழாகாலத்தில் VBC யின் 'பாட் ஆஃப் கோல்டு' ரூ. 300, ரூ. 500, ரூ. 1000, ரூ. 1500 மற்றும் ரூ. 2000 என்ற மாதாந்திர தவணை திட்டத்தை அளிக்கிறது. இதில் நீங்கள் உறுப்பினர் ஆவதன் மூலம் 100 சவரன்கள் மதிப்பு வரையிலான தங்கத்தை வெல்லும் ஓர் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுகிறீர்கள்.

ஆகவே, இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். கண்ணைக் கவரும் ஒரு பரிசினை தேர்ந்தெடுத்துச் செல்லுங்கள்.

மேலும், வைரங்கள், பிளாட்டினம் ஆகிய நகைகளிலும், செய்கூலி, பழுதுபார்த்தல், பாலிஷ் மற்றும் மதிப்பீடு ஆகிய கட்டணங்களில் வியப்பூட்டும் தள்ளுபடியும் உண்டு.



VBC Jewellery
HOUSE OF VUMMIDI

பனகல் பார்க், 11-B, சர் தியாகராயர் சாலை, தி. நகர், சென்னை 600 017. Tel : 2434 2407 /6297.

78, G.N. செட்டி சாலை (ஹோட்டல் ரெசிடென்ஸிக்கு எதிரில்), தி. நகர், சென்னை 600 017. Tel : 2822 9656/9660

● **எனக்கு அடிக்கடி உள்ளுணர்வு எச்சரிக்கைகள் (இன்ட்யூஷன்) வருகின்றன. அவற்றை ஒதுக்க வேண்டுமா? அல்லது மதித்துச் செயல்பட வேண்டுமா?**

- கே.விஜயா, திருச்சி - 2

**டாக்டர் ஆர்.தாரா, மனவியல் மருத்துவர் :**

''‘என்னுடைய அத்தனை உள்ளுணர்வுகளுமே பலிக்கின்றன' என்கிற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. என்றாலும் அவற்றை ஒதுக்கித் தள்ளி விட்டு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்பதுமில்லை. நெரிசலான சாலையை குறிப்பிட்ட நொடிகளுக்குள் விபத்தின்றித் தாண்டிச் செல்வோமா என்கிற கேள்விக்கான பதில் எப்படி 50 - 50யோ, அதுபோலத்தான் உள்ளுணர்வுகள் பலிப்பதும். உள்ளுணர்வுகளைக் கண்டு ஓவர்-ரியாக்ட் செய்ய வேண்டியதில்லை. 'என் மகளின் திருமணம் இந்த வருடமே நடந்து விடும்', 'மிக விரைவிலேயே எனக்கு வேலை கிடைத்து விடும்' என்பது போன்ற பாஸிடிவ் உள்ளுணர்வுகள் அரிதாகவே தோன்றுகின்றன. மாறாக 'ஏதோ விபத்து நடக்கப் போகிறது', 'வீட்டில் கெட்ட காரியம் நடக்கப் போகிறது' என்பது மாதிரியான எதிர்மறை உள்ளுணர்வுகள்தான் அதிகம் தோன்றுகின்றன. அவற்றிற்குதான் நாம் முக்கியத்துவமும் கொடுத்து நடுங்கிக் கொண்டிருக்கிறோம். இது தேவையில்லாத கவலை.

● **எனக்கு வயது 45. ரெகுலராக மாதவிலக்கு வருவது வழக்கம். ஆனால் கடந்த 45 நாட்களாக மாதவிலக்காகவில்லை. அப்படியே விட்டுவிடலாமா? அல்லது மருத்துவரிடம் சோதனை செய்துகொள்ள வேண்டுமா?**

- எம்.பங்கஜம் வாசுதேவன், சென்னை - 61

**டாக்டர் உமா ராம், மகப்பேறு மருத்துவர் :**

ஐம்பது நாட்கள் வரை மாதவிலக்காக



# தொடர்ந்து

வில்லையென்றால், மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. கருத்தரிக்கவில்லை என்பதை முதலில் உறுதி செய்து கொண்டபின், இது மெனோபாஸுக்கான (மாதவிலக்கு நின்றுபோதல்) அறிகுறியா, அல்லது வெளியேற்றம் நிகழ முடியாத அளவுக்கு ஏதாவது சிக்கலா என்பதை மருத்துவரால்

பரிசோதித்துக் கூற முடியும். மேற்படி சிக்கல் என்றால், மாதவிலக்கு வருவதற்கான மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். ஏனென்றால் அப்படியே விட்டுவிட்டால், இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து மாதவிலக்காகும்போது உதிரப்போக்கு மிக அதிகமாக இருப்பதோடு, நிறைய நாட்களுக்கும் அது தொடரலாம்.



● **முன்பு முகப்பரு இருந்த இடங்கள் இப்போது கறுப்பாகத் தெரிகின்றன. இந்தக் கறுப்பு அடையாளங்களை சீக்கிரமே மறையச் செய்ய வேண்டுமே. ப்ளீஸ், வழிகாட்டுங்கள்.**

**- எல்.கே. கோவை - 2**

**எம்.ஹசீனா சையத், மூலிகை அழகுக்கலை நிபுணர் :**

வெள்ளரிச்சாற்றில் பஞ்சை நனைத்து முகம் முழுவதும் ஒத்தித் துடையுங்கள். உருளைக்கிழங்குச் சாற்றில் தேனைக் குழைத்து இந்தக் கலவையை கறுப்பாக உள்ள பகுதிகளின்மீது ஒரு முகமூடி போலத் தடவுங்கள். பத்து நிமிடங்கள் அப்படியே வைத்திருந்த பிறகு முகத்தைக் கழுவிக் கொள்ளலாம்.

# அழுறானே..!

● **என் நான்கு மாதக் குழந்தை மாலை வேளைகளில் அடிக்கடி அழுகிறான். கழுத்தில் உரம் விழுந்திருக்கிறது என்கிறார் பாட்டி. அதற்கான சில வழிமுறைகளைப் பாட்டி கடைப்பிடித்தும் அழுகை நிற்பதில்லை. என்ன செய்வது?**

**- எழிலரசி, திருப்பூர்**

**டாக்டர் ஜெயந்தி விஸ்வநாதன், குழந்தைநல மருத்துவர்:**

உரம் விழுவது என்பதே மருத்துவத்தில் கிடையாது. பழங்காலத்தில் குழந்தைக்குக் கழுத்தில் உரம் விழுந்ததால்தான் அழுகிறது என்று அதன் கழுத்தில் ஆழாக்கை வைத்து உருட்டுவது, குழந்தையைத் துணியில் போட்டு உருட்டுவது என்றெல்லாம் செய்வார்கள். இவை மிகவும் ஆபத்தானவை. மூளையில் ரத்தக் கட்டிகள் கூடத் தோன்றலாம். குழந்தை அழுதால், அதன் வயிற்றில் வாயுத் தொந்தரவு இருக்க வாய்ப்பு உண்டு. தோளில் போட்டு சிறிது நேரம் தட்டிக்கொண்டிருந்தால் வாயு தானாகவே வாய் வழியாகவோ பின்புறமாகவோ வெளியேறிவிடும். அதற்குப் பிறகு குழந்தை அழுகையை நிறுத்திவிடும். தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் அழுதால், டாக்டரிடம் அழைத்துச் செல்வது நல்லது. ஏனென்றால் குழந்தையின் அழுகைக்கு காதுவலியிலிருந்து தொடங்கி பலவித காரணங்கள் உண்டு.

**- ஜி.எஸ்.எஸ்.**

# கவிதை எழுதுவது எப்படி?

**'வீட்டிலிருந்தபடியே குறைந்த செலவில் கவிதை எழுதுவது எப்படி?' எனும் உலகக் கவிதை ஆராய்ச்சி மன்றக் கட்டுரையிலிருந்து உங்களுக்காக சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள்.**

**புதுக்கவிதை :**

கொசு, பூச்சி, மூட்டைப் பூச்சிக்கு அடுத்து நம்மை அதிக மாக 'மகிழ்விப்பது' புதுக்கவிதை கள் தான். கொசுவாவது கடிப் பதற்கு முன்னால் 'கொய்ங்க்' என்று காதில் வந்து அபாயச் சங்கு மாதிரி சத்தம் போடும். புதுக்கவிதை அதையும் செய் யாது. நேர்த் தாக்குதல் தான்.

அது சரி, எதையெல்லாம் புதுக்கவிதையில் எழுதலாம்?

மாங்காய் சுண்டல், பல் உடைந்த சீப்பு, தேங்காய் மூடி, கீ செயின், வாழைப்பழத் தோல், மூக்குப்பொடி டப்பா என்று எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் சுவாரசியமாக எழுத வேண்டும். இடை யிடையே தேவையான அளவு இங்கிலீஷ் சேர்த்துக் கொள்ளலாம். பாதகமில்லை.

பிற ஜீவராசிகளை அதிகமாக இம்சிக்கக் கூடாது எனும் நோக்கத்துடன் பேனாவைப் பிடிப்பவர்களுக்கு ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமம் இருக்கும். மனதைக் கல்லாக்கிக் கொண்டால் போகப் போகச் சரியாகிவிடும்.





**உதாரணம்**

*நண்பன்*
*செருப்பு*
*வாரோடு*
*த்ரீ டேஸ்*
*சண்டை*

இப்படித் தொடங்கி எதையாவது எழுதிக் கொண்டே போகலாம். இடையிடையே உடைத்து உடைத்து எழுத வேண்டும். உயிரே போனாலும் ஒரு வரியில் மூன்று வார்த்தைகளுக்கு மேல் இருக்கக்கூடாது.

**மரபுக் கவிதை :**

இன்றைய தேதியில் சௌகரியமான ஒரே கவிதை வடிவம் மரபுக் கவிதை தான். பார்ப்பதற்குக் கடினம் போல் தோன்றினாலும் எழுதுவது மிகச் சுலபம். ஆறாவது வகுப்பு மனப்பாடச் செய்யுளை ஒரு முறை எடுத்து வாசித்து விட்டால் போதும். மரபுக் கவிதைகள் அப்படியே வந்து சொட்டு சொட்டாகக் கொட்டும்.

மரபுக் கவிதை எழுதுவதற்கு நிறைய மனோதிடம் வேண்டும். ஆங்காங்கே சிறிது தமிழ் போல தோற்ற மளிக்கக்கூடிய சில வார்த்தைகளைக் கோத்துவிட வேண்டும். மற்றபடி புகுந்து விளையாடலாம். 'கவின்



சேர் நன்குறுமு' 'ஓலப்பனக்கூடாறு' என்று மனதில் தோன்றியதை எல்லாம் எழுதலாம். யாரும் ஃபோன் செய்து 'கவின்சேர் நன்குறுமு' என்றால் என்ன, பெயர் விளக்கம் கூறுக என்று டீச்சர் மாதிரி பிரம்பை எடுத்து வந்து கேட்கப் போவதில்லை.

**உதாரணம்**

*கவின்சேர் நன்குறுமு*
*அற்றைத் திங்கள் பலம்*
*சவின்கான்போன் மிளகு*
*கேளேரோ விஞ்சல் நிலம்!*

**கொக்கரக்கூ :**

ஹைக்கூ, லிமரைக்கூ இந்த வரிசையில் ஜப்பான் பஸ் ஸ்டாண்டிலிருந்து சென்ற வாரம் இறக்குமதி செய்யப் பட்ட புத்தம் புதிய வடிவம் தான் 'கொக்கரக்கூ.' சற்று சிரமம் பார்க்காமல் பழகிக்கொண்டால், உங்களை கையில் பிடிக்க ஆளில்லை. கொக்கரக்கூ என்றால் என்ன என்று கட்டாயம் யாராவது கேட்பார்கள். புதிய வடிவம் அல்லவா? அதனால் முன்கூட்டியே ஒரு விளக்கத்தைத் தயார் செய்து வைத்துக் கொண்டு, கேட்டவுடன் சுவிட்ச் போட்டது போல் ஒப்பிக்க வேண்டும். கொக்கரக்கூ அளவில் குட்டியூண்டாக இருக்க வேண்டும். பஸ் டிக்கெட்டில் இரண்டே கால் இன்ச்சுக்கு மேல் இருக்கக்கூடாது. ஸ்கேல்



வைத்து அளந்து நின்று நிதானமாக எழுத வேண்டும். எழுதுவதற்கு முன்பே நிறைய யோசிக்க வேண்டும். (அப்புறம் யார் யோசிக்கப் போகிறார்கள்?)

**உதாரணம்**

*நாரையின்*
*துனிநாக்கில்*
*கட்டி*

அவ்வளவுதான். அதற்கு மேலே போகக்கூடாது. ஏன் கட்டி வந்தது, நாரை எதைச் சாப்பிட்டது, அதற்கு அஜீரணமா, அல்சரா என்றெல்லாம் விவரமாக எழுதக் கூடாது. அது கவிதை விதிகளுக்கு முரணானது. ஜப்பானிலிருந்து யாராவது சண்டைக்கு வருவார்கள். குங்ஃபூ தெரிந்த கவிஞரா யிருந்தால் ரொம்ப ஆபத்து.

**தந்திக் கவிதை :**

அடிக்கடி தந்தி அடிப்பவர்களுக்கு இந்த வடிவம் சுலபமாக வந்துவிடும். எங்கே வேண்டுமானாலும் தொடங்கலாம். எங்கே வேண்டுமானாலும் முடிக்கலாம். முடிக்காமலேயே கூட இருந்து விடலாம்.

**உதாரணம்**

*திரும்பி வரும் வழியில்*
*திடீரென்று*

## ஜாலி ஜூட்!




ஏசியன் கராத்தே சாம்பியன்ஷிப்புக்காக நான் சமீபத்துல ஹாங்காங் போனேன். அங்கிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ள 'மகாவ்'ங்கிற தீவில்தான் போட்டி நடந்தது. ஹாங்காங் துறைமுகம் ரொம்பப் பெரியது. எப்பவும் நானூறு கப்பல் இருந்துகிட்டே இருக்கும். உலகிலேயே சூதாட்டத்துக்கு புகழ் பெற்ற இடம் மகாவ். அப்புறம் நம்ம ஊர் வெயிலிலிருந்து நான் தப்பிச்சிட்டதா மட்டும் தப்பா நினைச்சுடாதீங்க. அங்கேயும் வெயில் கொளுத்திக்கிட்டுதான் இருந்தது. என்ன, இப்ப சந்தோஷமா?

**- கராத்தே தியாகராஜன்**

*அன்றைக்கு வந்ததால் தானோ*
*என்னவோ*
*இந்த அரை டவுசர்*
*பின் யாரிடம் சொல்லி விட்டுப்*
*போனது?*

இதன் பொருள் என்ன என்று நீங்கள் அநாவசியமாக கவலைப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. விமர்சகர்கள் பார்த்துக் கொள்வார்கள். 'பின் யாரிடம்' என்று கடைசி வரியில் வருவதால், இது ஒரு வேளை பின் நவீனத்துவமாகக்கூட இருக்கும். (சில சமயம் தற்போதைய தமிழ்ப் படங்களுக்கும் உதவலாம்.)

**'கட் அண்டு பேஸ்ட்' கவிதை :**

லத்தீன் அமெரிக்கா, ரஷ்யா இரண்டு மட்டும் வேண்டாம். மற்றபடி நிகாரகுவா, பல்கேரியா, பின்லாந்து, சூடான், உருகுவே என்று பக்கத்து பார்டர் கவிஞர்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதைகளை ராத்திரி முழுவதும் கண் விழித்து வாசிக்க வேண்டும். பிறகு, அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சம் 'கட் அண்டு பேஸ்டு' செய்து கடச்கட பரிமாறலாம்.

கூடுமானவரை யாருக்கும் அதிகம் தெரியாத தீவுகளிலிருந்து வெளிவரும் படைப்புகளை எடுத்துக் கொள்ளலாம். ஆதிவாசிக் கவிஞர்களாக இருந்தாலும் பரவாயில்லை. நிறையப் பேரிடம் இருந்து 'தொகுத்ததால்' சற்று சம்பந்தா சம்பந்தம் இல்லாதது போலத் தோன்றும். பயப்பட வேண்டாம்.

**உதாரணம்**

*ஆல்ப்ஸ் மலை அம்பாரக்*
*அகிரா குரசேவா*
*ஆக்ஸிஜன் சரப்பசை எனது*
*பிம்பங்களில்*

(முதல் இரண்டு, கடைசி இரண்டு வார்த்தைகள் தொடர்புடனிருப்பது சொற்குற்றம் என்கிறார் ஜிம்பாப்வேயின் கவிஞர் அட்ரபோ).

யாராவது வந்து கழுத்தில் கத்தியை வைத்து பயமுறுத்தினால் தவிர, ரோடில் செல்லும்போது கல்லை எடுத்துக் கொண்டு துரத்தினால் தவிர, உங்கள் முயற்சிகளை நீங்கள் எப்பொழுதும் விட்டு விடக்கூடாது. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

**- மருதன்**

# விழாதவர்களுக்கு ஒரு விழா!

ஊனமுற்றவர்களை கேலிப்பொருளாக காட்டும் தமிழ் சினிமாவுக்கு மாறாக, இதுபோன்ற வெளிநாட்டுப் படங்களெல்லாம் ஊனமுற்றவர்களின் குணாதிசயங்களையும், திறமைகளையும் அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தையும் உணர்வுபூர்வமாகவும், யதார்த்தமாகவும் செலுலாய்டில் பதிவு செய்கின்றன. அகிரா குரோசோவா, சத்யஜித்ரே போன்ற உலகப் புகழ் பெற்ற இயக்குனர்களின் படங்கள் வரும் ஜூலை 7 முதல் 11 வரை சென்னை ஆனந்த் திரையரங்கில் நடைபெறும் ஊனமுற்றோருக்கான சர்வதேச திரைப் படவிழாவில் திரையிடப் படுகின்றன. காது கேளாத குறைபாடிருந்தும், ஊனமுற்றோரின் நலனுக்காக பாடுபடும் ஜெயஸ்ரீ ரவீந்திரனால் ஆரம்பிக்கப்பட்ட எபிலிடி ஃபவுண்டேஷன் எனும் அமைப்பு, ஊனமுற்றோருக்கான இப்படவிழாவை ஆசியாவிலேயே முதன் முறையாக நடத்துகிறது.

இதன் வைஸ் சேர் பர்ஸனான நடிகை ரேவதி, நெகிழ்ந்தபடி நம்மிடம் பேசியபோது, "உடலில் குறைபாடு உள்ளவர்கள் குறுகியபடி தான் வாழ வேண்டும் என்றில்லை. அவர்களுக்கும் ஓர் உலகம் உண்டு. திறமை உண்டு, பொழுது போக்கு உண்டு. ஊனமுற்றவர்களை பரிதாபமாகப் பார்க்காமல், சகமனிதனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

வெளிநாட்டுப் படங்களோடு டாகுமெண்ட்ரி, பரிசு பெற்ற குறும்படங்கள் போன்றவையும் திரையிடப் படுகின்றன. மணிரத்னம், அடூர் கோபாலகிருஷ்ணன், ராஜீவ் மேனன், ஜெயா பச்சன், நந்திதாதாஸ் ஆகியோர் இத்திரைப்படவிழாவில் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். ஊனமுற்றவர்களை சினிமாவில் எப்படிக் காண்பிக்க வேண்டும் என்பதற்காக, தமிழ் சினிமாவினர் கட்டாயம் பார்க்க வேண்டிய திரைப் பட விழா இது.

- நீலாவள்ளி





• விழாவின் படங்களிலிருந்து

லேண்ட் ஆஃப் த டெஃப் (ப்ரான்ஸ்)

காது கேளாதவர்களின் உலகத்துக்குச் சென்று அவர்களின் தகவல் பரிமாற்றம், துயரங்கள், சந்தோஷங்கள் அனைத்தையும் வெளிக்கொணரும் படம். சைகை மொழியின் அற்புதத்தை உணர்த்தி, வாய் வார்த்தைகளை அனாவசியமென நினைக்க வைக்கிறது.

தி ஸ்னேக் பிட் : (அமெரிக்கா)

வெர்ஜினா என்கிற பெண் தற்செயலாக மனநலக் காப்பகத்தில் தன்னை மீட்டெடுக்கிறாள். தான் அங்கு எப்படி வந்தோம் என்பதே அவளுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. பயமும் அறியாமையும் இருட்டறைக்குள் இழுத்துச் செல்ல, அவளின் நோய்க்கான வேரை தேடிச் சென்று குணமாக்கப் போராடுகிறார், அவளது மனநல மருத்துவர்.



• ஜெயஸ்ரீயுடன் ரேவதி



''மெகா சீரியல் எடுப்பதா சொல் லிட்டு இப்ப சிங்கப்பூர்ல 'ஒரு மாசம் ஷூட்டிங்னு' கூட்டிட்டு வந்துட்டீங் களே... இன்னும் கதை என்னன்னு சொல்லவே இல்லியே?''

''சிங்கப்பூர்ல கிடைக்காததே எதுவும் இல்லைன்னு சொல்றப்ப, கதை கிடைக் காமலா போயிடும்?''

''பண்டிகை நாட்களில் மட்டும் ஸ்பெஷல் புரோக் ராம் எல்லாம் போடறாங்க சரி, ஏன் சீரியல்களைக் காட்டறது இல்லை?''

''அன்னிக்கு ஒரு நாளா வது ஜனங்க சிரிச்சிக்கிட்டு இருக்கட்டுமேன்னுதான்!''



''போன சீரியல்லதான் முழுக்க, முழுக்க என்னை அழ வச்சீங்க... இந்த சீரியல்லியுமா அப்படி?''

''இல்லம்மா. முதல்லேந்து கடைசி எபிஸோட் வரை சிரிக்கறீங்க. நீங்க இதுல ஒரு பைத்தியமா ஆக்ட் பண்றீங்க.''



- ஸ்ரீ

# சிரி சிரி... சீரியல்

''ஏம்மா, 4000வது எபிசோட்ல வந்து சான்ஸ் கேக்கறீங்களே! முன் அனுபவம் இருக்கா?''

''இந்த சீரியல்லியே முதல் எபிசோட்ல குழந்தையா நடிச்சேனே சார்! மறந்துட்டீங்களா?''





''நம்ம சீரியல்ல...நடுவில் 'இவருக்கு பதில் இவர்', 'அவருக்கு பதில் இவர்னு' ஆர்ட்டிஸ்டுகளை மாத்தினோமே! ஜனங்க ரியாக்ஷன் என்ன?''

''நம்ம சீரியலுக்குப் பதில் வேற சீரியல்களைப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க!''



''சார்! சார்! அவ்வளவு வேகமா நடக்காதீங்க... ப்ளீஸ்! நாம எடுக்கறது ஒரு மெகா சீரியல்னு ஞாபகம் வச்சுக்கங்கோ!''

## நீங்கள் கேட்டவை

● ச.ம. இனியன், தி.அகரம்.

? மருத்துவர் ராமதாஸ் சட்ட சபைத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிக்குத் தாவப் போகிறார் என்று செய்தி அடிபடுகிறதே... உண்மையா?

! மத்திய ஆட்சி நிலைத்தால் செய்தி பொய்யாகும். தடுமாறினால், மெய்யாகவும் வாய்ப்பிருக்கிறது.

● கே.எஸ். கந்தரூபி, தத்தனூர்.

? வீடு கெடுவதற்கு மாமியாரும், நாடு கெடுவதற்குச் சாமியாருந்தான் காரணம் என 'மெட்டி ஒலி' பாராட்டு விழாவில் கலைஞர் பேசியுள்ளாரே?

! "மக்கள் கெடுவதற்கு அரசியல்வாதி காரணம்" என்று நாம் சேர்த்துக் கொள்ளலாம். அப்புறம் "நாம் எல்லா அரசியல்வாதிகளையும் சொல்லவில்லை" என்று கலைஞரைப் போலவே ஜகா வாங்கலாம்!



• பொடிபடும் சிகரெட்!



• அடிபடும் செய்தி...!

● சே. தமிழரசி, தென்கடப்பந்தாங்கல்.

? பத்திரிகை நடத்துவதற்கு ஆளுங்கட்சி ஆதரவு தேவையா? எதிர்கட்சி ஆதரவு தேவையா?

! உங்களைப் போன்ற வாசகர்களின் ஆதரவு இருந்தால் போதும்!

● ப.கா. மணிமொழியன், நாகமலை.

? நமது டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஸாவும் விளம்பரப் படங்களில் தலை காட்டத் துவங்கிவிட்டாரே... இது எதைக் காட்டுகிறது?

! சானியா மிர்ஸாவின் பேட்டி படித்திருப்பீர்கள். டென்னிஸுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் பயணம் முதலானவற்றுக்கும், வருடத்துக்கு இரண்டு கோடி ரூபாய் செலவாகிறது என்கிறார். நீங்களும் நானும், ஏன்... அரசாங்கமும் கொடுக்க முடியாத தொகையை விளம்பரங்கள் தருகின்றன. அதை நாம் வெறுப்பானேன்...?

● இரா. சக்கரபாணி, மதுரை-7.

? பெட்ரோல் டீசல் விலை உயர்வைக் கண்டித்து மறியல் நடத்தும் இடதுசாரிக் கட்சியினர் ஆளும் கட்சியாக இருந்திருந்தால், பெட்ரோல் டீசல் விலை உயர்வைத் தவிர்த்திருப்பரா...?

! விலையை உயர்த்தாமல் இருப்பதற்குப் பல வழி வகைகள் உள்ளன. (உ-ம்) (1) விற்பனை வரியைக் குறைப்பது (2) பிரம்மாண்ட சொகுசு கார்களின் உற்பத்தியை 'ஏற்றுமதிக்கு மட்டுமே' என்று கட்டுப்படுத்தி சட்டம் இயற்றுவது (3) பெட்ரோலியம் அல்லாத எரிபொருள் ஆய்வுக்கு ஊக்கமளிப்பது (4) அரசியல்வாதிகளின் மோட்டார்கார் ஊர்வலத்தைத் தடுப்பது, (5) பஸ், மெட்ரோ வசதிகளைச் சீர்ப்படுத்தி, அதிகரித்து தனி நபர் வாகனங்களைக் குறைப்பது... போன்றவை. இவையெல்லாவற்றையும் ஒரு சேர யோசித்து அமல்படுத்தினால், பெட்ரோல்




# தமிழ்நாட்டில் குதிரை வியாபாரம்

விலையைக் கட்டுக்குள் வைப்பது சாத்தியமே.

● பி.ஜெயப்பிரகாஷ்,
சர்க்கார்பதி.

? தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்து மக்கள் இன்று நிம்மதியாக உள்ளனர் சார்...?

! மொத்தத் தமிழ்நாடும்தான். அதான் மெட்டி ஒலி முடிஞ்சுடுச்சு; அன்னியன் ரிலீஸா யிடுச்சு, சந்திரமுகி ஜெயிச்சுடுச்சு... இனி என்ன கவலை தமிழனுக்கு!

● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை.

? தமிழ்நாட்டில் குதிரை வியாபாரம் நடக்குமா...?



* மிதிபடும் சுதந்திரம்!




* அலைபடும் சந்தை!

# நடக்குமா?

! தேர்தல் நெருங்கட்டும்... குதிரை என்ன, யானை வியாபாரம்... ஏன் டைனஸார் வியாபாரம்கூட நடக்கும்!

● சிவகுருநாதன்,
தஞ்சை

? பெட்ரோல் டீசல் விலையானது "தவிர்க்க முடியாதது" - ஜி.கே. வாசன். "தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்" - இடது சாரிகள் "தவிர்த்திருக்க வேண்டும்" - வைகோ "தாங்கிக் கொள்ள வேண்டியதுதான்" கலைஞர் - இப்படியான கூற்று குறித்து...?

! "தாங்கிக் கொண்டு தவிப்பது நம் தலைவிதி!" - மக்கள்

● ஆர். வஸந்தா,
சென்னை - 86.

? வ.உ.சி நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் முதல்வரை வரவேற்க 21 யானைகள், 32 செண்டை வாத்தியங்கள், 30 பஞ்ச வாத்தியங்கள் ஏற்பாடு செய்திருந்தாரே நயினார் நாகேந்திரன். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! டாம்பீகம் ஜம்போ சைஸ்; அதை ஏற்றவர்களுக்கு ஈகோவும் ஜம்போ சைஸ்!

● வீர. செல்வம்,
பூம்புகார் ☐

? சேது கால்வாய்



* தூள்படும் விளம்பரம்!

-தராசு

திட்டத்தால் நன்மை மாநில அரசுக்கா? மத்திய அரசுக்கா?
! அரசியலாக்குவதால் மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் கட்சிகளுக்கு நன்மை.
இந்த அரசியலையும் மீறி திட்டம் நல்லபடி நிறைவேறினால், வாணிபத்துக்கும் நாட்டுக்கும் நன்மை.
இதைக் காட்டிலும் நதி நீர் இணைப்புக்கு முன்னுரிமை தரப்பட்டிருந்தால் மக்களுக்கு நன்மையோ நன்மை.



★ இடிபடும் சாமியார்...!

● பி.கே. வரதராஜன், ஹைதராபாத் - 47.
? இந்தியாவில் இயங்கி வரும் சில கால் சென்டர்கள் நம்பிக்கை துரோகிகளின் இருப்பிடமாக மாறியது பற்றி...?
! ஒரு கறுப்பு ஆடு இருந்தால் மந்தையே மோசமாகிவிடாது என்பது நமக்குத் தெரியும். ஆனால், அயல்நாட்டு மக்களுக்குப் புரியாது. நம்மைத் தவறாக எடை போட வாய்ப்பு அதிகம். எனவே, ஒரு கறுப்பு ஆடுகூட இல்லாமல் கவனமாக இருப்பது மிக அவசியம். கால்சென்டர்களின் வியாபாரம் குறைந்தால், நமது பொருளாதாரம் பலமான அடி வாங்கும்.

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்.
? 'மகளிருக்கு எதிரான வீட்டு வன்முறை பாதுகாப்புச் சட்டம் 2005' என்று புதிய சட்டம் வருகிறதே?
! சட்டம் தேவைதான். ஆனால் குடும்ப அமைதியையும் மகிழ்ச்சியையும் சட்டத்தால் மட்டும் நிலை நாட்ட முடியாது. பண்பாடு வளர்க்கும் கல்விதான் அதைச் சாதிக்கும். மேலும், சட்டம் கடுமையானால், அது துஷ்பிரயோகமாகும் வாய்ப்பும் அதிகம்; அதன் விளைவும் கடுமையாக இருக்கும் என்பதை மறக்கலாகாது.

● ஜே.வி.கே. கண்ணன், திருச்சி - 8.
? 'தேர்தலுக்கு முன் மின் கட்டணத்தை உயர்த்தாவிட்டால் இரண்டாயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும்; நிதிநிலை சீர்கேடு அடையும்' என்று தமிழக அரசை உலக வங்கி எச்சரித்துள்ளதே...?
! தேர்தலுக்கு அப்புறம் நஷ்டத்தை ஈடு செய்து கொள்ள முடியும் என்பது அரசியல் கட்சிகளுக்குத் தெரியாதா என்ன!

● எஸ். சக்தி,
விக்கிரமசிங்கபுரம்.
? டி.வி., சினிமாவில் புகை பிடிக்கும் காட்சிகளைத் தடை செய்து என்ன பயன்? புகையிலை விவசாயத்தையும் சிகரெட் உற்பத்தியையும் தடை செய்ய அன்புமணி முற்படுவாரா...?
! அது அடிப்படை சுதந்திரத்தைப் பாதிக்கும் என்பதால் செய்ய முடியாது. மேலும், லட்சக்கணக்கானவர்களின் பிழைப்பை அது கெடுக்கும். பிரசாரம் மூலம் சிகரெட், புகையிலை விற்பனை படிப்படியாகக் குறைந்தால், புகையிலை விவசாயி வேறு பயிருக்கு மாறுவார். சிகரெட், குட்கா தயாரிப்பாளர்கள் வேறு தொழிலுக்கு மாறுவார்கள். இதுதான் அன்புமணியின் நோக்கம். அவருக்கு வேறு வழி இல்லை.

● செயின்ட்தாமஸ் மனோகரன், பாண்டிச்சேரி - 5★
? உண்மையிலேயே ஈராக்கில் அமெரிக்காவால் ஜனநாயகத்தைக் கொண்டு வர முடியுமா?
! கொண்டு வர முடியாது; திணிக்கத்தான் முடியும். (இப்போது செய்கிற மாதிரி)... அப்புறம் அது எப்படி ஜனநாயகமாக இருக்கும்!

● லதா. சிவகுமார், சென்னை - 33.
? ஒரு குடும்ப விவகாரம் (ரிலையன்ஸ்) நாட்டின் பங்குச்சந்தையை நிர்ணயிக்கும் அளவுக்குச் சக்தி வாய்ந்திருக்கிறதே?
! நாட்டின் மொத்த தொழில் உற்பத்தியில் ரிலையன்ஸின் பங்கு கணிசமானது என்பதால், பங்கு மார்க்கெட்டையும் ரிலையன்ஸ் குடும்ப விவகாரம் பாதிப்பதில் வியப்பில்லை.

❒ ரூ 100 பரிசு பெறுபவர்:
வீர செல்வம்,
பல்லவனம்,
பூம்புகார் அஞ்சல்,
சீர்காழி தாலுகா,
609 105.

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
செயின்ட் தாமஸ் மனோகரன்
C/o P.G.F Ltd,
321, மறைமலையடிகள் சாலை,
நெல்லித்தோப்பு, பாண்டிச்சேரி - 5.
605 005.

சின்னச் செய்திகள்



மும்பையில நடிகை கம் எம்.பி. ஜெயப்ரதா போனவாரம் நாட்டியம் ஆடி அப்ளாஸை அள்ளியிருக்காங்க. நம்ம ஊர்லயும்தான் சில முன்னாள் (!) நடிகைகள் கம் அரசியல்வாதிங்க இருக்காங்க. அதுக்காக அவங்க டான்ஸ்... சீச்சீ... சில விஷயங்கள்ல இப்படி கற்பனைக் குதிரைய கண்டமேனிக்கு ஓட விடாம குதிரையோட காலை ஒடைச்சு உக்கார வைச்சிறணும். அடுத்த மேட்டருக்குத் தாவுங்க!

"ஏல மக்கா, எந்திரில்ல, ஊருக்குள்ள கொள்ளைக்காரப் பயலுக புகுந்துட்டாங்க. தெருநாயெல்லாம் துரத்திக்குன்னு ஓடுது. ஏல புடி... வுடாத புடி... மச்சான் அரிவாள எடுத்துட்டு வா... குப்பா, சுப்பா, முனியா, பாண்டி, ஜானு, தொர... எல்லாரும் கையில கிடைக்கிறத எடுத்துக்குனு ஓடியாங்கோ!" நள்ளிரவுல ஊரே அந்த மூணு பேரை, நாய்களோடு சேர்ந்து நாயோட்டம் ஓடிய அவர்களை, நாய் மாதிரி துரத்திப் பிடிச்சி, நாயடி பேயடி அடிச்சி போலீஸ்கிட்ட ஒப்படைச்சிருக்காங்க. அப்புறம்தான் தெரிஞ்சுது, அவிங்க திருடங்க இல்ல. பக்கத்தூரு திருவிழாவைப் பாத்திட்டு வர்றப்போ, தெரு நாய்ங்க துரத்துதேன்னு ஓட ஆரம்பிக்க, அந்நேரம் பாத்து வெளியே வந்த உள்ளூர்க்காரன் ஒருத்தன் அதைத் தப்பா புரிஞ்சுக்க, இப்படி குண்டக்க மண்டக்கன்னு அந்த மூணு பேரோட நிலைமை வடிவேலு கணக்கா ஆயிடுச்சு. பல்லடம் பக்கம் ஆறுமுத்தாம்பாளையத்துலதான் இந்த 'மொத்தல்' சம்பவம் நடந்திருக்கு. நீதி : 'தமிழ்நாடு விழித்திருக்கிறது'.

விருதுநகருல ஒரு கிராமம். ஒரு கோயில் திருவிழா. ஒரு அடி அகலம், ஆறடி நீளமுள்ள 30 குழிகள். குழந்தைங்க, பெரியவங்க குழிக்குள்ள இறங்குறாங்க. அவங்க மேல மஞ்சத்துணி போட்டு மூடுறாங்க. அது மேல முள்செடிங்க! அப்புறம் பலகையப் போட்டு குழியை மூடிருதாங்க. பூசாரி சாமி சிலையோட அதுக மேல ஓடுறாரு. அப்புறம் ஒரு செம்மறி ஆடு 'பரலோக ராஜ்ஜியத்தை' அடையுது. குழியைத் திறக்காங்க. மஞ்சத் தண்ணியை குழியில உள்ளவங்க மேல ஊத்தி அவங்களை வெளியேத்துறாங்க! இது வேண்டுதலாம். அரசு இதுக்கு தடைபோட்டாலும், போலீஸ் கண்ணுல 'மண்ணைத்' தூவிட்டு, 'குழியை' அந்த மாவட்டம் ஃபுல்லா வெட்டிக்கிட்டுத்தான் இருக்காங்களாம். ஒருவேளை பூசாரியை போலீஸ் புடிக்கப் போனா, அவரு பதுங்க தனியா குழி வெட்டி வைச்சிருப்பாரோ! நீதி : 'தமிழ்நாட்டில் மூட வேண்டிய குழிகள் அதிகம்!'



# வடிவேலு மேட்டரு!

# ஸாரி பாலிவுட்!

ஆறடிக்கு ஒரு இஞ்ச் குறைவு. இருபதுக்கு ஒரு வயது குறைவு. ஆனால் புகழுக்குக் குறைவேயில்லை. தற்போது இந்தியாவின் டாப் மாடல்களில் ஒருவர். 2005ன் 'மிகச் சிறந்த மாடல்' என்ற இந்திய ஃபேஷன் உலகின் ஆஸ்கர் என போற்றப்படும் 'கிங் பிஷர்' நிறுவனத்தின் அவார்டை பெற்றுள்ளார். 'நீ நடந்தால் நடையழகு...' என இவரைப் பாடாத ஃபேஷன் டிசைனர்களே இல்லை எனலாம். இந்த தேவதையின் பெயர் தீபிகா படுகோனே. புகழ் பெற்ற பேட்மிட்டன் விளையாட்டு வீரரான பிரகாஷ் படுகோனேவின் செல்ல மகள்தான் இவர்.

டென்மார்க்கில் பிறந்து பெங்களூரில் வளர்ந்த பெண். பள்ளி நாட்கள் முடிந்ததும், துள்ளிக் குதித்து விட்டார் மாடலிங் உலகுக்குள்! தற்போது டிகிரி வளர்ந்து கொண்டிருக்கிறது கரஸ்-ல்! 'க்ளோஸ்-அப்'ல் பல் தேய்த்து சிரித்து, 'லிரில்' சோப்பில் ஜில்லென்று குளித்த இவர், தற்போது கூலாகக் குடித்துக் கொண்டிருக்கிறார் 'லிம்கா'வை, ஜாலி அம்பாஸிடராக!

"ப்ளாக் பேண்ட், ப்ளூ ஜீன்ஸ், வொய்ட் ஷர்ட் என்னோட ஃபேவரிட் காஸ்ட்யூம். விதவிதமான பெர்ஃப்யூம்ஸ் கலக்ஷனே வைச்சிருக்கேன். எனக்கு சிம்பிளா டிரெஸ் பண்ணத்தான் பிடிக்கும். மேக்-அப் கூடப் பிடிக்காது. ஷோ தவிர மத்த நேரங்களில் ஃபேஷன் டிரெண்ட்படி நான் டிரெஸ் பண்ணுறதே கிடையாது." சொல்வது சாட்சாத் தீபிகாவேதான்.

"என் தங்கைக்கு அப்பா மாதிரி ஸ்போர்ட்ஸ்ல தான் ஆர்வம். எனக்கு இந்த ஃபீல்ட் ரொம்பப் பிடிச்சிருந்தது. வந்துட்டேன். எங்க வீட்டுல யாருக்கும் ஃபேஷன் பத்தி இம்மியளவு கூட தெரியாது. ஆனா எனக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்காங்க. நானும் செலக்டிவா ஷோ பண்ணுறேன். கொஞ்சம் பாப்புலாரிட்டி வந்தப்புறம், பாலிவுட்ல பல பேர் என்னை நடிக்கக் கூப்பிட்டாங்க. எல்லாருக்கும் ஸாரி சொல்லிட்டேன். ஐ லவ் மாடலிங். இதுலதான் என்னோட திறமையை நிரூபிக்க விரும்புறேன். செல்லுலாய்ட் தேசத்துக்குள்ள நுழையற கனவு, எனக்கு ஒரு போதும் கிடையாது"

ஹூம், நாம கொடுத்து வைச்சது அவ்வளவுதான்!

- முகில்





ஒரு வழியாய் ஷாமும் வெற்றிக்கனியைப் பறித்து விட்டார். நாலாபுறமிருந்தும் வாழ்த்துகள் குவியும் இவ்வேளையில் உள்ளம் கேட்குமல்லவா இவரது பேட்டியை!

**'உள்ளம் கேட்குமே'வின் வருவது போல் காதல் தோல்வி உண்டா?**

ம்... அப்போ நான் பெங்களூர்ல +2 படிச்சிட்டிருந்த போது என் ஜூனியரை விரும்பினேன். என் விருப்பத்தை அந்தப் பொண்ணுகிட்டயும் தெரிவிச்சேன். ஆனா அவ மறுத்துட்டா. அதுவுமில்லாம என் ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள்ல நான்தான் பார்க்க சுமாரா இருப்பேன். (அட!) அப்புறம் டிகிரி படிக்கும்போது மறுபடியும் லவ் வந்தது. அந்தப் பொண்ணுதான் இப்போ என் மனைவி.

**முதன்முதலா உங்க படம் ஹிட்டானது பற்றி?**

காதலிச்ச பொண்ணை கல்யாணம் பண்ற சமயத்துல 'என்னடா இன்னும் சினிமாவுல ஜெயிக்கவேயில்லை. அதுக்குள்ள கல்யாணமெல்லாம் தேவையா?'ன்னு மனசு உறுத்துச்சு. ஆனா என் மனைவி, "ஷாம், கவலைப்படாதே. 'லேசா லேசா', 'இயற்கை', 'உள்ளம் கேட்குமே' இந்த மூணுல ஏதாவதொண்ணு நிச்சயமா ஜெயிக்கும் பாரேன்"னு சமாதானம் சொன்னாங்க. அது பலிச்சுருச்சு!

**"விஜயகாந்துக்குதான் என் வோட்டு"னு சமீபத்துல அறிவிச்சிருக்கீங்களே?**

ஐய்யோ... இல்லைங்க. ஒரு விழாவுல "விஜயகாந்த் சார் ஜெயிக்கணும்னு மக்கள் நினைச்சா, அப்புறம் அவங்க தீர்ப்பை யாரால மாத்த முடியும்"னுதான் சொன்னேன். இதைத்தான் அப்படி எழுதிட்டாங்க.

# சிநேகாவோடு 'டூ'வா?

**ஏன் சில காட்சிகள்ல கண்ணை மூடியபடி நடிக்கிறீங்க?**

படப்பிடிப்புல ரொம்ப வெளிச்சமான விளக்குகள் போட்டா எனக்குக் கண் கூசும். அதனால நேர்ந்த தவறு அது. இனி கவனமா பார்த்துக்கறேன்.

**சிநேகாவோடு இன்னமும் 'டூ'வா?**

அவங்க உதட்டைக் கடிச்சதா வந்த மேட்டர்பத்திதானேங்க? அப்படியெல்லாம் எதுவும் நடக்கலை. எல்லா இடைவெளிகளும் குறைஞ்சு, நானும் சிநேகாவும் மறுபடியும் ஃப்ரெண்ட்ஸாயிட்டோம்.

**சினிமா கற்றுக் கொடுத்தது?**

ஜெயிச்சா மதிப்பாங்க; இல்லாட்டி மிதிப்பாங்க.

- சநகன்

இளமை கல்கி

● காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையை காங்கிரஸ் கட்சிக்குள் கரைத்து... ஸாரி... சேர்த்துவிட்ட பிறகும் கூட, தமது தந்தையின் ஆதரவாளர்களுடன் தொடர்ந்து நெருக்கம் காட்டி வருகிறார் ப. சிதம்பரத்தின் வாரிசு கார்த்தி சிதம்பரம்... அதுவும் எப்படித் தெரியுமா...? கட்சிக்காரர்களுக்கு தி.மு.க. பாணியில் கைப்படக் கடிதம் எழுதுவது, திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் நேரடியாகக் கலந்து கொள்வது என்று ரொம்பவே அன்னியோன்யமாக இருக்கிறார் கார்த்தி. இதில் மெய் மறந்துதான் போகின்ற இடத்தில் எல்லாம் இவருக்கு கட்-அவுட், பேனர் என்று பிரம்மாண்டமாக அசத்துகிறார்களோ!



* கார்த்தி சிதம்பரம்

● கலைஞர் குடும்பத்தில் இருந்து இன்னொரு வாரிசு அரசியலுக்கு வரவிருக்கிறார். அடுத்தடுத்து நடைபெற இருக்கும் மாநாடுகளில் அவர் முன் வரிசையில் அமரவைக்கப்படுவார். வரும் தேர்தலில் அவர் களமிறக்கப்படவும் வாய்ப்புண்டு என்கிறார்கள் உடன்பிறப்புகள்.

● வைகோவின் மகன் துரை. வையாபுரிக்கு கட்சி நிர்வாகத்தில் ஒரு முக்கியப் பொறுப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று வைகோவிடம் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறார்கள் மேல்மட்டத்தலைவர்கள். இதுநாள் வரை இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்காத வைகோ, காலச் சூழ்நிலை கருதி (வைகோ தற்போது எந்தப் பதவியிலும் இல்லை) விரைவில் தலையசைப்பார் என்ற நம்பிக்கை தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக பெருமிதப்படுகின்றனர் தொண்டர்கள்.

* துரை வையாபுரி



● சமீபகாலம் வரை ஓரிரு பேனர்களில் மட்டும் காணப்பட்டு வந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மகன் திருமகன் ஈ.வெ.ரா.வின் புகைப்படம், தற்போது பல இடங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. கேட்டால் மர்மப் புன்னகை பூக்கிறார் தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் நிர்வாகி ஒருவர். ஆனால் திருமகன் ஈ.வெ.ரா.வின் பால் வடியும் முகத்தைப் பார்த்தால் தந்தையைப் போல தனயனும் அதிரடி குண்டுகள் வீசுவார் என்று தோன்றவில்லை.

- முராரி

படம்: ராஜன்

# பொறுப்புக்கு வரும் வைகோ வாரிசு!

திரைப்பாடலாசிரியர் பா. விஜய்யின் பன்னிரண்டு புத்தகங்கள் ஒரே சமயத்தில் அண்மையில் வெளியிடப்பட்டன. பதிப்பித்தது குமரன் பதிப்பகம்; வெளியிட்டது கலைஞர். எண்ணற்ற திரையுலகப் பிரமுகர்கள் கலந்து கொண்ட அந்த கவிதைத் திருவிழாவிலிருந்து சில துளிகள்.

● வாலி, கமலஹாசன், பாக்யராஜ், பார்த்திபன், விவேக் என்று கலகலப்பு நாயகர்கள் விழாவில் இடம் பெற்றதால் காமராஜர் அரங்கம் விழா முடியும் வரை கலகலப்பாகவே இருந்தது.

# கலைஞர் வைத்த செல்லக்குட்டு!

● லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக உரையாற்றிய வாலி, வழக்கம் போல நீண்ட நெடிய கவிதை மூலம் கலைஞரை 'ஜில்'லாக்கி விட்டு, பா. விஜய்யின் தொகுப்புகள் பற்றி சிலாகித்துப் பேசினார். அதேசமயம் பா. விஜய் செய்த சின்னஞ்சிறு தவறுகளை பக்குவமாகச் சுட்டிக்காட்டி, அனைவரது கரகோஷத்தையும் அள்ளிக் கொண்டார்.



* நூல்கள் வெளியீட்டின்போது...

● மேடையில் பேசிய பார்த்திபன், நடிகர் ஸ்ரீகாந்தை "சிநேகத்துக்குரிய ஸ்ரீகாந்த்" என்று தனக்கேயுரிய குறும்புடன் விளித்த போது, கூட்டம் உண்மையிலேயே ரசித்துச் சிரித்தது. ஆனால் ஸ்ரீகாந்தின் முகம்தான் வெட்கத்தால் சிவந்து போனது.

● பா. விஜய்யின் தொகுப்பிலிருந்து ஒரு காதல் காட்சியை கலைஞர் அழகாக வர்ணித்தபோதுதான் அனைவருக்கும் புரிந்தது. "இந்த எண்பத்திரண்டுக்குள் எத்தனை இருபத்தியெட்டுகள்'' என்று விவேக் கலைஞரைப் பற்றிக் கூறியது எவ்வளவு உண்மையென்று.

● அரசியல்வாதிகளை தமது வரிகள் மூலம் சீண்டியிருந்த பா. விஜய்க்கு, "எல்லா அரசியல்வாதிகளும் கெட்டவர்களும் அல்ல... அதற்காக வெளியில் இருப்பவர்கள் எல்லோரும் யோக்கியர்களும் அல்ல" என்று செல்லமாகக் குட்டு வைத்தார் கலைஞர்.

● பலரும் எதிர்பார்த்தது போல கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்துச் செய்தி மட்டுமே அனுப்பியிருந்தார்.

● இளையராஜாவுக்கு 'இசைஞானி', கமலஹாசனுக்கு 'கலைஞானி', வைரமுத்துவுக்கு 'கவிப் பேரரசு' வரிசையில் பா. விஜய்க்கு 'வித்தகக் கவிஞர்' என்ற பட்டத்தைச் சூட்டுவதாக கலைஞர் கூறியபோது, ஒருகணம் சிலிர்த்துப் போன பா. விஜய், சட்டென்று ஓடிவந்து கலைஞரின் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்.

● "எப்படியோ கலைஞருக்கு நெருக்கமான 'V' வரிசைக் கவிஞர்களான வாலி, வைரமுத்து பட்டியலில் விஜய்யும் இணைந்துவிட்டார்'' என்று பேசிக் கொண்டனர் விழாவுக்கு வந்திருந்தவர்கள்.

- முத்து

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

# குறையொன்றுமில்லை

"அப்பா! எங்கேயடா இருக்கிறான் நாராயணன் என்று கேட்கிறாயே..? அவன் எங்கேயும் இருக்கிறான்; இங்கேயும் இருக்கிறான். அதிலேயும் இருக்கிறான்; இதிலேயும் இருக்கிறான்'' என்கிறான் பிரஹலாதன்.

"மாமேரு குன்றிலும் உளன்
சதகூறிட்ட கோனிலும் உளன்
சொன்ன சொல்லிலும் உளன்
இத்தன்மை விரைவில் காணுதி"

என்றான் பிரஹலாதன்.

இந்த ஸ்வாதி நக்ஷத்திரமானது பகவான் நரசிம்ஹனுடைய அவதார நக்ஷத்திரம். அவன் அன்றுதான் தூணைப் பிளந்து பிரத்யக்ஷமானான் என்றாலும், அந்தக் குழந்தை பிரஹலாதன் அதற்கு முன்பாகவே உணர்ந்து சொல்லிவிட்டான்:

"எங்கும் உளன் கண்ணன்
என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண் புடைப்ப,
அங்கு அப்பொழுதே அவன்
வீயத் தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தே."

என்றார் நம்மாழ்வார்.

சர்வ வியாபி பகவான். எங்குமிருக்கிறான் என்று குழந்தை சொல்ல, ஸ்தம்பத்தை ஹிரண்ய கசிபு தட்டியபோது, அதிலிருந்து வெளிப்பட்டான் பரமாத்மா. நரம் கலந்த சிங்கமதாகக் காட்சியளித்தான். சர்வாந்தர்யாமியாக பகவான் இருக்கிறான். இதைத்தான் புருஷ சப்தமானது நமக்குக் காட்டுகிறது.

புரி சயனாது புருஷ:
பஹு தானாது புருஷ:

- வாரி வாரி வழங்குகிறான் பகவான் என்பதனாலே அவனுக்குப் புருஷன் என்று பெயர். அடிபணிந்தவர்களுக்கெல்லாம் அவர்கள் அபேக்ஷிப்பதற்கு மேலே கொடுக்கக்கூடியவன், வாரி வழங்கும் வள்ளல் அவன்.

இப்படி வள்ளன்மை மிக்கவனானதனாலே அவனுக்குப் புருஷன் என்று பெயர். யாசிப்பதைக் காட்டிலும் அதிகமாய்க் கொடுக்கக் கூடியவன். வேண்டியது - வேண்டாதது அவனுக்கு நன்றாகவே தெரியும்.

ஒருத்தர் வந்து யாசிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், நமக்கு உபயோகப்படாத ஒன்றை எடுத்து அவரிடத்தில் கொடுக்கக் கூடாது! நாம் கொடுக்கிற பொருள்,





அதைப் பெறுகிறவருக்கு உபயோகமாக இருக்க வேண்டும். இருந்தால்தான் கொடுப்பவருக்குப் பலன்; இவருக்கு நித்ய காரியங்கள் நடக்கும். அப்படிப்பட்ட வஸ்துவை எடுத்துக் கொடுக்க நல்ல மனது இருக்க வேண்டும்.

பகவான் பாருங்கள், தனது சக்ராயுதத்தையே அம்பரீஷனுக்குக் கொடுத்தான். சுதர்ஷனத்தை எப்போதும் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரமாத்மா, அதையே கொடுத்தான் என்றால், உயர்ந்தவர்கள் தங்களிடமுள்ள உயர்ந்த வஸ்துக்களைக் கொடுப்பார்கள் என்பதைக் காட்டினான். பகவான் அப்படிப்பட்ட உயர்ந்த வஸ்துக்களை வாரி வாரி வழங்கக்கூடியவன். யாசிப்பவர்களுக்கெல்லாம் கொடுக்கக் கூடியவன்.

புரு சந்தனோதி புருஷ: - புருஷ என்றால் 'பஹு'. 'நிறைய'. 'பஹு தானது' என்று வாரிக் கொடுப்

பவன். நிறையத் தருபவன். பூரி காருண்ய வேகாது சாக்ஷ்யாரூப:- பகவானிடத்திலே எல்லாமே 'பூரி' - அதாவது அபரிமிதமாய் விசேஷமாய் அமைந்திருக்கிறது.

தனம், சந்தானம், திரவியம் நிறையக் கொடுக்கக் கூடியவன்; காருண்யமும் 'பூரி' அவனிடத்திலே.

'பூரி தக்ஷிணை' என்கிறார்கள் பாருங்கள்... விசேஷமாக நிறையக் கொடுத்தால், அதை பூரி தக்ஷிணை என்பார்கள். அந்த மாதிரி வாரி வாரிக் கொடுக்கும்படியானவன் பரமாத்மா.

அது மாத்திரமில்லை... புராணத்துவாது புருஷ: எப்போதிலிருந்து அவன் இருக்கிறான் என்று யாராவது கண்டுபிடிக்க முடியுமா...?

ஆகையினால், அவன் ரொம்பப் பழைமையானவன். 'புராண புருஷன்' என்று அவனைத்தான் சொல்ல முடியும்.

'புரா - அபி - நவம்' அவன். அதாவது, பழைமையானவன்தான்... ஆனாலும் 'அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராவமுதமே' என்று க்ஷணம்தோறும் புதுமையானவன். இன்றைக்குச் சேவித்தாலும் நாளைக்குப் புதுமையாகவே - ஆராவமுதனாகவே - காட்சி அளிக்கிறான். அவன் பழைமையானவன் என்று யாருக்காவது தோன்றுகிறதா? அவனுடைய சரித்திரங்களே அப்படித்தானே...! எத்தனை தடவை கேட்டாலும், அவற்றை மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொண்டேயிருக்கத் தோன்றும்... அப்படி ஒரு புத்தியை நமக்கு அதிலே உண்டு பண்ணி விடுகிறதே!

ஆனால் மற்ற விஷயங்கள் அப்படி அல்ல; பகவத் விஷயம் ஒன்றுதான் அப்படி பழைமையாக, புராணமாய் இருந்தாலும், படிக்கப் படிக்க நவ நவமாய் - புதிய புதியதாய் விஷயங்கள் நமக்குக் கிடைக்கச் செய்கிறது. 'புரா - அபி - நவம்!' என்பது இதைத்தான்.

பூர்ணத்துவாது புருஷ:- பூரணன் அவன். அந்தப் பூர்ணத்துவம் என்பது எப்படிப்பட்டது...? ஒரு குத்துவிளக்கு இருக்கிறது. அதை இங்கே ஏற்றி வைக்கிறோம். அந்தக் குத்துவிளக்கிலிருந்து ஆயிரத்தெட்டு குத்துவிளக்குகளை ஏற்றிக்கொண்டே போகிறார்கள். அப்படிப் பண்ணினாலும், பிரதானமாக முதலில் பிரதிஷ்டாபனம் பண்ணப்பட்ட அந்தக் குத்துவிளக்கிலேயிருந்து எல்லோரும் ஏற்றிக் கொண்டு போனாலும், அந்தப் பிரதான விளக்குக்கு ஏதாவது குறையோ? இத்தனை விளக்குகளை ஏற்றிவிட்டு, அந்த விளக்கு பாட்டுக்கு எரிந்துகொண்டிருக்கிறது. அது போன்று, எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொடுக்கும்படியான எம்பெருமான், தான் குறைவில்லாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். ஆகையினாலே அவன் 'பூர்ணத்துவாது' -முழுமையானவன்.

''மருந்து சாப்பிட்டப்புறம் உங்க மூட்டு வலி இறங்கிருக்குமே?''

''ஆமா டாக்டர், இப்ப கணுக்கால் வலிதான் இருக்கு!''

- அம்பை தேவா

பூர்ணத்துவாது புருஷ: புராணத்வாது புருஷ: பஹு~தானாது புருஷ: புரிசயனாது புருஷ:... அவ்யய புருஷ: - புருஷ: என்ற சப்தத்துக்கு, இன்னும் இதுபோல் நிறையச் சொல்லலாம்.

அடுத்த திருநாமம் சாக்ஷி. உள்ளுக்குள்ளே அந்தர்யாமியாக இருந்துகொண்டு, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் பகவான்.

நமக்குள்ளே அவன் இருப்பதனாலே எல்லா கர்மாவையும் சர்வ சாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஆகையினாலே ஒருத்தர் ஏகாந்தமாக இருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது.

"சுவாமி என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்?" என்று ஒருத்தரைப் பற்றிக் கேட்கிறோம்.

"உள்ளே ஏகாந்தமா உட்கார்ந்திருக்கார்" என்று சொல்வார்கள். ஆனால் ஏகாந்தம் என்பது சாஸ்திர ரீதியாகப் பார்த்தால் கிடையாது. ஏனென்றால் உள்ளே தனியே ஒருத்தர் உட்கார்ந்திருந்தாலும், பதினாலு பேர் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

யார் அந்தப் பதினாலு பேர் என்று கேட்டால்...

அந்தராத்மா - பரமாத்மா பார்த்துக் கொண்டிருக்கிறான்; அவனை ஏமாற்ற முடியாது. நாம் பண்ணுகிற ஒவ்வொரு கர்மாவையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன். அதேமாதிரி எட்டுத் திக்குகளும்



பார்த்துக் கொண்டிருக்கின்றன.

திக்கு பார்க்குமா என்றால், அந்தத் திக்கிலே இருக்கிற எட்டு தேவதைகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

சந்தியாவந்தனத்திலே நாம் தினமும் அந்தந்த திக்குக்கு வந்தனம் பண்ணுகிறோம். அந்தந்த திக்கை நோக்கித் திரும்பி நமஸ்காரம் பண்ணுகிறோம். திக்குக்கு நமஸ்காரமா என்றால், திக்பாலகர்களான தேவதைகள் நின்று கொண்டிருக்கிறார்கள்–அவர்களுக்கு இந்த வந்தனம் போய்ச் சேர்கிறது. அவர்கள்தானே நாம் பண்ணுகிற கர்மாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோமாதாவாகிய பசு, பூமி, அந்தரிக்ஷம் இத்தனையும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இத்தனையையும் ஏமாற்றிவிட்டு நம்மால் ஒன்றும் பண்ண முடியாது.

இதிலே பிரதான சாக்ஷியாக இருக்கக் கூடியவன் பரமாத்மா. சாக்ஷி பூதனாகப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான்.

*"சபரி மோக்ஷ சாக்ஷி பூத:"*

என்கிறார் சுவாமி தேசிகன்.

பகவானைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள் சபரி:

"ஹே ராமா! உன் திவ்ய கடாக்ஷம் அடியவள் மேல் பட்டது... உத்தமமான லோகத்துக்கு நான் போய்க் கொண்டேயிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டாள்!

பகவான் இதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறான். சாக்ஷி பூதனாக நிற்கிறான்.

பகவான் வாயைத் திறந்து, "சபரிக்கு மோக்ஷம் கொடுத்தேன்" என்று சொல்லவே இல்லை; அவளே, 'போய்க் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டாள். பரமாத்மா வெறுமே பார்த்துக் கொண்டு நிற்கிறான். சாக்ஷியாக நிற்கிறான்!

ஏனென்றால், மோக்ஷத்துக்கு உண்டான காரியத்தை அவள் பண்ணியிருக்கிறாள். மதங்க மஹரிஷியினுடைய சிஷ்யர்களுக்கெல்லாம் கைங்கர்யம் பண்ணியிருக்கிறாள். அந்த ஆசிரமத்திலே இந்தக் கைங்கர்யத்தைப் பண்ணியதாலே, ஆசார்ய கடாக்ஷம் பெற்றவள் அவள். பகவானுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பகவானைப் பழத்தினால் உபசரித்தாள். அவனுடைய அனுக்கிரஹத்துக்குப் பூரணமான பாத்திரமானாள்.

ஆசார்ய அனுக்கிரஹத்தோடு பகவத் அனுக்கிரஹமும் அவளுக்குக் கிடைத்ததனாலே, அவள் கிருத கிருத்யை. - செய்ய வேண்டியதைச் செய்து முடித்தாள். அதனால் அவளுடைய மோக்ஷத்துக்கு பகவான் வெறுமே சாட்சியாகத்தான் இருந்தான். ஏனென்றால், சபரியிடத்திலே கிருத - கிருத்யத்வம் இருந்ததால் - மோக்ஷத்தை அடைவதற்கு வேண்டியதை இவள் ஏற்கெனவே பண்ணியிருந்ததால், அவன் வாக்கினால் சொல்ல வேண்டியதேயில்லை என்று ஆகியது. அப்படி அவன் சொல்லாவிட்டாலும் தானாக அது கிடைக்கும். வெறும் சாக்ஷி பூதனாக இருந்தே அதனை நடத்திக் காட்டிவிடுவான் பகவான்.

இப்படி ஒவ்வொரு கர்மாவுக்கும் பகவான் சாக்ஷி - அவனுக்குத் தெரியாமல் எந்தக் காரியத்தையும் நம்மால் பண்ண முடியாது.

**ப**கவான் சாக்ஷிபூதன். சூரியன் இருக்கிறானே, அவன் பிரத்யக்ஷ சாக்ஷி.

எந்த கர்மாவுக்கும் சாக்ஷி சூரியன். சூரியன் இருக்கிறபோதே எல்லா கர்மாவும் பண்ண வேண்டும் என்று சாஸ்திரமானது விதித்திருக்கிறது. அப்படிப் பண்ணினால் தான் அந்த காரியத்துக்கு ஏற்றம். அர்த்த ராத்திரியிலே கர்மா பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. அப்படி உயர்ந்த ரீதியிலே சூரியன் பிரத்யக்ஷ சாக்ஷியாக இருக்கிறான்.

சூர்ய மண்டலத்திலே இருக்கக்கூடிய எம் பெருமானோ, எல்லாவற்றுக்கும் உள்ளுக்குள்ளே அந்தராத்மாவாக இருந்து சாக்ஷியாக இருக்கிறான்.

(வளரும்)

அடிப்படையில் நான் ஓவியன் என்பதால் எப்போது கல்கியைத் திறந்தாலும் ஓவியங்களில் மூழ்கி விடுவேன். ஆபாசமில்லாத, தரமான குடும்ப சீரியல் போன்றது கல்கி. 'கல்கி' இதழைப் பற்றி கருத்து கூறுவதன் மூலம் நான் பிறந்த பயனை அடைந்து விட்டேன்.

- 'போஸ்' வெங்கட்

# குடும்ப சீரியல்!




படம் : ஸ்ரீஹரி

# திடீர் பரிசுப் போட்டி-2

மேற்கண்ட 'மஜா' ஸ்டில்லைப் பார்த்தாச்சா? அப்படி என்னத்தைப் பார்த்து அசந்து போயிருக்கிறார்கள் விக்ரம் - அசின்? சுவையாக ஊகித்து அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க!

ஜோரான கற்பனைக்கு ரூ 200 பரிசு! ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: **18.7.2005**




ஆடி
தள்ளுபடி 10-50%
ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 16 வரை
ஆடி வந்தது அதிர்ஷ்டம் தந்தது!
தி சென்னை சில்க்ஸ்™
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்
23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17. ✆: 24310888
558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555
74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888, 5338888
85-A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270
10, W.B. ரோடு, திருச்சி-2. ✆:2708888
Shop online at www.thechennaisilks.com
5% Cash Back Offer
ICICI Bank Credit Cards
ISO 9001-2000